
# புதிய ஜனநாயகம்

1-15 ஜனவரி '90
5-4
விலை ரூ.2

வானொலி-தொலைக்காட்சி தன்னாட்சி



# மூளைச் சலவை

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# ஆந்திரா பணயக் கைதிகள் விவகாரம்:

ஆந்திராவில் கடத்தப்பட்ட இரண்டு எம்.எல்.ஏ.க்களையும், இரண்டு மண்டல பரிச்சத் (பஞ்சாயத்து ஒன்றியம்) தலைவர்களையும் இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)யின் மக்கள் யுத்தக் குழுவினர் விடுவித்துவிட்டனர். அவர்களுடைய கோரிக்கையை பூரணமாக ஏற்று நிறைவேற்றாத போதே பணயக் கைதிகளை விடுவித்துவிட்டனர். இது ஏதோ மக்கள் யுத்தக் குழுவினரின் பலவீனம் என்று மத்திய, மாநில அரசுகள், குறிப்பாக பாசிச ராஜீவ் கும்பலும் அதன் புது விசுவாசியான சென்னா ரெட்டியும் கருதுவார்களேயானால் ஏமாந்து தான் போவார்கள். இது போல இன்னும் பல நிர்ப்பந்தங்கள் - விளைவுகளை அவர்கள் சந்திக்க வேண்டிவரும்.

கடந்த டிசம்பர் 23ந் தேதி திசபள்ளி தெலுங்கு தேச எம்.எல்.ஏ. வெங்கடேஸ்வர ராவையும் சர்பள்ளி மண்டல மக்கள் சபைத் துணைத் தலைவர் ராகவரெட்டியையும் மக்கள் யுத்தக் குழுவினர் கடத்திக் கொண்டு போயினர். எம்.எல்.ஏ.வைப் பணயக் கைதியாக வைத்துக் கொண்டு, வாரங்கல் மத்திய சிறையிலுள்ள தமது ஏழு தோழர்களை விடுவிக்க வேண்டும் என்று ராகவரெட்டி மூலம் கடிதம் அனுப்பிக் கோரினர்.

தெலுங்குதேசம், போலிக்கம்யூனிஸ்டு கட்சிகள், பாரதீய ஜனதா ஆகிய எதிர்க்கட்சி கூட்டணியோ எம்.எல்.ஏ.வை விடுவிக்கும்படி நயந்து கூறின. அதேசமயம் மனிதாபிமானத்தைத் தூண்டி மக்கள் யுத்தக் குழுவை நிர்ப்பந்திக்கும் முயற்சியில் இறங்கியது. எம்.எல்.ஏ.வின் மனைவியை உண்ணாவிரதம் இருக்க வைத்துவிட்டு, நிஜாமாபாத் மாவட்டம் முழுவதும் கடையடைப்பு நடத்தினர். மத்திய அரசு தலையிடுமாறும், ம.யு. குழுவின் தோழர்களை விடுவித்துவிடும் படியும் மாநில அரசிடம் கோரினர்.

அதன் பிறகும் மாநில அரசு ம.யு.வின் கோரிக்கைகளை ஏற்க மறுத்துவிட்டது. ஒருவர், ஜாமீனில் இருப்பதாகவும், இருவரை ஜாமீனில் விடுவதாகவும், இருவர் சிறைத் தண்டனை அனுபவிப்பதால் அவர்களை விடுவிக்கும் அதிகாரம் தமக்கு இல்லை என்றும் சமாதானம் கூறியது. இதற்கிடையே பஞ்சாப், காஷ்மீர், ஆந்திரா கடத்தல்களைக் காட்டி பயங்கரவாதம் தலையெடுத்துவிட்டதாக வி.பி.சிங் ஆட்சிக்கு எதிராக குற்றஞ்சாட்டி அரசியல் ஆதாயம் தேடமுயன்றது பாசிச ராஜீவ் கும்பல்.

இதற்கிடையே ம.யு. குழு விதித்திருந்த காலக்கெடு முடிந்தது. பிறகு மேடக் மாவட்டம் ராமாயம்பேட்டை காங்கிரசு எம்.எல்.ஏ. விட்டல் ரெட்டியையும் மற்றும் இரண்டு மண்டல மக்கள் அவைத் தலைவர்களையும் கடத்திக் கொண்டு போன ம.யு. குழுவினர் தமது சகதோழர்களை விடுவிக்கும்படி கோரினர். புருஷோத்தம் ரெட்டி என்ற ஒரு தோழரை மட்டும் சொந்த ஜாமீனில் அரசு விடுவித்தது. தெலுங்கு தேசம் எம்.எல்.ஏ.வை ம.யு.வினர் ஒரு கடிதத்துடன் விடுவித்தனர். "தமது கோரிக்கைகளை ஏற்க மறுத்து அரசு கூறுபவை நொண்டிக் காரணங்கள் தாம்! விஜயவாடா காங்கிரசு எம்.எல்.ஏ. கொலையை ஒட்டி காங்கிரசின் 'காப்பு' சாதி வெறியினர் நடத்திய கலவரத்தில் கைதான - கொலை, கொள்ளை,




[redacted]

தீவைப்பு குற்றவாளிகள் 2,500 பேரை சமீபத்தில் திடீரென்று விடுவிக்கவில்லையா?" என்று ம.யு. குழு கேட்டது.

காங்கிரசுக் கட்சிக்குள்ளும், பொதுமக்களிடமிருந்தும் வந்த நிர்ப்பந்தம் காரணமாக பரசுராம் என்ற மற்றொரு தோழரை விடுவிக்க ஆந்திரா அரசு ஒப்புக் கொண்டது. ம.யு. குழுவினரே எஞ்சியிருந்த மூன்று பணயக் கைதிகளையும் விடுதலை செய்தனர். ம.யு. குழுவினர் தமது கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்தியதோடு மீண்டும் அரசை எச்சரித்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் பாரபட்சமாகவும், பிடிவாதமாகவும் நடந்து கொண்டதாக சென்னா ரெட்டி மீது ராமராவ் புகார் கூறுகிறார். ஆனால் ராமாராவின் ஏழாண்டு கால ஆட்சியின் கொடிய அடக்குமுறை தான் நக்சலைட்டுப் பிரச்சினை வளரக் காரணம் என்கிறார் சென்னா ரெட்டி. நக்சலைட்டுகள் தேசபக்தர்கள், சகோதரர்கள் என்று கூறிக் கொண்டே அவர்களைக் குண்டு வீசிக் கொல்வதாக ராமராவ் மிரட்டினார், என்கிறார். போலீசுடன் மோதல் என்கிற பெயரில் நக்சலைட்டுகளைக் கொல்வதை நிறுத்துவதாகவும், பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாகவும் கூறிய சென்னாரெட்டி நக்சலைட்டு கைதிகளுக்கு, "பொது மன்னிப்பு வழங்க முடியாது" என்று கூறிவிட்டார்.

தெலுங்கு தேச ஆட்சியானாலும் சரி; காங்கிரசு ஆட்சி ஆனாலும் சரி, புரட்சியாளர்கள் மீது ஒரே மாதிரியான கொள்கையைத்தான் பின்பற்றுகின்றன. ● பேச்சுவார்த்தை என்ற பெயரில் ஆசை வார்த்தை காட்டி இலட்சியத்தையும் ஆயுதங்களையும் துறந்து சரணடையும் துரோகிகளுக்கு ஏராளமான நிதியும், தொழிலும் கொடுக்கின்றனர்.

அதே சமயம் புரட்சியாளர்களைப் பயங்கரவாதிகள், மனிதாபிமான மற்றவர்கள் என்று அவதூறுப் பொய்ப் பிரச்சாரம் செய்கின்றனர். போலீசுக் காரன்களையே விட்டு நாடகங்கள் போடுகின்றனர். இம்மாதிரியான 'ஆள் கடத்தல்' சம்பவங்களை அப்பொய்ப் பிரச்சாரத்திற்கு ஆதாரமாகக் காட்டுகின்றனர். இது சட்டபூர்வ, ஜனநாயக வழிகளுக்குப் புறம்பானது என்று கூறுகின்றனர். ம.யு. குழுவினரின் வேறு சில தீவிரவாத வழிமுறைகளை மற்றபிற புரட்சிகரக் குழுக்கள் கூட ஏற்பதில்லை. ஆனால் பணயக் கைதிகளைப் பிடித்து வைக்கும் நிலைக்கு என்ன அடிப்படை? அதன் பிறகு அவர்களுடைய கோரிக்கை அநியாயமானதா?

★ 400க்கும் மேற்பட்ட போலீசு முகாம்களை கிராமங்களில் நிறுவி, நூற்றுக்கணக்கான இளைஞர்களையும், புரட்சியாளர்களையும் நிராயுதபாணிகளாகவே பிடித்துப் போய் சுட்டோ, சித்திரவதை செய்தோ கொன்று வீசுகின்றனர்; அல்லது தாமே எரித்து விடுகின்றனர். பிடிபட்ட சகதோழர்களுக்கு என்ன நேருமோ என்ற அக்கரையோடு பணயக் கைதிகளைப் பிடித்துப் போகும்படி புரட்சியாளர்கள் நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். இப்படித்தான் ஆறு உயர் அதிகாரிகளை 'கடத்தினர்'. போலீசு பிடித்துப் போனவர்களை கோர்ட்டில் ஆஜர் படுத்தவே, அவர்களுடைய 'கதி'யை அறியவே இப்படிச் செய்யவேண்டி இருக்கிறது.

★ 500-க்கும் மேற்பட்ட புரட்சியாளர்கள் கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (TADA) கீழ் பல ஆண்டுகள் விசாரனையின்றி சிறையிலடைத்து சித்திரவதை செய்யப்படுகின்றனர்

★ 'இந்த விசாரனைக் கைதிகள்' - தொழில் முறைக் கிரிமினல் குற்றவாளிகள் அல்ல. பணயக் கைதிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு பிணைத் தொகை கேட்டு நிர்ப்பந்திக்கவும் இல்லை. 'விடுதலை செய் அல்லது சட்டப்படியான நடவடிக்கை எடு' என்று கோரவே இம்மாதிரியான செயல்களில் ஈடுபட வேண்டியுள்ளது. நடிகர் சுமன், 'ஆட்டோ' சங்கர் போன்ற கொடிய சமூக விரோதிகளைக் கூட சட்டப்படி நடத்தும் போது, 9 கொலைகள் செய்த ஜெயபிரகாசைக் கூட மனிதாபிமானப்படி விடுவிக்கும் போது, சீக்கியத் தீவிரவாதிகளுடன் பேரம் பேசுவதற்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் உள்ளவர்களை விடுவிக்கும் போது, மக்களுக்காகப் போராடும் புரட்சியாளர்களை ஏன் விடுவிக்கக் கூடாது?

ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு சரணடைந்து பேச்சுவார்த்தை நடத்தும்படி மாநில அரசுகள் கோருகின்றன. போராடும் மக்களை அடக்கி ஒடுக்கவும் சுரண்டவும் ஏற்கனவே ஏகபோகமாக ஆயுதமேந்தியுள்ள அரசப் படைகள், அவை ஆயுதங்களைக் கீழே போடுமா? இவ்வளவு ஆண்டு ஆட்சிக்கும் பிறகு ஆந்திரா ஆதிவாசி மக்களின் நிலைமை பற்றி இவர்கள் நீலிக் கண்ணீர் வடிக்கிறார்களே, பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் பற்றி அலசுகிறார்களே, அது ஏன்? புரட்சியாளர்களின் ஆயுத பலம் தான் அவர்களை நிர்ப்பந்திக்கிறது. அதை அவர்கள் கீழே போடுவார்களா? மாட்டார்கள். வலது தோள் வலித்தால் இடது தோளுக்குத் துப்பாக்கியை மாற்றுவார்கள்! □

படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

4

1-15 ஜனவரி '90

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்



எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015


## புதிய பத்தாண்டில் எதிர்கொள்ளும் கடமைகள்

புத்தாண்டு, புதிய பத்தாண்டு பிறக்கிறது. மத, மூட நம்பிக்கைகளின் அடிப்படையில் தமது நெருக்கடிகள், பிரச்சினைகளை மறந்து இதை மகிழ்ச்சிக்குரியதாகவும் எதிர்கால நம்பிக்கைக்குரியதாகவும் ஏகாதிபத்திய உலகம் கொண்டாடுகிறது. யதார்த்தமாகவே அதற்குச் சாதகமான நிலைமைகள் தற்காலிகமாகவேனும் நிலவுகின்றன. புரட்சிகர மக்களது கடமையோ தேசிய, சர்வதேசிய நிலைமைகளையும் அனுபவங்களையும் பகுத்தாய்ந்து தமது பணிகளை வகுத்துக் கொண்டு உறுதியாக அடியெடுத்து வைப்பதாகும். புரட்சிகர சக்திகளுக்குச் சாதகமான நிலைமைகள் இல்லை; எனினும் இதுவும் தற்காலிகமானதே!

கடந்த பத்தாண்டுகளில் உலக அரங்கிலும் நமது நாட்டிலும் குறிப்பிடத்தக்க பல மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. உலக மக்களின் நம்பிக்கைச் சின்னமாக விளங்கிய சோசலிச சீனத்தில் கட்சி மற்றும் அரசுத் தலைமையைக் கைப்பற்றி தெங்சியாவோ பிங் கும்பல் முதலாளித்துவத்தை நிலை நாட்டுவதை பூர்த்தி செய்துவிட்டது. யுத்த வெறிபிடித்த ரீகனும், நிற - இனவெறி பிடித்த தாட்சரும் கொடுத்த மிரட்டல், நிர்பந்தம், பனிப்போர்த் தாக்குதல் மற்றும் உள்நாட்டு நெருக்கடிகள் காரணமாக கிழக்கு ஐரோப்பிய முன்னாள் சோசலிச நாடுகளில் 'ஆட்சிக் கவிழப்புகள்' அடுத்தடுத்து நடக்கின்றன. பெயரளவில் இருந்த சோலிச முகமூடியையும் கிழித்தெறிந்து விட்டு 'ஜனநாயகக் குடியரசுகள்' என்ற பெயரில் மேற்கத்திய முதலாளித்துவ அரசியல் - பொருளாதார அமைப்புகளை நிறுவி வருகின்றன. இந்தப் போக்கைத் துவக்கி வைத்துவிட்டுத் தடுமாறும் ருஷ்யாவின் கோர்பச்சேவும் தூக்கி எறியப்படும் நிலைமை உருவாகிறது. இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்தி மந்தமான எதிர்ப்பைக் காட்டும் கியூபா, வியத்நாம், வடகொரியாவும் நீண்டகாலம் தாக்குப் பிடிக்க முடியாது.

ஆஃப்கான், கம்பூச்சியா ஆக்கிரமிப்புகளோடு ருஷ்யாவும் அதன் எடுபிடி நாடுகளும் எண்பதாம் ஆண்டுகளுக்குள் அடியெடுத்து வைத்தன. பனாமா ஆக்கிரமிப்போடு கடந்த பத்தாண்டை அமெரிக்கா முடித்து வைத்துள்ளது. இதற்கிடையே அவ்விரு வல்லரசுகளும் போட்டி போட்டுக் கொண்டு ஆயுதங்களைக் குவிப்பதிலும், போர்த் தயாரிப்பிலும் விண்வெளி - நட்சத்திரப் போர்வரை விரிவு படுத்தின. மூன்றாவது உலகப் போரின் விளிம்புவரை போயின. அமெரிக்கா - ருஷ்யா ஆகிய இரு மேல்நிலை வல்லரசுகளும் தமது பொருளாதாரத்தை இராணுவ மயமாக்கியதைத் தொடர்ந்து உள்நாட்டு நெருக்கடிகள் பெருகின. குறிப்பாக உலக மறுபங்கீடு, மற்றும் மேலாதிக்கத்துக்காக அமெரிக்காவுடன் ராணுவ ரீதியிலான போட்டியில் சிக்கிக் கொண்ட ருஷ்யா மற்றும் அதன் தொங்குசதை கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார - சமூக நெருக்கடிகள் முற்றி வெடித்தன. அதேசமயம் ஏகாதிபத்தியங்களின் ஏற்றதாழ்வான வளர்ச்சி என்ற முற்றுமுழு விதியின்படி மேற்கு ஜெர்மனியும் ஜப்பானும் பொருளாதார ரீதியில் தனிப்பெரும் வல்லரசுகளாக வளர்ந்து அமெரிக்க - ருஷ்ய மேல்நிலை வல்லரசுகளை அச்சுறுத்தின. எனவே அவற்றுக்கிடையே தற்காலிகமானதொரு சமரசம் - கூட்டு ஏற்பட்டுள்ளது.

இரு மேல்நிலை வல்லரசுகளுக்கிடையே பனிப்போர் முடிவுக்கு வந்து, படைக் குறைப்பும் கூட்டும் ஏற்படுவதால் அவை மேலாதிக்க, நவீன காலனிய, ஏகாதிபத்திய பேராசைகளைக் கைவிட்டு விட்டதாகுமா? அமெரிக்காவின் கிரேனடா, பனாமா ஆக்கிரமிப்புகளும், லிபியா, ஈரான் மீதான இராணுவத் தாக்குதல்களும், மத்திய அமெரிக்காவில் அதன் சதி - நாசகார வேலைகளும் அப்படிக் காட்டவில்லை. 'கம்யூனிசப் பூத'த்தைப் பிடித்துப் புதைத்து விட்டதாக ஏகாதிபத்திய வல்லரசுகள் எக்காளமிடுகின்றன. ஆனால் மீளமுடியாத பொருளாதார நெருக்கடி, சர்வதேச பயங்கரவாதம், போதை மருந்து - எயிட்ஸ், சுற்றுச் சூழல் பேரழிவு போன்ற தமது சொந்தச் 'செல்லப்பிள்ளை'களின் அட்டகாசங்களைக் கண்டு நடுநடுங்குகின்றன.

நமது நாட்டில் பாசிச இந்திரா மீண்டும் ஆட்சிக்கு வந்ததில் இருந்து தொடங்கி அவரது பரம்பரை ஆட்சி - பாசிச ராஜீவ் கும்பல் வீழ்ந்ததோடு கடந்த பத்தாண்டுகள் முடிவுக்கு வந்தன. இதற்கிடையே, அசாம், பஞ்சாப், காஷ்மீர், பிரச்சினைகளாலும், சாதி, மத, இனப் படுகொலைகளாலும், பாசிச இந்திரா - ராஜீவ் கும்பல் ஏவிய அரசு பயங்கரவாதத் தாக்குதல்களாலும் நமது மக்கள் பேரிழப்புகளுக்கு உள்ளானார்கள். குறிப்பாக போபால் விஷவாயுப் படுகொலைகள், டில்லி சீக்கியர் படுகொலைகள், ''நீல நட்சத்திர நடவடிக்கை'' என்ற பொற்கோவில் மீதான படையெடுப்பு, மீரட் - பாகல்பூர் மதப் படுகொலைகள் ஆகியன திட்டமிட்டு நடத்தப்பட்டன. பாசிச ராஜீவ் கும்பலின் புதிய பொருளாதாரத் தாராளவாதக் கொள்கை, தரகு அதிகாரவர்க்க முதலாளிகளைக் கொழுக்கச் செய்ததோடு நமது மக்கள் மீது பல ஆயிரம் கோடி உள்நாட்டு, வெளிநாட்டு கடன் சுமையை ஏற்றியுள்ளது. ஆனால் தேசிய முன்னணி அரசு அமைத்திருப்பது நமது நாட்டு ஜனநாயகத்தின் வெற்றி என்று நம்பிக்கையோடு பீற்றிக் கொள்கிறார்கள். ஆனால் முந்தைய ஆட்சி ஏற்படுத்திய பிரச்சினைகளுக்குத் தீர்வு எதுவும் அதனிடம் கிடையாது. இந்திய அரசியலும் பிழைப்புவாதப் பொறுக்கி கவர்ச்சிமயமும் கிரிமினல்மயமும் ஆகிவிட்டது என்பது தான் உண்மை.

பழைய, புதிய திரிபுவாதிகளின் துரோகத்தனம், ஓடுகாலித்தனத்தால் பிளவுபட்டுப் போன சர்வதேசப் பாட்டாளிவர்க்க இயக்கம் இன்னமும் ஐக்கியம் காண முடியாமல் பலவீனமாகவே உள்ளது. குறிப்பாக முன்னாள் சோசலிச நாடுகளின் சமீபத்திய ஆட்சிக் கவிழ்ப்புகள், டிராட்ஸ்கிய 'புதிய இடது'களின் சீர்குலைவுகள் காரணமாக மார்க்சிய - லெனினிய சித்தாந்தமே — அதன் வாழ்வும் வளர்ச்சியுமே நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது. இந்த நிலைமைகளை எதிர்கொண்டு தீர்க்கும் மாபெரும் வரலாற்றுக் கடமை புரட்சிகர உலக மக்களின் மீது சுமத்தப்பட்டுள்ளது. மார்க்சிய - லெனினியத்தைக் காப்பதற்கான சித்தாந்தப் போராட்டத்தின் ஊடாக புரட்சிகர சக்திகளின் ஐக்கியத்தைச் சாதிப்பதன் மூலம் இதை நிறைவேற்றிட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

## வானொலி-தொலைக்காட்சி தன்னாட்சி

# மூளைச் சலவை

''அடுப்புகளில் தீ அணைந்துவிட்டது. ஆனால் மக்கள் வயிற்றில் பசி என்னும் தீ எரிகிறது. அது மக்களுடைய மூளையை எட்டுமானால் ஒரு புரட்சியை உருவாக்கும்'' - இது ஏதோ ஒரு புரட்சிக்காரன் சொன்னதில்லை. கடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் வி.பி.சிங் தவறாது வலியுறுத்திச் சொன்னது. வெற்றி பெற்றுப் பிரதமராகி முதன்முறையாக வானொலியில் உரையாற்றிய போதும் இதையே சொன்னார்.

மக்கள் வயிற்றிலே எரியும் பசித் தீ அவர்களுடைய மூளையை எட்டிவிடாமல் இருப்பதற்கான உபாயமும், வழிவகையும் கூட அவருக்குத் தெரிந்திருக்கிறது. அவரது கட்சியின் தேர்தல் அறிக்கையிலேயே அதைச் சேர்த்துக் கொண்டுள்ளார்கள்.

இந்திய அரசுக்கு ஏகபோக சொந்தமான தொலைக்காட்சி மற்றும் வானொலிக்கு சுயாட்சி வழங்குவது என்ற வாக்குறுதியைத் தான் சொல்கிறோம்.

''மக்களுடைய வயிற்றை நிரப்ப முடியவில்லையா? பரவாயில்லை; மக்களுடைய மூளையைக் காலியாய் வைக்காதே! அது காரணங்களை சிந்திக்கத் துவங்கிவிடும். எனவே மதம் - கடவுள் போன்ற கற்பனை, கட்டுக் கதைகளைப் பரப்பி மக்களுடைய மூளையை நிரப்பிவிடு. பிறகு நிம்மதியாக ஆளலாம்'' - இராஜபுத்திரர்களுக்கு சாணக்கியன் போதித்த தந்திரம்!

இதையேதான் இன்றைய ராஜா வி.பி. சிங் அதிநவீன அற்புதச் சாதனங்களான தொலைக்காட்சி மற்றும் ரேடியோ என்ற மின்னணு மக்கள் தொடர்புக் கருவிகளைக் கொண்டு செய்யப் போகிறார்.

மந்திரவாதியின் குல்லாவிலிருந்து விதவிதமான பொருட்களை எடுத்துக் காட்டி பார்வையாளர்களை பிரமிப்பில் ஆழ்த்துவதுபோல, ''டி.வி., ரேடியோ'' பெட்டிகளுக்குள் இருந்து இனி அற்புதங்களைச் செய்து காட்டுவார்கள். கண்டும், கேட்டும் ரசிக்கலாம்! அனுபவிக்க மட்டும் நினைக்கக் கூடாது. கண்ணுக்கும் காதுக்கும் உணவில்லாத போது தானே வயிறு கேட்கும்!

அரசுத் துறை நிறுவனங்களான 'தூர்தர்சன், ஆகாசவாணி' ஆகியவற்றுக்கு சுயாட்சி வழங்குவதை வரவேற்காத ஓட்டுக் கட்சிகளோ, ஏடுகளோ எதுவும் கிடையாது. அதற்கு அவர்களில் பலரும் சொல்லும் காரணங்கள்:

★ மக்களுக்குச் சேவை செய்வதற்குப் பதிலாக ஆட்சியிலுள்ள கட்சியின் பிரச்சார சாதனங்களாக அவை மாற்றப்பட்டுவிட்டன.

★ நேரு - இந்திரா - ராஜீவ் குடும்பத்தின் பரம்பரை ஆட்சிக்கும் தனிநபர் வழிபாட்டுக்கும் துதிபாடுவதாக அவை செயல்பட்டன.

★ எதிர்க்கட்சியினரின் செய்திகள், அவர்களது ஆதரவு நடிகர் - நடிகைகளின் நிகழ்ச்சிகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன. அவர்களுக்கு எதிராக பொய்ச் செய்திகளும் அவதூறுகளும் பரப்பப்பட்டன.

★ சுயேட்சையாக இயங்கும் தொழில் முறை நிபுணர்கள் முடக்கப்பட்டனர் அல்லது பழிவாங்கப்பட்டனர். எனவே நிகழ்ச்சிகள் சலிப்பூட்டுவனவாக மாறிவிட்டன.

★ 'தூர்தர்சனும் ஆகாசவாணியும்' மக்களின் நம்பிக்கையும், மதிப்பு மரியாதையையும் இழந்துவிட்டன.

இவையெல்லாம் உண்மைதான். இவைதவிர இன்னும் சில முக்கியமான உண்மைகள் இருக்கின்றன.


☆ இராமாயணம், மகாபாரதம் போன்ற மத - இதிகாசப் பிரச்சாரங்கள், சினிமா மற்றும் தரகு அதிகார முதலாளிகளின் விளம்பரங்கள் மூலம் போதை வியாபாரம் செய்யும் தொழில் நிறுவனங்களாகி ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் வரை லாபம் ஈட்டுகின்றன.

☆ அரசியல்வாதிகள் - அதிகாரிகளை அம்பலப்படுத்தும் 'நியூ டெல்லி டைம்ஸ்' போன்ற வானொளி சினிமாக்களை தடை செய்கின்றன; அதே சமயம் இந்தியாவின் விரிவாக்க ஆக்கிரமிப்பு இலங்கைப் போர் போன்ற தேசிய வெறிகளுக்காகப் பொய்ப் பிரச்சாரங்கள் செய்கின்றன.

இவற்றின் காரணமாக 'தூர்தர்சன், ஆகாசவாணி' மூலமாக வரும் செய்திகள் எதுவும் நம்பக்கூடியன அல்ல; அவற்றை நம்ப முடியாது என்ற முடிவுக்கு மக்கள் வந்துவிட்டார்கள். இனி எந்த ஆட்சி வந்தாலும் அதற்கான பிரதான ஊதுகுழலான 'தூர்சனையும் ஆகாசவாணி'யையும் மக்கள் நம்ப வேண்டுமானால் அவற்றின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தியாக வேண்டும். ''ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் அவை இல்லை. சுயாட்சியுடன் இயங்குகின்றன. இனி மக்கள் நம்பலாம்'' என்று மாற்றிவிட வேண்டும்.

இந்தக் கட்டாயத்தின் காரணமாக இப்போதைய ஆளுங்கட்சிகள் கொடுத்திருந்த தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் விட 'தூர்தர்சன், ஆகாசவாணி'க்கு சுயாட்சி தரும் விவகாரத்துக்கு முன்னுரிமை கொடுக்கின்றன. நாடாளுமன்ற முதல் கூட்டத் தொடரிலேயே அதற்கான மசோதாவைக் கொண்டு வருகின்றன.

1977-79 ஜனதா ஆட்சிக் காலத்திலேயே அமைக்கப்பட்ட வர்கீஸ் கமிட்டியின் அறிக்கை அடிப்படையில் தான் இப்போது 'தூர்தர்சன், ஆகாசவாணி' சுயாட்சி மசோதா கொண்டு வரப்படுகிறது. அதன்படி இந்திய ஒலி-ஒளி பரப்புக்கழகம் (பிரசார் பாரதி) என்கிற பெயரில் ஒரு சுயாட்சி நிறுவனம் அமைக்கப்படும். கல்வி, கலை - இலக்கியம், சமூக சேவை போன்ற பல்



படிப்பகம்

www.padippakam.com

வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரம் சாராத பிரமுகர்களைப் பெரும்பான்மையாகவும், நிதித்துறை, செய்தி ஒலி - ஒளிபரப்புத் துறை அரசு செயலாளர்கள், ஒலி - ஒளிபரப்பு நிறுவன இயக்குநர்கள் அடங்கிய ஒரு உயர்மட்ட அறக்கட்டளை இந்தக் கழகத்துக்கு தலைமையேற்கும்.

தலைமைக் கழகத்துக்குக் கீழே ஒலி - ஒளிபரப்புக் கட்டுப்பாட்டு இயக்குநர் தலைமையில் அதிகாரிகள் அடங்கிய மைய நிர்வாக வாரியம், ஐந்து மண்டல நிர்வாக வாரியங்கள் மற்றும் ஒலி - ஒளிபரப்பு நிலைய அதிகாரிகள் என்று நான்கு மட்டத்தில் மொத்த அமைப்பும் இயங்கும். ஒலி - ஒளிபரப்பும் செய்திகள், தொடர்கள், சினிமா, நாடகங்கள், மற்றும் பிற நிகழ்ச்சிகள் பற்றி அமைச்சகத்திடமிருந்து வழிகாட்டுதலோ, நிர்ப்பந்தமோ இருக்காது! மேற்கண்ட நான்கு மட்டங்களினாலேயே தீர்மானிக்கப்படும். ஆளுநர்கள் அல்லது இயக்குநர்களைக் கொண்ட உயர்மட்ட வாரியம், பிராந்தியக் கிளைகளுடன் கூடிய ஒலி - ஒளிபரப்புக் கவுன்சில் மற்றும் நிகழ்ச்சி ஆலோசனைக் கமிட்டி ஆகிய மட்டங்களிலான அமைப்புகள் இருக்கும். கல்வி, கலை இலக்கியம், பத்திரிக்கை, நிதி, தொழில்நுட்பம், சமூக சேவை போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த 9 அல்லது 10 பேரை இக்கழகத்தின் ஆளுநர்களாக நியமிப்பார்கள். செய்திகள், செய்தி - அரசியல் விமர்சனங்கள், தொடர்கள், சினிமா நாடகம் போன்ற எல்லா நிகழ்ச்சிகளையும் கழகமே முடிவு செய்துகொள்ளும். அரசு குறுக்கிடாது.

இப்படி ஒலி - ஒளிபரப்புக் கழகம் சுயாட்சி உடையதாக இருப்பினும் வழிகாட்டுதல், நிதி விவகாரங்களில் தனித்து இயங்க முடியாது. அப்படிச் செய்தால் ஆண்டுக்கு 1200 கோடி ரூபாய் வரை நட்டமேற்படும். எனவே அரசு நிதியளிப்பதோடு அவ்வப்போது வழிகாட்டும் அறிக்கைகளும் தாக்கீதுகளும் அனுப்பும். பிறகு அவை நாடாளுமன்றத்தின் முன்பு வைக்கப்படும். அதுமட்டுமல்ல; இக்கழகத்தின் ஆளுநர்களை மந்திரிசபை சிபாரிசு அடிப்படையில் அரசுத் தலைவர் நியமிப்பார்.

இந்த ஏற்பாட்டில் இந்தியத் தரகு அதிகார முதலாளிகளுக்கும் அவர்களுடைய பத்திரிக்கைகளுக்கும் திருப்தி இல்லை. ''அரசு நிதியைச் சார்ந்தும், நாடாளுமன்றத்துக்குப் பொறுப்பாகவும் இருக்கும் வரை தூர்தர்சனும் ஆகாசவாணியும் மதிப்பு - மரியாதை, நம்பிக்கைக்குரியதாகவோ, தரமானதாகவோ, சுதந்திரமானதாகவோ, இருக்காது. சுயாட்சி வழங்குவது என்பது பெயரளவுக்கானதாக மட்டுமே விளங்கும். மற்றபடி அரசுத்துறை கழகங்களைப் போல திறமையின்மையிலும் ஊழலிலும் மூழ்கிப் போகும்'' என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

எனவே தனியாருக்குச் சொந்தமான தனித்தனி அலைவரிசைகளில் ஒலி - ஒளிபரப்புவதற்கான வியாபார தொழில் ரீதியிலான சுதந்திரம் - உரிமை வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோருகிறார்கள். அப்படி வடக்கு மற்றும் மேற்கு இந்தியாவுக்கான தனியார் ஒலி - ஒளி பரப்பும்




விளம்பரத்துக்கு தயாராகிறார் வி.பி.சிங்

தொழிலைத் துவக்கி நடத்துவதற்கான 'லைசென்சு' கோரி ''ஜெயின் - டால்மியா'' என்ற தரகு அதிகார முதலாளி குடும்பம் ஏற்கனவே திட்டம் வகுத்து வைத்திருக்கிறது.

அப்படி இல்லையென்றால் இந்தியச் செய்தி அறக்கட்டளை (பி.டி.ஐ.) போன்ற செய்தி நிறுவனம் தனி அலைவரிசையில் ஒலி - ஒளிபரப்புவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கோருகின்றனர். பி.டி.ஐ. என்பது தரகு அதிகார முதலாளிகள் நடத்தும் பெரும் பத்திரிகை நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கியதாகும். இப்படிச் செய்தால் கட்டுமான, நிர்வாக மற்றும் நிதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதோடு, அரசு ஒலி - ஒளிபரப்பு நிறுவனங்களோடு போட்டி போட்டு நேயர்களுக்குத் தரமான நிகழ்ச்சிகள் கிடைக்கும் என்று வாதிடுகிறார்கள்.

ஆனால் தகவல் ஒலி - ஒளிபரப்புத் துறை மந்திரி அதற்கு மறுத்துவிட்டார். தனியார் மயமாவதை எதிர்ப்பார்களாம்! தொலைக்காட்சியும், வானொலியும் பெரும் தொழில் குடும்பங்களின் கரங்களில் விழுவதை அனுமதிக்கப் போவதில்லையாம்! அதோடு தகவல் அறியும் சுதந்திரத்துக்கும் தொலைக்காட்சி கலாச்சாரத்துக்கும் சரியான உறவை ஏற்படுத்துவார்களாம்! வன்முறை, ஆபாசத்திற்கு எதிராக கடும் தணிக்கை செய்துதான் சினிமா அனுமதிக்கப்படுமாம்!

ஆக, மிகவும் நடுநிலையான, கருத்துச் சுதந்திரமுள்ள, தரமான, மக்களுக்குத் தேவையான நிகழ்ச்சிகளைத் தரும் நிறுவனங்களாக 'தூர்தர்சனையும் ஆகாச வாணியையும்' மாற்றிவிடப் போவதாக ஆசை காட்டுகிறார்கள்.

ஏட்டிலே எழுதிப் படிக்கும்போது, காதிலே கேட்கும் போது எல்லாம் சிறப்பாகத் தோன்றுகிறது - மற்றபிற சீர்திருத்தங்களைப் போல. ஆனால் நடைமுறை எப்படி இருக்கும்?

சுயாட்சி நிறுவனமாக அமைத்து விடுவதாலேயே அரசு - ஆளுங்கட்சி சார்பற்ற நடுநிலையானதாக ஒலி - ஒளிபரப்புத் துறை மாறிவிடாது. இதற்கு ஏற்கனவே பல சான்றுகள் உள்ளன. நீதிமன்றங்கள், தேர்தல் கமிஷன், தேசியப் பொதுத் தணிக்கைக் குழு போன்றவை அரசியல் நிர்ணய சட்டபூர்வமான சுயாட்சி உடையனவாகும். ஆனால் பாசிச இந்திரா - ராஜீவ் ஆட்சியின் கீழ் இவை எப்படி ஆளும் கும்பலின் எடுபிடிகளாக மாறின அல்லது இழிவுபடுத்தி முடக்கப்பட்டன என்பது எல்லோருக்கும் தெரியும். இதற்கு என்ன காரணம்? இவை என்னதான் சுயாட்சியுடையன என்று கூறப்பட்டாலும் அரசு நியமனம் பெற்ற அதிகாரிகள் மற்றும் நிதி விவகாரங்கள் என்று பல்வேறு முறைகளாலும் அரசினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

மேற்கண்ட சுயேட்சை நிறுவனங்களும் கூட அரசு சேவை நிறுவனங்கள் தாம். ஆனால் 'தூர்தர்சன், ஆகாசவாணி'யும் வர்த்தகத் தொழில் முறை நிறுவனங்களாகும். அரசு அமைச்சகத்தின் நேரடிப் பொறுப்பில் இல்லாத பல பொதுத் துறை தொழில் நிறுவனங்களைப் போன்றுதான் இவையும் இப்போது மாற்றப்படுகின்றன. மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய கட்டாயம் இல்லாத அதிகாரிகளால் வேறு இயக்கப்படவிருக்கின்றன. எனவே மற்ற பிற பொதுத்துறை தொழில்களில் காணும் திறமையின்மை, நட்டம், ஊழியர் விரோத அதிகார முதலாளித்துவ ஆதிக்கத்தோடு லஞ்ச ஊழல், அதிகார முறைகேடும் தலைவிரித்தாடும். சுயாட்சியினால் இவை பெருகுமே தவிர குறையாது!

'தூர்தர்சன், ஆகாசவாணி'யும் ஆளும் கட்சி, ஆளும் கும்பலுக்கு ஊழியஞ்செய்து, பாரபட்சமாக நடந்து கொண்டன என்பது பத்திரிக்கைகள் மற்றும் இப்போதைய ஆளும் கட்சிகளின் முக்கியமான குற்றச்சாட்டுகள். ஆனால் அவர்கள் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்ட பல கேடுகளை அந்நிறுவனங்கள் செய்து வருகின்றன. அவை:

□ தரகு அதிகார முதலாளிகள் மற்றும் ஏகாதிபத்தியது பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள், 'தூர்தர்சன், ஆகாசவாணி'யில் செலுத்திவரும் ஆதிக்கம்: வானொலியில் வர்த்த ஒலிபரப்பும், தொலைக்காட்சி ஒளிபரப்பும் துவங்கியது முதலே இவர்களும் விளம்பரக் கம்பெனிகளும் பெருமளவு புகுந்துவிட்டனர். பாசிச ராஜீவ் ஆட்சியில், வி.பி.சிங் நிதியமைச்சராக இருந்தபோதே விளம்பரங்களுக்கான வருமானவரி விலக்களித்தார்; புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் மேட்டுக் குடியினருக்கான ஆடம்பர அந்நிய மோக ஐந்து நட்சத்திரக் கலாச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டார்.

இவை செய்திகள், நிகழ்ச்சித் தொடர்கள் ஆகிய அனைத்திலும் ஆட்சியாளர்கள், இந்தியத் தரகு அதிகார முதலாளிகள், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள், 'தூர்தர்சன், ஆகாசவாணி' நிர்வாக அதிகாரிகள், அவற்றின் நிகழ்ச்சி எழுத்தாளர்கள் - இயக்குநர்கள் ஆகியோருக்கிடையே சங்கிலித் தொடர் போன்ற ஒரு கள்ளக்கூட்டு

படிப்பகம்

www.padippakam.com

உருவாகிவிட்டது.

குறிப்பாக தொலைக்காட்சியில் வரும் நிகழ்ச்சித் தொடர்கள் - நாடகங்கள் - சினிமா போன்றவை 90 சதவிகிதம் பெரும் தொழில் நிறுவனங்களால் ஏற்று நடத்தப்படுகின்றன. அதாவது அந்நிகழ்ச்சிகளை ஒலி - ஒளிபரப்புத் திட்டச் செலவை தாமே ஏற்று அதனுள் தமது விளம்பரத்தை உட்படுத்திக் கொள்கின்றன. இதனால் மிகவும் பிற்போக்கான, மக்கள் விரோதக் கருத்துடைய நிகழ்ச்சிகளை அவை திணிக்கின்றன.

உதாரணமாக, ''பாஞ்சி'' என்ற அப்பட்டமான தொழிலாளர் விரோதத் தொடரும், ''திருவாளர் யோகி'' என்ற அறுவை ஜோக்குத் தொடரும் ஒளிபரப்பினார்கள். மேட்டுக்குடி நடுத்தர வர்க்கத்தைச் சொரிந்து கொடுக்கும் 'ஹம்லோக்', 'புனியாடு', 'நுக்காடு', 'ரஜினி' போன்ற தொடர்களைப் புகுத்தினார்கள்.

இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின் போது நடந்த மதவெறி கொடுமை, கோரத்தை எடுத்துச் சொல்லும் துயரமிகு 'தமாஸ்' போன்ற தொடர்களினூடே தொழில் விளம்பரங்களைப் புகுத்தி கேலிக்கூத்தாக்கினர்; கொச்சைப் படுத்தினர். குடும்பக் கட்டுப்பாடு முதல் ஏகாதிபத்தியக் கலாச்சார சீரழிவுகள் வரை எல்லாக் குப்பைகளையும் கொண்டு வந்து கொட்டினார்கள்.

□ **ராமாயணம், மகாபாரதம் போன்ற மத - இதிகாச மூடத்தனங்களுக்குப் புத்துயிர் கொடுத்தார்கள்.** இசை, நாட்டியம், நாடகம் சகலவற்றிலும் பார்ப்பன ஆதிக்கத்தின் இந்துமத வெறி பிரச்சாரம் நடத்தப்படுகிறது. வரலாற்றைப் புரட்டும் வகையில், பகுத்தறிவுக்குப் புறம்பான முறையில் சாணக்கியன் முதல் சிவாஜி வரையிலான ஆட்சியாளர்கள் தேசிய ஒருமைப்பாடு காத்த 'இந்திய - பாரத புருஷர்களாக' சித்திரிக்கப்படுகின்றனர். சங்கராச்சாரிகள், இராமானுஜர், ரமண மகரிஷி வரையிலான இந்துமத போதகர்கள் கடவுள் அவதாரங்களாகவும், தேசியக் கலாச்சார சிற்பிகளாகவும் காட்டப்படுகின்றனர்.



தொலைக்காட்சி: பணம் பறிக்கும் அரக்கன்

□ **'தூர்தர்சன், ஆகாசவாணி'யின் இந்தித் திணிப்பு:** நாட்டின் பெரும்பான்மையான மக்கள் இந்தி அறியாதவர்கள். இந்தி பேசும் மாநில மக்களிலும் 'தூர்தர்சன், ஆகாசவாணி' ஒலி - ஒளிபரப்பும் 'எழுத்து நடை, மேட்டுக்குடி' இந்தியைப் பெரும்பாலான மக்கள் புரிந்து கொள்ள முடியாது. இருந்தபோதும் ஒரு நாளைக்கு 3 அல்லது 4 மணி நேரம் மட்டுமே பிறமொழிகளில் 'தூர்தர்சன்' ஒளிபரப்புகிறது. மற்றெல்லா நேரங்களிலும் இந்தி நிகழ்ச்சிகள் தான். கூடவே பார்ப்பன மதவெறியோடு சமஸ்கிருத செய்திகள், நாடகங்கள், இசை - மொழிப் பயிற்சிகள் வேறு திணிக்கப்படுகிறது.

**'தூர்தர்சன், ஆகாசவாணி'யில் லஞ்ச ஊழல், விபச்சாரம், சாதிவெறி தலைவிரித்தாடுகிறது.** நேயர்கள் கவனம் செலுத்தும் முதன்மை நேரங்களை ஒதுக்குவது, தணிக்கை விதிகளில் சலுகை காட்டுவது போன்றவற்றுக்காக தரகு அதிகார முதலாளிகள், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள், நிகழ்ச்சித் தொடர், நாடகம், சினிமா போன்றவற்றின் தயாரிப்பாளர்களிடம் இருந்து பல்வேறு வகையில் 'தூர்தர்சன்' அதிகாரிகள் லஞ்சம் பெறுகிறார்கள்; பொய்க் கணக்குகள் எழுதுகிறார்கள். சினிமாத் துறையைப் போலவே, தூர்தர்சனிலும் விபச்சாரம் பெருகிவிட்டது. குறிப்பிட்ட நாடகம், சினிமா அல்லது தொடர் ஒளிபரப்ப ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் நடிகைகளைத் தமது இச்சைக்கு அனுப்பி வைக்கும்படி தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் நிர்பந்திக்கின்றனர். சபா நாடகங்களில் ஆதிக்கம் செலுத்துவதைப் போல பார்ப்பன சாதி ஆதிக்கம் தூர்தர்சன், ஆகாசவாணி நிகழ்ச்சிகளிலும் உள்ளது. நாடக, இசைக்குழுக்கள் மட்டுமல்ல; அவர்கள் பிரச்சாரம் செய்யும் கலாச்சாரமும், அந்தச் சாதிப் பின்னணி உடையதாகவே இருக்கிறது. மனைமாட்சி, மாதர் நிகழ்ச்சி உட்பட அனைத்திலும் பார்ப்பனக் குடும்பக் கலாச்சாரமும் பெண்ணடிமைத்தனமும் மூட நம்பிக்கைகளும் நிரம்பி வழிகின்றன. விளம்பரங்களைக்கூட இந்தப் போக்கு விட்டு வைக்கவில்லை.

இப்போது தேசிய முன்னணி அரசு கொண்டுவரும் சீர்திருத்தங்கள் மேற்கண்ட கேடுகளில் இருந்து 'தூர்தர்சன், ஆகாசவாணி'யை மீட்டுவிடாது. மாறாக நாயிடமிருந்து பிடுங்கி பேயிடம் தருவதைப் போல் இந்தக் கேடுகள் பெருகவே செய்யும். ஏனெனில் பாசிச ராஜீவ் கும்பலின் ஆதிக்கத்தில் இருந்து மீட்டு தரகு அதிகார முதலாளிகள், ஏகாதிபத்திய பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள், பழைமைப் பிற்போக்கு நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கு நேரடி ஊழியம் செய்யும் அதிகாரிகளின் சுயாட்சியின் கீழ் 'தூர்தர்சனையும், ஆகாசவாணி'யையும் கொடுத்துவிடப் போகிறார்கள்.

## வைர விழாவா? வழிப்பறி விழாவா?

ராஜா சர். அண்ணாமலை பல்கலைக் கழகத்துக்கு அறுபது ஆண்டுகள் நிறைவெய்துகிறது. இதனை நினைவு கூறும் வகையில் குடியரசுத் தலைவர், தமிழக முதல்வர், கவர்னர் பங்கேற்க டிசம்பர் 14 அன்று வைரவிழாவை கோலாகலமாகக் கொண்டாடியது கல்லூரி நிர்வாகம். இவ்விழாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தன்னலம் கருதாத கல்விப் பணியையும், அருமை பெருமைகளையும் அனைவரும் வியந்து பாராட்டினர்.

ஆனால்அண்ணாமலை பல்கலைக் கழகம் மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் கல்வி நிறுவனம் தான்! 1988-89ம் ஆண்டில் மட்டும் இப்பல்கலைக் கழகத்துக்கு மத்திய அரசு 39,54,940 ரூபாயை மான்யமாகக் கொடுத்தது. பல்கலைக் கழக மான்யக்குழு 52,61,166 ரூபாயும், தமிழக அரசு மான்யமாக 99,97,500 ரூபாயும் கொடுத்தன. இதுதவிர இதர நிறுவனங்கள் மூலம் 20,35,650 ரூபாய் மான்யம் கிடைத்தது. நிர்வாகத்தின் தரப்பில் கல்விப் பணிக்கு ஒதுக்கிய தொகை பூஜ்ஜியம் தான்! இதற்கு வள்ளல் பட்டம்! சிலை அலங்காரம்! பாராட்டுப் புகழுரைகள்!

நிர்வாகமோ, அரசு தரும் மானியங்களை வேண்டிய வங்கியில் போட்டு வட்டியினை சுயலாபங்களுக்குப் பயன்படுத்துகிறது. அரசு அறிவிக்கும் ஊதியக் குழு பரிந்துரைகளைக் கூட அமுல்படுத்த மறுக்கிறது. தற்காலிக வேலை என்ற பெயரில் பணியாளர்கள் குறைந்த கூலி தரப்பட்டு சுரண்டப்படுகிறார்கள். ஆட்சிமன்றக் குழுவில் கூட ஊழியர்களுக்குப் பிரதிநிதித்துவம் தரப்படுவதில்லை. உரிமைக்குப் போராடும் ஆசிரியர் - மாணவர் - தொழிலாளர்களைப் பிரித்தாளுவதும், அடியாட்களை வைத்து தாக்குவதும் தொடர்கிறது.

வசதிகளற்ற, நெருக்கடியான மாணவ - மாணவியர் விடுதிகள்; ஆனால் விடுதிக் கட்டணமோ நாளும் உயரும் விலைவாசியைப் போல் மருத்துவப் படிப்புக்கு ரூ.3.5 லட்சம்; பொறியியல் படிப்புக்கு ரூ.50 ஆயிரம் என படிப்பிற்கேற்ப கறார்விலை வியாபாரம். மொத்தத்தில் வட்டிக்கடையைப் போல கல்வி வியாபாரம் செய்து கொள்ளை அடிக்கிறது இப்பல்கலைக்கழக நிர்வாகம். இப்போது நடந்த வைர விழாவிற்காக மாணவர்களிடம் ரூ.250 வீதம் ஒரு கோடியே இரண்டு லட்ச ரூபாயையும், ஆசிரியர் - ஊழியர்களிடமிருந்து இரண்டு லட்ச ரூபாயையும் நிர்வாகம் கறந்துவிட்டது. இப்படி அடித்துப் பிடுங்கிய தொகையில் விழாவிற்குச் செலவிட்டது வெறும் 43 லட்ச ரூபாய்கள் தான். மீதி 61 லட்ச ரூபாயை நிர்வாகம் அமுக்கிவிட்டது.

மாணவர்கள் - பெற்றோர்களின் ரத்தம் உறிஞ்சி பெற்ற நிதியினைக் கொண்டு குடியரசுத் தலைவர், வேந்தர் (ஆளுநர்); இணை - துணை வேந்தர்களுக்கு பாராட்டு, பரிசு, புகழ் மாலைகள்; தொழிலதிபர்கள் மருதப்பிள்ளை, பிற்போக்குவாதி குன்றக்குடி அடிகள் முதலானோருக்கு கௌரவ கலாநிதி பட்டங்கள்!

கல்வி நிறுவனங்கள் சீர்கேடு அடைந்ததற்கு இன்னுமொரு சாட்சிதான் அண்ணாமலை பல்கலைக்கழகம். பாசிச ராஜீவ் கொண்டு வந்த புதிய கல்விக் கொள்கையின் விளைவும் வெளிப்பாடும் இதுதான்!

**தகவல்: முற்போக்கு மாணவர் சங்கம், மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம்**

படிப்பகம்

www.padippakam.com

ருமேனிய ஆட்சிக் கவிழ்ப்பு:

# அடிமை விலங்கு உடைக்கப்பட்டது! பொன் விலங்கு பூட்டப்பட்டது!

போலிக் கம்யூனிஸ்டுகள் இத்தனை நாளும் சோசலிச நாடுகள் என்று எவற்றை நம்பச் சொன்னார்களோ, அத்தனையும் இன்று முதலாளித்துவ சாக்கடையை நோக்கிப் பாய்கின்றன. கலகங்களும் போராட்டங்களும் தீவிரமாகி, நேற்று வரை போலிக் கம்யூனிஸ்டுகளால் 'தோழர்'களாக வர்ணிக்கப்பட்ட ஆட்சியாளர்கள் இன்று ஊழல் பெருச்சாளிகளாக, சர்வாதிகாரிகளாக அம்பலப்பட்டு தூக்கியெறியப் படுகிறார்கள். கடந்த ஆண்டில் போலந்தின் ஜாருஜெல்ஸ்கி, ஹங்கேரியின் க்ரோஸ், கி.ஜெர்மனியின் ஹோனேக்கர், செக்கின் ஹுசாக், பல்கேரியாவின் ஜிவ்கோவ் என்று தொடங்கி ஆண்டு இறுதியில் ருமேனியாவின் சியாஸ்கோவின் வீழ்ச்சியுடன் முடிந்துள்ளது.

'கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோசலிச நாடுகளல்ல; அதிகார வர்க்க முதலாளித்துவ ஆட்சிமுறைக் கொண்ட, ரஷியாவின் தொங்குசதை நாடுகள். இப்போலி சோசலிச நாடுகளில் விரைவில் நெருக்கடி முற்றும்' என்று உலகெங்குமுள்ள மார்க்சிய - லெனினிய வாதிகள் சுட்டிக்காட்டிய போது, ''இவர்கள் அமெரிக்காவின் ஏஜெண்டுகள்; புரட்சியின் எதிரிகள்'' என்று போலிக் கம்யூனிஸ்டுகள் கண்ணை மூடிக் கொண்டு சாடினர். ஆனால் இன்று மார்க்சிய - லெனினிய புரட்சியாளர்கள் கூறியவை அனைத்தும் உண்மை என்று கிழக்கு ஐரோப்பாவில் நடந்துவரும் மாற்றங்கள் நிரூபிக்கின்றன.

முதலாளித்துவ புதைகுழிக்குள் கடந்த மாதத்தில் கடைசியாக விழுந்த நாடு ருமேனியா. ரஷியாவில் கோர்ப்பசேவ் கும்பலின் முதலாளித்துவ மறு சீரமைப்புக் கொள்கையின் தாக்கம், கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிச நாடுகளில் அதிகார வர்க்க முதலாளித்துவ ஆட்சிக்கு எதிராக நடந்த கலகங்கள், மேற்கத்திய ஏகாதிபத்தியங்களின் ஆதரவு, ருமேனிய போலி சோசலிஸ்டுகளின் சமூக பாசிச ஆட்சியின் தாங்கொணா கொடுமை ஆகிய அனைத்தும் சேர்ந்து ருமேனிய மக்களைக் கிளர்ந்தெழச் செய்து, 24 ஆண்டுகால சர்வாதிகார ஆட்சியைத் தூக்கியெறிவதில் முடிந்துள்ளது.

ருமேனியாவை ஆண்ட சியோஸ்கோ கும்பல் ரஷியாவை ஆண்ட போலி சோசலிச சர்வாதிகாரி பிரஷ்னேவின் அச்சான வாரிசு. பிரஷ்னேவைப் போலவே நீண்டகாலம் - ஏறத்தாழ கால் நூற்றாண்டு காலம் ருமேனியாவை ஆட்டிப்படைத்த சர்வாதிகாரி. பிலிப்பைன்சுக்கு ஒரு மார்க்கோஸ் - இமெல்டா தம்பதிகள் என்றால் ருமேனியாவுக்கு சியாஸ்கோவும் அவர் மனைவி எலினாவுமாக இருந்தனர். ருமேனியாவின் கட்சியையும் ஆட்சியையும் தனது குடும்பச் சொத்தாக சீரழித்தது இக்கும்பல். சியாஸ்கோவின் மனைவி எலினா துணைப் பிரதமராகவும், கட்சியிலும் அரசிலும் இரண்டாவது சக்திவாய்ந்த தலைவராகவும் இருந்தார். அவரது சகோதரர்கள் ராணுவ தளபதியாகவும், தூதராகவும், கட்சிப் பத்திரிக்கை ஆசிரியராகவும் இருந்தனர். அவரது மகன்கள், மருமகள் முதலானோர் அரசு உயர்பதவிகளை அலங்கரித்தனர். இதுதவிர எலினாவின் சகோதரர்களும், சகோதரிகளும் சியாஸ்கோவின் தூரத்து உறவினர்களும் கூட கட்சியிலும் ஆட்சியிலும் உயர் பொறுப்புகளில் கொலுவீற்றிருந்தனர். சுருக்கமாகச் சொன்னால், ஏறத்தாழ 40க்கும் மேற்பட்ட உறவினர்களைக் கொண்ட சியாஸ்கோவின் குடும்ப ஆட்சியே ருமேனியாவில் நிலவியது.

போலி சோசலிச ஆட்சியால் ஏற்பட்ட மீளமுடியாத பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த மக்கள் போராடிய போதும், தேசிய சிறுபான்மை இன மக்கள் உரிமை கோரி போராடிய போதும் அவற்றைக் கொடூரமாக அடக்கி ஒடுக்கியது சியாஸ்கோ கும்பல். ரகசிய போலீஸ் குழுக்களைக் கொண்ட அடியாட் படைகளைக் கட்டி எதிர்ப்பாளர்களை அழித்தொழித்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, எல்லா சர்வாதிகாரிகளையும் போலவே சொந்த நாட்டைச் சூறையாடி ஏறத்தாழ 600 கோடி ரூபாய் மதிப்புடைய பொன்னையும் பொருளையும் சுவிஸ் வங்கியில் ரகசியமாகக் குவித்து வைத்திருந்தது.

கடந்த ஆண்டிலிருந்தே முதலாளித்துவ ஜனநாயகத்தைக் கோரி ருமேனிய



சுட்டுக் கொல்லப்பட்ட போலிக் கம்யூனிச சர்வாதிகாரி சியாஸ்கோ

மக்கள் சிறிதும் பெரியதுமான ஆர்ப்பாட்டங்களை நடத்திவந்த போதிலும், கடந்த டிசம்பர் 17 அன்று டிமிசோரா நகரில் சியாஸ்கோ கும்பல் நடத்திய கொலைவெறியாட்டம் அந்நாட்டு மக்களை ஆத்திரமடையச் செய்தது. ருமேனியாவின் மேற்கு பகுதியில் உள்ள ஹங்கேரிய பூர்வீக இனத்தைச் சேர்ந்த மக்கள் ஜனநாயக உரிமை கோரி போராடிய போது 4000க்கும் மேற்பட்டோரைக் கொன்றும், மாதா கோயில் முன்பு 36 குழந்தைகளைப் படுகொலை செய்தும் ஹிட்லரையே விஞ்சுமளவு காட்டுமிராண்டித்தனத்தைக் கட்டவிழ்த்துவிட்டது, ஆளுங்கும்பல்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நாடு முழுவதும் மக்கள் சியாஸ்கோ ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியில் இறங்கினர். ருமேனியாவின் ராணுவம் மக்களுடன் சேர்ந்துகொண்டது. ஆளுங்கும்பலின் விசுவாசப் போலீஸ் படைக்கும் ராணுவத்துக்குமிடையே ஆயுத மோதல்களும், தாக்குதல்களும் நடந்தன. ஏறத்தாழ 12,000 பேர் கொல்லப்பட்டு நகர வீதியெங்கும் குருதி வெள்ளம் பாய்ந்தது. ஈரானின் முன்னாள் சர்வாதிகாரி ஷாவைப் போல, பிலிப்பைன்சின் மார்க்கோசைப் போல, மக்களிடமிருந்து தனிமைப்பட்ட சியாஸ்கோ குடும்பமும் நாட்டைவிட்டு தப்பியோட முயன்றது. அவர்களை வழியில் மடக்கி கிளர்ச்சியாளர்கள் கைது செய்தனர். பீதியடைந்த ராணுவ மந்திரி தற்கொலை செய்து கொண்டார். தலைநகர் புகாரெஸ்ட்டில் சியாஸ்கோவின் மாளிகை தீவைத்துக் கொளுத்தப்பட்டது. ஏறத்தாழ ஒருவார காலம் நடந்த இந்த உள்நாட்டுப் போரில் சியாஸ்கோ சர்வாதிகார கும்பல் வீழ்த்தப்பட்டு, முதலாளித்துவ பாதையாளரும், முன்னாள் வெளியுறவு அமைச்சராகவும் இருந்த மானெஸ்கோ தலைமையிலான புதிய அரசு நிறுவப்பட்டுள்ளது. இராணுவ கோர்ட்டில் ரகசிய விசாரணை நடத்தப்பட்டு சர்வாதிகாரி சியாஸ்கோவும் அவர் மனைவியும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களது வாரிசுகளும், உறவினர்களும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

வழக்கம் போலவே மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள், ருமேனிய மக்களின் தீரத்தைப் பாராட்டி 'கம்யூனிச சர்வாதிகாரத்துக்கு சாவு மணி அடித்து ஜனநாயகத்தை நிலைநாட்டி விட்டதாக' புகழ் பாடுகின்றன. போரில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவிகள் செய்ய மருந்துப் பொருட்களுடன் விமானத்தில் பறந்து வருகின்றன. ''கம்யூனிசம் என்றாலே சர்வாதிகாரம்; ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கு எதிரானது!'' என்று சாடுகின்றன. ''கிழக்கு ஐரோப்பாவில் எஞ்சியிருப்பது அல்பேனியா மட்டும்தான்; அதுவும் விரைவில் வீழ்ந்துவிடும்'' என்று ஆரூடம் சொல்கின்றன. தோழர் ஸ்டாலினது பாட்டாளிவர்க்க சோசலிசப் பாதையைக் கைவிட்டு, ஸ்டாலினையே சாடிய சியாஸ்கோவை ''ஸ்டாலினிச சர்வாதிகாரி'' என்று முதலாளித்துவ வாதிகள் சியாஸ்கோவை சாக்காக வைத்து திட்டமிட்டே ஸ்டாலினை அவதூறு செய்கின்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

இதில் வேடிக்கை என்னவென்றால் ரஷியாவே ருமேனிய மக்களின் போராட்டத்தை வரவேற்று ஆதரித்துள்ளது. ரஷியாவில் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் தேசிய இனங்கள் மீது இராணுவத்தை ஏவி, விஷவாயுக் குண்டுகளை வீசிக் கொல்லும் கோர்பசேவ், ருமேனிய பாசிஸ்டு சியாஸ்கோவின் ''மனித உரிமை'' மீறல்களைக் கண்டிக்கிறார்! வார்சா ஒப்பந்த நாடுகளை — கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிச நாடுகளை ருமேனிய மக்களுக்கு ஆதரவாக நிற்குமாறு கோருகிறார்.

ருமேனியா, வார்சா ஒப்பந்த நாடாக இருந்தபோதிலும், கோர்பசேவ் பாணியிலான முதலாளித்துவ மறுசீரமைப்பை சியாஸ்கோ கும்பல் ஏற்கவில்லை. கோர்பசேவ் பாதையை எதிர்த்ததோடு, பிரஷ்னேவ் பாணியிலான அதிகார வர்க்க முதலாளித்துவ ஆட்சியையே ஆதரித்து செயல்படுத்தி வந்தது. இதே பாணியிலான அதிகார வர்க்க முதலாளித்துவ ஆட்சி முறையை சீனாவின் டெங் கும்பல் பின்பற்றி வருவதால் சியாஸ்கோ கும்பல் சீனாவின் தோழனாகியது.

அதிகாரவர்க்க முதலாளித்துவமா? அப்பட்டமான முதலாளித்துவமா? எந்தப் பாதையில் செல்வது என்பதுதான் கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிச நாடுகளின் மையப் பிரச்சினையாக உள்ளது. இத்தகைய வேறுவேறு வடிவிலான முதலாளித்துவ அமைப்பை நிறுவுவதற்காக கம்யூனிசத் துரோகிகள் பிளவுபட்டு மோதிக் கொள்கின்றனர். இதர கிழக்கு ஐரோப்பிய போலி சோசலிச நாடுகளில் அதிகாரவர்க்க முதலாளித்துவத்தை ஆதரிக்கும் ஆளுங்கும்பல், அப்பட்டமான முதலாளித்துவப் பாதையாளர்களுடன் சமரசம் செய்து கொண்டு படிப்படியாக ஆட்சியதிகாரத்தை ஒப்படைத்து விட்டது. ருமேனியாவில் இது, ஆளும் சியாஸ்கோ கும்பலிடமிருந்து அதிகாரத்தைப் பிடுங்குவதற்கான உக்கிரமான உள்நாட்டுப் போராக நடந்துள்ளது. எனவே இந்த கம்யூனிச துரோக கும்பல்களில் எதையும் சரியென்று ஆதரித்துவிட முடியாது.

ஆனால் ருமேனிய விவகாரத்தை ஏதோ ஜனநாயகம் மற்றும் மனித உரிமைக்கான பிரச்சினையாகக் காட்டி முதலாளித்துவ வாதிகள் பெருங்கூச்சல் போடுகின்றனர். ''கம்யூனிசம் என்றாலே சர்வாதிகாரம்; கம்யூனிசம் தோல்வியடைந்து விட்டது; அழிவு நெருங்கிவிட்டது'' என்ற கருத்தை உலகெங்கும் வேகமாகப் பரப்புகின்றனர்.

முதலாளித்துவவாதிகள் கதைப்பது போல், இது கம்யூனிசத்தின் தோல்வியை - அழிவைக் குறிக்கவில்லை. போலிக் கம்யூனிஸ்டுகளின் தோல்வியையும் அழிவையும் தான் காட்டுகிறது. கம்யூனிசத்தை சீர்திருத்துகிறோம் என்ற பெயரில் முதலாளித்துவத்தை மீட்கும் கம்யூனிசத் துரோகிகள் தான் சர்வாதிகாரிகளாக, சொந்த நாட்டையே சூறையாடும் கொள்ளையர்களாக உள்ளனர் என்பதையே ருமேனிய விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

● மணி

போலிக் கம்யூனிஸ்டுகளின் புதிய சித்தாந்தம்

# மீசை வைத்தால் வீரன்! மீசையை எடுத்தால் ஞானி!

ருஷ்யா மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்படும் மாற்றங்கள் உலகை குலுக்குகின்றன. இந்தியாவிலுள்ள சி.பி.ஐ., சி.பி.(எம்).ஐ; யு.சி.பி.ஐ., எம்.சி.பி.ஐ., சுசி (எஸ்.யு.சி.ஐ.) மற்றும் பிற உதிரிக் கட்சிகள் முதல் வி.மி.குழு (ஐ.பி.எ.ஃப்) வரையிலான அதிகாரபூர்வ கம்யூனிஸ்டுக் கட்சிகள் அனைத்தும் இந்த மாற்றங்களுக்குத் தகுந்த விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டுள்ளார்கள். ஏனெனில் எதற்கெடுத்தாலும், ''ருஷ்யாவைப் பார்! சோஷலிச நாடுகளைப் பார்!'' என்று இதுநாள் வரை குதித்தார்கள். இப்போது கல்லுளிமங்கன் போல மௌனம் சாதிக்கிறார்கள். அல்லது அவர்கள் முன்பு சொன்னதை எல்லாம் எவ்வித விளக்கமும் காரணமும் கூறாது உதறிவிட்டு அந்நாடுகளின் புதிய தலைமைகளுக்கும் மாற்றங்களுக்கும் தொடர்ந்து துதிபாடுகிறார்கள். இப்படிச் செய்வது பொது மக்களையும் தமது அணிகளையுமே அவமானப்படுத்துவதும் மோசடி செய்வதுமாகும்.

ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு குருச்சேவ் - பிரஷ்நேவ் கும்பல் ருஷ்யாவின் கட்சி, அரசுத் தலைமையைப் பிடித்தது. 'ஸ்டாலினுடைய தனிநபர் வழிபாடு, சர்வாதிகாரத்தினால் பல கேடுகள் விளைந்துவிட்டதாகக் கூறி அடுக்கடுக்கான பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தது. ''ருஷ்யாவில் சோசலிசக் கட்டுமானம் - கம்யூனிசத்தின் முதல் கட்டம் பூர்த்தியாகிவிட்டது. வர்க்க வேறுபாடுகளும் வர்க்கப் போராட்டங்களும் இனிமேல் கிடையாது. எனவே பாட்டாளி வர்க்கக் கட்சியும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் தேவையில்லை. 20 ஆண்டுகளில் கம்யூனிச சமுதாயத்தை அமைத்து விடுவோம்'' என்றது குருச்சேவ் -பிரஷ்நேவ் கும்பல்.

''சோசலிசம் உலகின் சக்திமிகு அமைப்பாக வளர்ந்து விட்டதால் மற்ற நாடுகளில் இனிமேல் புரட்சி அவசியமில்லை. நேரு போன்ற முற்போக்காளர்களைக் கொண்டு சமாதானப் பூர்வமாக முன்னேறி சோசலிசத்தை அடைய வேண்டும். அணு ஆயுதங்கள் பெருகிவிட்டதால் இனி ஓர் உலகப் போர் மூளுமானால் உலகமே அழிந்து விடும்; எனவே ஏகாதிபத்தியங்களுடன் சமாதான சகவாழ்வு தான் சரியான கொள்கை'' என்றார்கள்.

இதையொட்டி உலகம் முழுவதுமுள்ள கம்யூனிச இயக்கத்தில் பெரும் பிளவு ஏற்பட்டது. ''குருச்சேவ் - பிரஷ்நேவ் கும்பலின் சீர்திருத்தங்கள் நவீன திரிபுவாதமாகும்; ருஷ்யாவில் மீண்டும் முதலாளித்துவத்தை நிறுவுவதாகும்'' என்று சீனா, அல்பேனியா தலைமையில் சில கம்யூனிஸ்டுக் கட்சிகள் நிராகரித்து எதிர்த்தன. அமெரிக்காவுடன் போரில் ஈடுபட்டிருப்பதைக் காரணங்காட்டி வியட்நாமிய, கொரிய கம்யூ. கட்சிகள் நடுநிலை வகித்தன. ஜப்பான், ஐரோப்பா, சிலி கம்யூ. கட்சிகள் குருச்சேவ் - பிரஷ்நேவ் கும்பலை ஆதரித்தன.

இந்தியக் கம்யூ. கட்சி பிளவுபட்டது. டாங்கே, ராஜேஸ்வரராவ் தலைமையிலான பிரிவுகள் அப்போதிருந்தே ருஷ்யாவில் எந்தத் தலைமை, மாற்றங்கள், கொள்கைகள் வந்தாலும் விசுவாசமாக ஆதரிக்கின்றன. கம்யூ. கட்சியிலிருந்து பிளவுபட்டு சி.பி.எம்.ஐ நிறுவிய நம்பூதிரிபாடு, ஜோதிபாசு தலைமை குருச்சேவ் - பிரஷ்நேவ் செய்யும் மாற்றங்கள் நவீன திருத்தல் வாதம் என்று கூறி சீனாவை ஆதரித்தது.

1967 நக்சல்பாரி உழவர் பேரெழுச்சியை சி.பி.எம். கூட்டணி அரசு ஒடுக்கிய பிறகு அக்கட்சியை திருத்தல்வாதக் கட்சியென்று நிராகரித்துவிட்டு இ.பொ.க. (மா-லெ)யை சீனக் கட்சி ஆதரித்தது. அதோடு ருஷ்யா ஒரு சமூக ஏகாதிபத்திய நாடாகவும், பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அதன் தொங்குசதை முதலாளித்துவ நாடுகளாக மாறியதாக சீனாவும் பிற புரட்சிகரக் கட்சிகளும் முடிவு செய்தன.

அப்போதிருந்து சி.பி.எம். பல சந்தர்ப்பவாத நிலைப்பாடுகள் எடுத்து வருகிறது. ''ருஷ்யா மற்றும் பிற கி.ஐரோப்பிய நாடுகளில் உள்ளவை நவீன திரிபுவாதக் கட்சிகள்; அதே சமயம் அவை சோசலிச நாடுகள்; சீன, ருஷ்யக் கட்சிகள் கருத்து வேறுபாடுகளை மறந்து ஐக்கியப்பட வேண்டும்'' என்று கூறி வியட்நாம், கொரியக் கட்சிகளைப் போல நடுநிலை வகிப்பதாக நடித்தது.

ஆனால் பிறகு ருஷ்யக் கம்யூ. கட்சி




படிப்பகம்

www.padippakam.com



வார்சா மாநாட்டில் விருந்துண்டு களிக்கும் ரஷிய அதிபர் கோர்ப்பசேவ், ருமேனியாவின் சியாஸ்கோ, கி.ஜெர்மனியின் ஹோனிக்கர், போலந்தின் ஜெருஜெல்ஸ்கி, செக்கோஸ்லாவியாவின் மிலோஸ் ஜேக்ஸ் ஆகியோர். இதில் கோர்ப்பசேவ், ஜெருஜெல்ஸ்கி தவிர மற்றவர்கள் தூக்கியெறியப்பட்டுள்ளனர். ஜெருஜெல்ஸ்கி, போலந்தின் பொம்மைத் தலைவராக உள்ளார்.

நவீனத் திரிபுவாதக் கட்சி என்ற கணிப்பையும் கைவிட்டுவிட்டது. இப்போது செக்கோஸ்லாவாக்கியாவில் ஆட்சிக்குத் திரும்பியுள்ள டுபூப்செக் தலைமையிலான கும்பல் அப்போது (1968) முழுமையான முதலாளித்துவ மீட்சிக்கு முயன்றபோது செக் மீது ருஷ்யா படையெடுத்தது. இதைப் போன்ற ருஷ்யாவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள் அனைத்தையும் சி.பி.எம். நியாயப்படுத்தியது.

குருச்சேவைத் தூக்கியெறிந்து பிரஷ்நேவ் கும்பலின் ஏகபோக ஆட்சி வந்த போது எவ்வித விளக்கமும், காரணமும் கூறாது இந்தியப் போலி கம்யூ. கட்சிகள் அங்கீகரித்தன. பிரஷ்நேவ் கும்பல் அமெரிக்காவுடன் போட்டி போட்டுக் கொண்டு பின்பற்றிய ஆக்கிரமிப்பு, ஆயுதக் குவிப்பு ஆகிய ஏகாதிபத்தியக் கொள்கைகளையும், உள்நாட்டில் பாசிச அதிகாரவர்க்க முதலாளித்துவ சுரண்டல், லஞ்ச ஊழல், கலாச்சார சீரழிவுகளையும் எதிர்த்து கம்யூனிஸ்டு புரட்சியாளர்கள் அம்பலப்படுத்தினார்கள். குறிப்பாக ஆஃப்கான், கம்பூச்சிய ஆக்கிரமிப்பை எதிர்த்தார்கள். ஆனால் இவை அமெரிக்க ஏஜெண்டுகள் சோசலிச நாடுகளுக்கெதிராகச் செய்யும் பொய்ப் பிரச்சாரங்கள் என்று சி.பி.ஐ.; சி.பி.எம். முதலிய போலிகள் நிராகரித்தனர். சி.பி.எம். நிலைப்பாடுகளையே 'கசி', எம்.சி.பி.ஐ. போன்ற போலிகளும் எடுத்துள்ளனர்.

அதன்பிறகு, ருஷ்யாவில் கோர்பசேவ் கும்பல் ஆட்சிக்கு வந்தது. அங்கு அரசியல், பொருளாதார நெருக்கடிகள், லஞ்ச ஊழல், கலாச்சார சீரழிவுகள் நிலவுவதாகவும், ஆஃப்கான் முதலிய ஆக்கிரமிப்புகள் தவறு என்றும் அறிவித்தது. இதற்கெல்லாம் காரணம் ஸ்டாலின் - பிரஷ்நேவ் ஆட்சிகள் தான் என்றது. மேற்கு முதலாளித்துவ நாடுகளைப் போலவே தனிச்சொத்துடமை, அரசு அமைப்பு முறை போன்றவைகளை பகிரங்கமாகவே கொண்டு வர ஆரம்பித்தது. பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் பெரும் மாற்றங்கள் துவங்கின. போலந்து தேர்தல்களில் 'கம்யூனிஸ்ட்' கட்சி தோற்று 'கம்யூனிஸ்ட்' அல்லாத சாலிடாரிட்டி அரசு அமைந்தது. ஹங்கேரிய கம்யூ. கட்சி கலைக்கப்பட்டு, இனிமேலும் சோசலிச அமைப்பு கிடையாது, ஜனநாயக அமைப்புதான் என்று அறிவித்தார்கள். செக், பல்கேரியாவிலும் இதே 'சீர்திருத்தங்கள்' வந்ததோடு, ஏற்கனவே யுகோஸ்லேவியா இப்படித்தான் உள்ளது. சீர்திருத்தங்களை' எதிர்த்த ருமேனிய சர்வாதிகாரி சிசேஸ்கூ, ருஷ்ய - அமெரிக்க ஆதரவு இராணுவப் புரட்சியினால் தூக்கி யெறியப்பட்டார்.

ஸ்டாலின் பற்றிய விமர்சனங்களை ஓரளவு சி.பி.எம். எதிர்ப்பது தவிர அதுவும் இந்தியாவிலுள்ள பிற அதிகாரபூர்வ 'கம்யூனிஸ்டு'க் கட்சிகளும் இந்த மாற்றங்களை ஆதரிக்கின்றன. ஆனால் எதுவுமே நடவாததுபோல மௌனம் சாதிக்கின்றன. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஆதரிக்கும் இந்திய பிழைப்பு வாத, அரசியல்வாதிகளைப் போல முதலில் ஆட்சி நடத்துபவர்களது செயல்கள் அத்தனையையும் இந்தப் போலிகள் ஆதரிக்கிறார்கள். அந்த ஆட்சி தூக்கி எறியப்பட்டு புதிதாக ஆட்சிக்கு வருபவர்களது செயல்களையும் இந்தப் போலிகள் ஆதரிக்கிறார்கள். ருஷ்யா ஆஃப்கானை ஆக்கிரமித்ததை ஆதரித்து அங்கே சோசலிச சமுதாயம் வந்துவிட்டதாக எழுதினார்கள். இப்போது ஆஃப்கானுக்குப் படை அனுப்பியதே தவறு என்ற கோர்பியின் முடிவையும் ஆதரிக்கிறார்கள். டுபூப்செக்கின் சீர்திருத்தங்களை முறியடிக்க ருஷ்யப்படை அனுப்பியதையும் ஆதரித்தார்கள். இப்போது டுபூப்செக் திரும்பிவந்து அதே சீர்திருத்தங்கள் செய்வதையும் ஆதரிக்கிறார்கள். ருமேனியாவின் சர்வாதிகாரி சிசேஸ்கூவை சோசலிச சிற்பியென ஆதரித்தார்கள். இப்போது அவரைத் தூக்கி எறியும் இராணுவப் புரட்சியையும் ஆதரிக்கிறார்கள். கிழக்கு - மேற்கு ஜெர்மனிக்கிடையே சுவர் எழுப்பியதையும் ஆதரித்தார்கள். இப்போது அதைத் தகர்ப்பதையும் ஆதரிக்கிறார்கள்.

ருஷ்யா மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலாவது கட்சிகளின் தலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு, புதியவர்கள் பழையதைச் சாடி நிராகரித்துவிட்டு, அதற்குக் காரணமானவர்களைத் தண்டித்து விட்டு, மாற்றங்களைச் செய்கிறார்கள். ஆனால் இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அதே தலைமைகள் எவ்வித விளக்கமும் காரணமும் கூறாது புதிய மாற்றங்களை ஏற்று நியாயப்படுத்துகின்றன. செக், ஆஃப்கான் ஆக்கிரமிப்பு மற்றும் பிற உள்நாட்டு விவகாரங்களில் பிரஷ்நேவ், ஆந்தரபோவ், ஹோனிக்கர், சிசேஸ்கூ போன்றவர்களின் நடவடிக்கைகள் தவறு என்றால் அவற்றை நியாயப்படுத்திய இந்தியா போன்ற பிற நாடுகள் போலிக் கம்யூனிஸ்டுகளின் செயல்களும் தவறுதானே! இதற்குப் பொறுப்பேற்கும் நேர்மை சிறிதும் இல்லாத போலிகள் ஏற்படும் எல்லா மாற்றங்களுக்கும் புதிய தலைமைக்கும் சந்தர்ப்பவாதமாக ஆதரவளிக்கின்றன. தனியுடமை, முதலாளித்துவ அரசு, மேற்கத்திய கலாச்சார, மூலதன ஊடுருவல், சோசலிசத்தின் மிச்சசொச்சமான பெயர்களைக் கூட நிராகரிப்பது என்று பகிரங்கமாகவே ருஷ்யா மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மாற்றங்கள் வருகின்றன. ஆனால் இந்த மாற்றங்கள் சோசலிசத்தின் வளர்ச்சிக் கூட்டத்தில் முன்னேற்றம், புதிய சோசலிச சோதனை முயற்சிகள், சோசலிசத்தின் வேறுபட்ட வடிவங்கள் என்று இந்தியப் போலிகள் நியாயப்படுத்துகிறார்கள். போலிகளின் இந்த மோசடிகளைப் புரட்சிகர அணிகள் முறியடிக்க வேண்டும். புரட்சிகர இயக்கத்துடன் இணைய வேண்டும். அதன்மூலம் மார்க்சிய - லெனினியத்தைப் பாதுகாக்கும் இன்றைய மகத்தான பணிக்குத் தோள் கொடுக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com




★ நமது நாட்டில் மக்கள் திரள் பாதையில் மக்கள் யுத்தம் நடத்திக் கொண்டிருக்கும் மக்கள் யுத்தக்குழுவினரை இடது தீவிரவாதிகளாக சித்தரிப்பதும், தனிநபர் பயங்கரவாதிகள் என்று கொச்சைப்படுத்துவதும் மார்க்சிய - லெனினிய அடிப்படையில் சரியானதா?

— சி.அறிவுமணி, ஊற்றங்கரை.

● இ.பொ.க. (மா.லெ)யின் அடிப்படை நிலைப்பாடுகளை ஏற்றுக் கொண்டிருப்பதாலேயே மக்கள் யுத்தக் குழுவைப் புரட்சிகரக் குழுவாகக் கருதுகிறோம். ஆனால் அந்நிலைப்பாடுகளை அமுல்படுத்துவதற்கான அரசியல் கோட்பாடுகளோ, அரசியல் - இராணுவ யுத்த தந்திரங்கள், போர்த் தந்திரங்களோ, அமைப்பு முறைகளோ எதுவும் அதனிடம் கிடையாது. அதற்கான அரசியல் - இராணுவப் போராட்டங்களும் கிடையாது. மக்களுடைய அன்றாடக் கோரிக்கைகளுக்கான போர்க்குணமிக்க பொருளாதாரவாதப் போராட்டங்களையே மக்கள் யுத்தமாக வளர்த்தெடுத்துவிட முடியும் என்ற மார்க்சிய - லெனினிய விரோத இடதுசந்தர்ப்பவாத வழிமுறையையே பின்பற்றுகிறது.

உதிரியான சில 'அரசியல்' முழக்கங்களோடு போர்க் குணமிக்க பொருளாதாரவாத அடிப்படையிலான மக்கள்திரள் அமைப்புகளும், ஆயுதந்தாங்கிய குழுக்களுமே அக்குழுவிடம் உள்ளன. எனவே, ''மக்கள்திரள் பாதையில் மக்கள் யுத்தம் நடத்திக் கொண்டிருப்பதாக''க் கூறுவது தவறானது. இடதுதீவிரவாதக் குழுவாகச் சித்தரிப்பது சரியானது.

தனிநபர் அழித்தொழிப்புகள், புரட்சியின் எதிரிகள் அல்லாத நபர்களைத் தாக்குவது, வங்கிக் 'கொள்ளை'கள் நடத்துவது, அரசு வாகனங்கள் - அலுவலகங்கள் - ரயில்வே நிலையங்களைக் கொளுத்துவது ஆகியவற்றைப் போராட்ட வழிமுறையாகக் கொண்டுள்ளனர். இவை தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகள் என்று உண்மையைக் கூறுவது கொச்சைப்படுத்துவதாகாது.

★ மார்க்சிய - லெனினிய அடிப்படையிலான ஆய்வு என்ற பெயரில் இந்திய உற்பத்தி முறையைத் தவறாகக் கணித்து நக்சல்பாரி இயக்கத்தின் அடிப்படை நிலைப்பாட்டை விட்டு ஓடிப்போன மன ஓசை - கேடயம் குழுவினரை அம்பலப்படுத்துவதோடு நிற்காமல், இவர்களை எதிரிகளாகப் பாவிப்பது சரிதானா? ஜனநாயக சக்திகளாக இவர்களை ஏற்றுக்கொள்வதில் என்ன தவறு?

— சி.சந்திர மோகன், ஊற்றங்கரை.

● மனஓசை - கேடயம் குழுவினரை ஓடுகாலிகளாகவே கருதுகிறோம். எதிரிகளாகப் பாவிக்கவில்லை. அரசியல் - சித்தாந்த துரோகம் செய்து ஓடிப் போனவர்களை அந்த முறையிலேயே போராடி வெல்ல முடியும் என்று செயல்படுகிறோம். எதிரிகளாகப் பாவித்திருந்தால் வேறுமாதிரியான போராட்ட முறையை அல்லவா வைத்திருப்போம்! ஆனால் அரசியல் சித்தாந்த துரோகத்தோடு அமைப்பு ரீதியிலும் அதை நீட்டிப்பார்களேயானால் அந்த மாதிரியான போராட்டங்களும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

அதே சமயம் மற்றபிற போலிக் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகளைப் போல இவர்களைக் கருதமுடியாது. ஏனெனில், டிராட்ஸ்கியவாதிகளைப் போல புரட்சிகர இயக்கத்தை உணர்வுபூர்வமாக சீர்குலைக்க முயலும் சதிகாரர்களாக இருக்கிறார்கள். இதை இ.பொ.க. (மா-லெ)யின் மாநில அமைப்புக் கமிட்டி நிரூபித்திருக்கிறது. ஆகவே கேடயம் - மனஓசை கும்பலை ஜனநாயக சக்திகளாக ஏற்க முடியாது.

★ ருஷ்ய சமூக ஏகாதிபத்தியத்தை 'சோசலிச நாடு' என்று ஏற்றுக் கொண்டு ஆயுதப் போராட்டப் பாதையில் சட்ட விரோதமாகவும் நாடாளுமன்றப் பங்கேற்பின் மூலம் சட்டபூர்வமாகவும் செயல்படும் வினோத் மிஸ்ரா குழுவினரைப் பற்றிய தங்களின் கணிப்பு என்ன?

— சி.அறிவுமணி, ஊத்தங்கரை.

● நம்பூதிரிபாடு, ராஜேஸ்வரராவ், டாங்கே, ஓம்கார் போன்றவர்களின் தலைமையிலான மற்ற பிற போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளைப் போன்றதுதான் வினோத் மிஸ்ரா குழுவும். ஆனால், அவற்றை விட மோசமான - ஆபத்தான இரண்டு விவகாரங்கள் இவர்களிடம் உண்டு. (1) ஏகாதிபத்திய உளவாளிகளின் தன்னார்வக் குழுக்களுடன் தெரிந்தே கூட்டு வைத்துத் தஞ்சமடைந்தவர்கள் (2) இன்னமும் இ.பொ.க. (மா-லெ) என்கிற பெயரை வைத்துக் கொண்டு புரட்சிகர அணிகளைக் குழப்பி சீரழிக்கிறார்கள்.

★ லெனின் புரட்சிக் காலகட்டங்களிலும் புரட்சிகர அரசு அமைத்த பிறகும் கூட போல்ஷ்விக்கு நிலைப்பாடு அல்லாதோரையும் கூட தன்னோடு சகபுரட்சியாளராக அங்கீகரித்திருந்தது (விமர்சனங்களினூடாக). ஆனால் தங்களின் பத்திரிக்கை தொடர்ந்து மக்கள் கலாச்சாரக் கழகம், டி.என்.ஓ.சி. போன்ற அமைப்புகளைத் தொடர்ந்து ஓடுகாலிகள் என்றும் இன்னும் மோசமாகவும் பத்திரிக்கையில் வெளிப்படையாக சண்டையிட்டு, மக்கள் மத்தியில் புரட்சியாளர்கள் மத்தியில் அவநம்பிக்கையை ஏற்படுத்தியதன் காரணம். இது மிகவும் மோசமான அணுகுமுறை என்று திட்டவட்டமாகக் கருதுகிறேன். விளக்கம் வேண்டும்.

● கடந்த காலங்களில் இடதுசந்தர்ப்ப வாதத்துக்குள் வீழ்ந்து கிடந்தபோது மாற்றுக் குழுக்களுக்கெதிராகப் பல அவதூறு செய்து வந்தன சில புரட்சிகரக் குழுக்கள். இப்போது அலை இடதுகோடியிலிருந்து மீண்டு வலதுகோடிக்கு சரிந்து விழுகின்றன. எனவே கடந்த காலத் தவறுகளுக்குப் 'பரிகார'மாக ஓடுகாலிகள் - சீர்குலைவுவாதிகள் உட்பட எல்லாப் போலிகளையும் புரட்சியாளர்களாகக் கருதித் தழுவுக் கொள்கின்றன. இன்னமும் இடதுசந்தர்ப்ப வாதத்துக்குள் சிக்கிக் கொண்டுள்ள ஓரிரு குழுக்களும், அதற்கு ஈடுகட்டுவதற்காக அதே வேலையைச் செய்கின்றன. இந்தப் போக்கின் பிரதிபலிப்புதான் இந்தக் கேள்வி!

போலிகளுடன் கூடிக்குலாவும் நோக்கத்தை நியாயப்படுத்துவதற்காக இப்போது லெனினுடைய, போல்ஷ்விக்குகளுடைய அணுகுமுறைகள் மீது நிறையவே தவறான வியாக்கியானங்களும் புனைந்துரைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. ☆ ''மென்ஷ்விக்குகளுடன் கூட ஐக்கியப்படுவதற்கான காங்கிரசுகளை லெனின் - போல்ஷ்விக்குகள் கூட்டினர்'' என்கிறார்கள். உண்மைதான். 2-வது 4-வது, 5-வது காங்கிரசுகள் மென்ஷ்விக்குகள் மற்றும் பிற திரிபுவாதிகளையும் கூட ஐக்கியப்படுத்தும் நோக்கத்தோடு நடந்தன. ஆனால் அவற்றின் முடிவுகள், அனுபவங்கள் என்ன? அந்தக் காங்கிரசுகளிலும் அதற்குப் பிறகும் கட்சியின் வெவ்வேறு பிரிவினர் தனித்தனியேதான் இயங்கினர். பெயரளவிலான ஒற்றுமைதான் நிலவியது. மற்ற பிரிவுகளுடன் ஒரே கட்சியாக இயங்க இருக்க முடியாது என்று உணர்ந்த போல்ஷ்விக்குகள் 10 ஆண்டுகளுக்குப் பிறகு, 1912இல் பிரேக்கு நகரில் ஆறாவது மாநாடு கூட்டி, தாம் மட்டுமே தனிக்கட்சியாக அமைத்துக் கொண்டார்கள். ''தனது அணி வரிசையில் இருந்து சந்தர்ப்பவாதிகளைக் களையெடுப்பதினால் கட்சிபலம் பெறுகிறது'' என்று அனுபவத்தைத் தொகுத்தார்கள்.

☆ ''டிராட்ஸ்கி கூட போல்ஷ்விக் கட்சியில் சேர்ந்திருந்தார். ஆகவே தத்துவத் துறைகளில் ஜனநாயக மத்தியத்துவத்தை வலியுறுத்தத் தேவையில்லை. அடிப்படையில் மாறுபட்டவர்கள் கூட ஒரே கட்சியாக இருக்கலாம்'' என்கிறார்கள். டிராட்ஸ்கி கட்சியின் அடிப்படை நிலைப்பாடுகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்வதாகக் கூறி, அக்டோபர் புரட்சிக்கு நான்கு மாதத்துக்கு முன்பு, 1917 ஜூலையில்தான், ஆறாவது கட்சிக் காங்கிரசின் போதுதான் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அதற்கு முன்பு கட்சியை வெளியிலிருந்தும், அதற்குப் பிறகு கட்சிக்கு உள்ளிருந்தும் சீர்குலைப்பதுதான் அவரது நோக்கமாக இருந்தது என்று அனுபவங்கள் காட்டின.



படிப்பகம்

www.padippakam.com




இவ்விரு உதாரணங்களும் எதைக் காட்டுகின்றன? லெனின் செய்தவைகளை எல்லாம் அப்படியே திரும்பச் செய்வது சரியாகுமா? அனுபவங்களைத் தொகுத்து முன்னேறுவது சரியாகுமா?

☆ இதோ, இந்தத் தோழர் சொல்கிறார், இன்னுமொரு தவறான தகவல். போல்ஷ்விக்குகளோடு சோசலிசப் புரட்சியாளர்கள், மென்ஷ்விக்குகள் போன்றவர்களையும் சேர்த்துக் கொண்டு கூட்டாட்சி அமைக்க வேண்டும் என்று மாக்சிம் கார்க்கி உட்பட பலரும் அக்டோபர் புரட்சி நாட்களில் வாதாடினர். "முடியவே முடியாது; போல்ஷ்விக்குகளுக்குத்தான் ஆளும் உரிமை உண்டு" என்று லெனின் மறுத்து விட்ட போது அவரை வறட்டுவாதி, அதிகார வெறிபிடித்தவர் என்று சாடினர். போல்ஷ்விக்குகளின் நிலைப்பாடுகளை ஏற்றுக் கொண்டு ஆதரித்தாலும், விவசாயிகளைப் புரட்சிக்கு வென்றெடுக்கவும் இடதுசாரி சோசலிஸ்டுப் புரட்சியாளர்களை மட்டும் ஆட்சியில் சேர்த்துக் கொண்டனர். ஜெர்மனியுடனான சமாதான ஒப்பந்தத்தை எதிர்த்து அவர்கள் வெளியேறிய போதும் போல்ஷ்விக்குகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை.

☆ காவுத்ஸ்கி, பிளக்கனோவ் போன்றவர்களுக்கு எதிராக லெனின் பிரயோகித்த வாசகங்கள் - வார்த்தைகளில் நூற்றில் ஒரு பங்கு கூட நாம் ஓடுகாலிகளுக்கு எதிராக எழுதவில்லை. ஆனால் இதையே இவர்கள் மிக மோசமானதாகக் கூறுகிறார்கள். அதற்குக் காரணம் நமது அணுகுமுறை அல்ல. இவர்கள் ஒரு மார்க்சிய - லெனினிய நிலைப்பாடு எடுத்து எப்போதாவது அதற்காக அரசியல் சித்தாந்தப் போராட்டம் நடத்தியிருந்தால் அது இவர்களுக்குப் புரியும். ஓடுகாலிகள், சீர்குலைவுவாதிகளுக்கு எதிரான நமது போராட்டத்தின் அரசியல் சித்தாந்த உள்ளடக்கத்தை உதறிவிட்டு அணுகுமுறை - வடிவத்தைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதே இவர்களின் ஓட்டாண்டித் தனத்தைத்தான் குறிக்கிறது. அக்டோபர் புரட்சியைக் கூட சமரசவாதிகள் என்ன சொல்லி எதிர்த்தார்கள் தெரியுமா? "நாங்கள் புரட்சியை எதிர்க்கவில்லை. அதை போல்ஷ்விக்குகள் செயல்படுத்தும் முறையைத்தான் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை" என்றார்கள்.

இந்த இலட்சணத்தில் இவர்கள் தம்மை போல்ஷ்விக்குகள் என்று கூறிக் கொள்கிறார்கள். உண்மையில் இப்போது இவர்கள் போல்ஷவிக்குகள் அல்ல. போல்ஷவிக்குகளுக்கும் கலைப்புவாதிகள் மற்றும் ஓட்சேவிக்குகளுக்கும் இடையே "ஒரு முதுகெலும்பில்லாத மண்புழுவைப் போல நெளிந்து கொண்டு ஒற்றுமை பேசிய டிராட்ஸ்கி"யின் தலைமையிலான ஆகஸ்டு கும்பலை போன்றவர்கள். பகிரங்கமான சித்தாந்தப் போராட்டம், அவநம்பிக்கையை ஏற்படுத்தும் என்பது கூட லெனினிய அனுபவத்துக்கு மாறான குட்டி முதலாளித்துவ பீதிதான்!

★ *நமது குறிக்கோள் இந்தியா முழுமைக்குமா? தமிழகம் மட்டுமா?*

● இந்தியா முழுமைக்கும் தான்! இந்த நாடு பல்வேறு தேசிய இனங்கள் மற்றும் தேசிய சிறுபான்மைப் பிரிவுகளைக் கொண்டிருந்தாலும் ஒரு பொது அரசின் ஆளுமையின் கீழ் இருப்பதால் நாடு முழுமைக்குமான புரட்சிகர இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதே மார்க்சிய - லெனினிய கடமையாகிறது.

★ *மற்ற சீரழிந்த கலாச்சார இதழ்களுக்கும் நமது புரட்சிகர இதழ்களுக்கும் வேறுபாட்டினையும் மற்ற சீரழிந்த காலச்சார இதழ்களை அம்பலப்படுத்தி முன்னுரை என்ற சிறிய தலைப்பில் சுருக்கமாகவும் தெளிவாகவும் இனி வெளியிட முடியுமா?*

● நமது பத்திரிக்கைகளின் இலட்சியம் என்பதாக ஒவ்வொரு இதழ்களிலும் வெளியிடவேண்டும் என்று சொல்கிறாரா என்று தெரியவில்லை. இந்த வேறுபாடு மட்டும் நமது இலட்சியத்தைத் தெளிவுபடுத்தாது என்பதால் அது சாத்தியமில்லை. அல்லது ஒரு தனிக் கட்டுரையாக எழுதச் சொல்லுகிறாரா என்றும் தெரியவில்லை. ஆனால் அது அவசியமில்லை. இருந்தபோதும் தொடர்ந்து சீரழிந்த கலாச்சார இதழ்களை எடுத்துக்காட்டுகள் - ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துவது அவசியம். செய்வோம்!

★ *தமிழரசனின் தியாகம் போற்றக்கூடியதா? இல்லை என்றால் ஏன்?*

● போற்றக்கூடியதல்ல. ஏனெனில் இந்தியப் புரட்சிக்கு அவரது பங்களிப்பைவிட அவர் இழைத்த தீங்குகளே அதிகம். மார்க்சிய - லெனினிய இயக்கத்தில் இருந்தவரை இடது தீவிரவாதத்துக்கு வலிந்து நின்று மேலும் அதைச் செழுமைப்படுத்தவே முயன்றார். அதனால் தேவையற்ற இழப்புகளைக் கொண்டு வந்ததோடு புரட்சிகர இயக்கத்தைப் பிளவுபடுத்தியவர்களில் ஒரு தலைவராக இருந்தார். அவரது பாதையின் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டு சரியான மாற்றுப் பாதை முன் வைக்கப்பட்ட போதும், யதார்த்த நிலைமைகள் இடித்துரைத்த போதும், குட்டி முதலாளித்துவ வீம்பும் தன்னகங்காரமும் காரணமாக தவறானவற்றையே உயர்த்திப் பிடித்தார். எனவே "சுயநலனுக்காக அவர் தவறுகள் செய்யவில்லை, தவறானதாக இருந்தாலும் 'ஏதோ' இலட்சியத்துக்காக பாடுபட்டு உயிர்நீத்தார்' என்று கூறுவதும் ஏற்கக் கூடியதல்ல.

இழப்பு, தியாகம், சில நடவடிக்கைகளுக்காக தற்கொலைக் குழுக்கள் அமைத்து சுயதியாகம் செய்வது - இவை புரட்சிகர இயக்கத்தில் தவிர்க்க முடியாததுதான். ஆனால் சுய அழிவுப் பாதையை புரட்சிகர இயக்கம் ஒருபோதும் ஏற்க முடியாது. போற்றவும் முடியாது. அதுதான் தமிழரசனின் பாதை! கடைசியாக மார்க்சிய - லெனினிய இயக்கத்தைவிட்டு இனவாதியாக சீரழிந்து போனார். இனவாத முழக்கத்தையும் பயங்கரவாத வழிமுறையையும் மேற்கொண்டு சுய அழிவைத் தேடிக் கொண்டார். இதைப் போய் தியாகம் என்று எப்படிப் போற்ற முடியும்!

★ *புரட்சிகர அரசியல் பத்திரிக்கை 5வது ஆண்டு வரை சாதித்தது என்ன?*

● முதலாவதாக, நான்காண்டுகளாக இப்படி ஒரு பத்திரிக்கையை நடத்த முடிந்திருக்கிறது. இரண்டாவதாக, நடப்பு அரசியல், பொருளாதார, சமூக விவகாரங்கள் மீது விமர்சன - ஆய்வுகளை முன்வைத்து புரட்சிகரக் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் முயற்சி இருக்கிறது. மூன்றாவதாக, இதைச் சாத்தியமாக்கும் வகையில் பயிற்சியுடைய தோழர்களைக் கொண்ட அமைப்பு உருவாகியிருக்கிறது. இவை மூன்றுமே நமது நாட்டுப்புரட்சி இயக்கத்துக்கு புதிய அனுபவங்களாக இருக்கின்றன. இன்னும் சொல்ல வேண்டுமானால் நமது நிலைப்பாடுகளுடன் உடன்படாத ஒருவர் கேட்கும் பின்வரும் கேள்வியைப் படியுங்கள்.

★ *தங்கள் பத்திரிக்கையின் வளர்ச்சி, வீச்சு அளவுக்கு அமைப்பு வளரவில்லை; காரணம்? பத்திரிக்கையையும் அமைப்பையும் சரியாக இணைக்கவில்லை என்று கருதமுடியுமா?*

● எப்போதுமே விதைப்புக்கும் அறுவடைக்கும் இடையே ஒரு கால இடைவெளி இருக்கவே செய்யும்! அப்புறம் விளைச்சலை விதையின் தரமும் விவசாயியும் மட்டும் தீர்மானிப்பதில்லை!

★ ம.க.இ.க. நடவடிக்கை - செயல்முறைகள் ரகசியமானதா? இல்லையா? ஏன்? ம.க.இ.க.வின் நிர்வாகிகள் அல்லது தலைவர்களின் பெயர்கள் வெளிப்படையாக அறிவிக்கப்படுகிறதா? இல்லையா? ஏன்?

குருதாஸ், பொன்மலை

● ம.க.இ.க.வின் நடவடிக்கைகள் - செயல்முறைகள் ரகசியமானவை அல்ல. அதன் நிர்வாகிகளுடைய பெயர்கள் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுத்தான் செயல்படுகிறார்கள். இப்போதுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு சாத்தியமான அளவு அதிகமான மக்களிடையே இயக்கத்தைக் கொண்டு செல்லவே அவ்வாறு செய்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



உயிருக்குப் போராடும் மழலை; போபால் கோரம்!
ஐந்தாண்டுகளுக்குப் பிறகும் அவலம் தொடர்கிறது



# போபால்: துயரம் தொடர்கிறது

**போபால் துயரம் தொடர்கிறது. ...ரபராதிகள் தண்டிக்கப்படுவதும், கொலை ...ாரர்கள் பாதுகாக்கப்படுவதும் புதிய ஆட் ...யிலும் தொடர்கிறது. ஆட்சி மாறியது! அவலம் மாறவில்லை.**

4500 கோடி ரூபாய் நட்ட ஈடு கோரிய ...ழக்கில் 715 கோடி ரூபாயை நட்ட ஈடாக ...ற்று யூனியன் கார்பைடு கம்பெனியுடன் ...ாஜீவ் கும்பல் செய்துகொண்ட துரோக ஒப் ...ந்தத்தில் சிறுமாற்றம் செய்து தன்னைத் ...ானே உச்சி முகர்ந்து கொள்கிறது வி.பி.சிங் அரசு.

யூனியன் கார்பைடுக்கு எதிரான ...ல்லா வழக்குகளையும் ரத்து செய்து, எதிர் ...ாலத்திலும் அவ்வாறான வழக்குகள் ...தாடுக்க உரிமையில்லை என்று '89 பிப்ர ...ரி 14ந் தேதி உச்ச நீதிமன்றனம் துரோகத் ...ீர்ப்பளித்தது. யூனியன் கார்பைடுக்கு எதி ...ான கிரிமினல் வழக்குகள் தொடுப்பதை ...த்தீர்ப்பு கட்டுப்படுத்தாது என்று வி.பி. ...ங் அரசு டிசம்பர் 22ந் தேதி உச்ச நீதிமன்றத் ...ின் புது தீர்ப்பின் மூலம் திருத்தம் செய்திருக் ...றது.

ஆனால் தீர்ப்பை நடைமுறைப்படுத் ...ும் அதிகார வர்க்கத்தின் அட்டூழியங்களை ...ண்டுகொள்ள மறுக்கிறது, வி.பி.சிங் அரசு.

குறிப்பாக, உலகிலேயே மிகப்பெரும் ...ிஷவாயு 'விபத்தான' போபால் விஷவாயு ...டுகொலைகளுக்கு காரணமானவர்களை ...ும் பாதிக்கப் பட்டவர்களுக்கு தகுந்த பாது ...ாப்பு நிவாரணம் தர மறுப்பவர்களையும் ...ண்டிக்க மறுக்கிறது.

போபால் விஷவாயு விபத்தால் 13 பேர்கள் மட்டுமே நிரந்தரமாக பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள் என்று அதிகார வர்க்கம் அறிக்கை கொடுக்கிறது. நிவாரணம் கோரியுள்ள 1.23 லட்சம் மக்களில், 51,000 பேர்களுக்கு ''எந்த பாதிப்பும் இல்லை'' என்கிறது. 64,663 பேர்களுக்கு மட்டுமே ''சிறு பாதிப்பு'' என்கிறது. 13 பேர்களுக்கு மாதம் 500 ரூபாய் உதவித் தொகையும், 64,664 பேருக்கு வெறும் 1000 ரூபாயும் இடைக்கால நிவாரணம் வழங்க உத்திரவு பிறப்பித்தது நீதிமன்றம். வார்த்தைகளால் விவரிக்க முடியாத அரசு எந்திரத்தின் இந்த ஈனச்செயலை மறு ஆய்வு கூட செய்ய வில்லை.

பெற்றோர்களே இல்லாத - அனைவரையும் விஷவாயுக்கு பலி கொடுத்த- 200க் கும் மேற்பட்ட குழந்தைகள், அநாதைகளாக போபால் நகரத் தெருக்களில் பிச்சைக் காரர்களாக திரிகின்றனர். கணவனை இழந்த 2500க்கும் மேற்பட்ட போபால் சகோதரிகள் இன்னமும் நீதி கிடைக்கும் என்று ஏங்குகிறார்கள்.

அரசு புள்ளிவிவரப்படியே 2.2 லட்சம் பேர் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகிறார்கள். 95,000 பேர் மருத்துவ மனையிலேயே தங்கி சிகிச்சைப் பெறுமளவு விஷவாயுவால் பாதிக்கப்பட்டார்கள். இன்றைக்கும் 1000க்கும் மேற்பட்டோர் அரசு மருத்துவமனை வாசலில் சிகிச்சைக்காக தினமும் காத்துக் கிடக்கிறார்கள்.

சிறிது சிறிதாக கண்பார்வை இழப்பவர்கள், ரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின்களும், உடம்பில் உள்ள செல்களும் செயலிழந்து மெழுகாக உருகிச் சாகும் குழந்தைகள், கோவைப் பழம் மாதிரி வாயும், வயிறும், நுரையீரலும் வெந்து, ஈரல், நரம்பு செல்கள் இறந்து, இதய தசைநார்கள் அறுந்து விகாரமாக மாறும் நோயாளிகள், சிறுநீரகங்கள் சுருங்கி, ரத்தம் கசிந்து, உயிராதாரமான உடல் உள்ளுறுப்புகள் அனைத்தும் அசாதாரணமாக உப்பி போய் அதன் உருவத்தை இழந்து எடை கூடி...

இப்படி எண்ணற்ற நோய்க்கு ஆளாகி உழைப்புச் சக்தி அற்று, முடமாகிக் கிடக்கும் போபால் மக்களைதான் விஷவாயுவால் பாதிக்கவில்லை என்று அதிகாரவர்க்கம் நக்கல் செய்கிறது. வெளித் தோற்றம், தோல், கொள்ளை நோய்கள் முதல் உயிரணு செல்கள் பாதிப்பு நோய் என்று 24க்கும் மேற்பட்ட போபால் விஷவாயு மருத்துவ ஆராய்ச்சி அறிக்கைகள், அனைத்தையும்

நீதி கேட்டுப் போராடும் போபால் மக்கள்; சுற்றி வளைத்துத்
தாக்கும் போலீசு

படிப்பகம்

www.padippakam.com

ராஜீவ் அரசு வெளியிடாமல் முடக்கிவிட்டது!

15க்கும் மேற்பட்ட மருத்துவ நிறுவனங்கள், 24க்கும் மேற்பட்ட தலைசிறந்த மருத்துவ நிபுணர்களின் கீழ் 100க்கும் அதிகமான மருத்துவ விஞ்ஞானிகள் இந்த அறிக்கைகளை பல ஆண்டுகள் கடுமையாக உழைத்து விவரங்கள் சேர்த்தார்கள். அரசு உத்திரவின் மூலம் '88ம் ஆண்டில் இந்த ஆராய்ச்சிகள் அனைத்தையும் நிறுத்தியது, பாசிச ராஜீவ் அரசு.

இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத் (ICMR) தின் துறை தலைவர் டாக்டர் எம்.டி. திவைதி அவர்கள் தலைமையில் போபால் விஷவாயு விபத்து ஆராய்ச்சி மையம் திறக்கப்பட்டு, அதன் அறிக்கைகள் யாவும் முடக்கப்பட்டது.

டாக்டர் திவைதி சொல்கிறார்: ''எங்கள் ஆராய்ச்சிப் பணியின் முக்கிய பின்னடைவுக்கு காரணம், எங்களுடைய ஆராய்ச்சிகளை வெளியிடவோ, வெளிப்படையாக விவாதிக்கவோ, அரசு எங்களை அனுமதிக்கவில்லை. இன்றும் இதுதான் நிலமை. அதிகாரபூர்வமான அனுமதி வழங்கவேயில்லை'' என்று மனமுடைந்து கூறுகிறார்.

போபால் விஷவாயு விபத்து இன்னும் ஏராளமான கோர நோய்களை கொண்டுவரும் என்று நம்பப்படுகிறது. காரணம் என்னவெனில், பாதிக்கப்பட்டவர்களின் ரத்தத்தில் தேவையான 'ஆக்ஸிஜன்' கடத்தும் திறன் படிப்படியாக குறைந்து கொண்டே போவதை ஆராய்ச்சி முடிவுகள் காட்டுகின்றன.

பாசிச ராஜீவ் கும்பலால், மறைக்கப்பட்ட, அதற்காக மூர்க்கமாக கையாளப்பட்ட அதிகார வர்க்கத்தின் அட்டூழியங்கள் இன்னமும் தொடர்கிறது. இந்த அக்கிரமங்கள் எதையும் கண்டுகொள்ள மறுத்து கண்ணை மூடிக்கொள்கிறது, வி.பி.சிங் அரசு. மத்தியப் பிரதேச மாநில அதிகார வர்க்கம், போபால் நகரத்தில் நவீன விமான தளங்கள், பூங்காக்கள், பாதாள சாக்கடைகள் என்று செலவழித்துவிட்டு விஷவாயு விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண செலவுகள் என்று கணக்கெழுதியிருக்கிறது. இவ்வாறு 110 கோடி ரூபாயை நட்டஈடு தொகையிலிருந்து கோருகிறது.



ம.பி. மாநில உயர் தலைமை அதிகாரிகள், நட்டஈட்டு தொகை ''700 கோடி ரூபாயை விநியோகித்தால் (பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுத்தால்) பொருளாதார குளறுபடிகளுக்கு வழிவகுக்கும்! எனவே அரசு அப்பணத்தை போபால் நகர மக்களுக்கு நிரந்தரமாக பயன்படும் வகையில் திட்டம் தீட்டுகிறது. இதற்காக ஏற்கனவே நாங்கள் ஒரு கமிட்டி அமைத்து ஆராய்ந்து வருகிறோம்'' என்று திணவெடுத்து கூறுகிறார்கள்.

கொலைகார நிறுவனம் யூனியன் கார்பைடு, 5000 மக்களை படுகொலை செய்து, பல லட்சம் மக்களை நடை பிணங்களாக்கியது. பாசிச ராஜீவ் அரசும், அதிகார வர்க்க வெள்ளை யானையும் விஷவாயு ஏதுமில்லாமலயே 5 ஆண்டு காலமாக போபால் மக்களை சித்திரவதை செய்து வதைக்கிறது. அதிகார வர்க்க சிவப்பு நாடா முறையால், வக்கிரமான நீதிமன்ற தீர்ப்புகளால் நிராயுதபாணியான போபால் மக்களை மூச்சுமுட்ட திணறடிக்கிறது.

விஷவாயுவால் இறந்த தமது சகோதரர்களுக்காக நினைவுச் சின்னம் எழுப்பத் திரண்டவர்களை நடுத்தெருவில் வைத்து அடித்தது. நேர்மையான விசாரணை, நிவாரணம் கோரி ஊர்வலம் நடத்தியவர்களின் முட்டியை உடைத்தது. இந்தக் கிரிமினல் குற்றங்களுக்கு காரணமான பாசிச ராஜீவ் கும்பலையும், யூனியன் கார்பைடு அமெரிக்க கொலைகார நிறுவனத்தையும், போலீசு அதிகார வர்க்கத்தையும் மன்னித்துவிட்டது வி.பி.சிங் கும்பல்.

1984 டிசம்பர் 3. அந்த நள்ளிரவில் தான், நமது போபால் நகரத்து சகோதரர்கள் சகோதரிகள், மழலைகள், முதியவர்கள் 5000 பேர் மிதல் ஐசோசயனைட் விஷத்தால் எலிகள் போல் சாகடிக்கப்பட்டனர். ஈரத்துணியால் முகத்தை போர்த்திக் கொண்டு காற்றுக்கு எதிர்திசையில் ஓடினால், ஒருசிலர் பிழைக்கலாம் என்ற சாதாரண முதலுதவியைக் கூட கொலைகாரர்கள் மக்களுக்கு சொல்லவில்லை. பலமணி நேரத்திற்கு பிறகும் சாதாரண அபாய எச்சரிக்கைக் கூட எதுவும் மக்களுக்கு தெரிவிக்கவில்லை.

மனித நேயம் கொண்ட உள்ளூர் போலீசு நிலைய இன்ஸ்பெக்டர் இளைஞர் தனி ஒருவராக ஜீப்பில் சுற்றி மக்களை எச்சரித்திருக்கிறார். பிழைக்க வைக்கும் ஆசையில், ஓடிய வாகனத்திற்குள் கைக்குழந்தையை எறிந்த தாய்மார்கள் ஏராளம்!

இறந்த நமது சகோதரர்களின் வாரிசுகள், மழலைகள், நீதி கேட்டு இதோ இன்னமும் கையேந்தி நிற்கிறார்கள். நமது பதில் என்ன?



படிப்பகம்

www.padippakam.com

பனாமா:

# அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு!

# நோரிகாவின் தேசபக்த வேடம்!

ஆதிக்க வெறிபிடித்த அமெரிக்க ஏகாதிபத்தியம் மத்திய அமெரிக்காவிலுள்ள சின்னஞ்சிறு நாடான பனாமாவின் மீது அண்மையில் ஆக்கிரமிப்பு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. பனாமாவில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கே இந்நடவடிக்கை என்று சர்வதேச விதிமுறைகளுக்கு எதிரான தனது ஆக்கிரமிப்புக்கு நியாயம் கற்பிக்கிறது, அமெரிக்கா!

மத்திய அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் இணைக்கும், 26 லட்சம் மக்கள் தொகை கொண்ட சின்னஞ்சிறு நாடுதான் பனாமா. நாட்டின் குறுக்கேயுள்ள பனாமா கால்வாய், கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலையும் மேற்கே பசிபிக் பெருங்கடலையும் இணைக்கும் கப்பல் போக்குவரத்துக்கான முக்கிய நீர்வழியாக உள்ளது. பனாமா கால்வாய் இல்லையென்றால் பல ஆயிரம் மைல்கள் கடந்து தென்னமெரிக்காவைச் சுற்றி வந்துதான் அமெரிக்காவின் மேற்கு பகுதியை கப்பல்கள் அடைய வேண்டியிருக்கும். இதன் காரணமாகவே யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த பனாமா கால்வாயைத் தன் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டும் பனாமா நாட்டில் தனது அடிவருடிகளைக் கொண்டு ஆட்சி செய்து கொண்டும் மேலாதிக்கம் செலுத்தி வருகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

**மாஃபியாக்களின் சொர்க்கபுரி**

பனாமா கால்வாயை விட, ரகசிய உலகப் பேர்வழிகளின் சொர்க்கபுரி என்ற பெருமையும் பனாமா நாட்டிற்கு உண்டு. ஹெராயின், கோகொய்ன், ஹஷிஷ், அபின் உள்ளிட்ட எல்லா வகையான போதைப் பொருட்களையும் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் கடத்தி விற்பதற்கான மையம் தான் பனாமா. இதோடு ஆயுதங்களைக் கடத்தி விற்பதற்கும், கருப்புப் பணத்தை சுவிஸ் வங்கி போல - பனாமாவின் ரகசிய வங்கிகளில் குவித்து வைப்பதற்கும் வாய்ப்பான சர்வதேச மாஃபியாக்களின் வர்த்தக மையம் தான் பனாமா.

இப்படி பனாமாவை கள்ளக் கடத்தல் காரர்களின் சொர்க்கபுரியாக சீரழித்த பெருமை பனாமாவின் ராணுவ சர்வாதிகாரி நோரிகாவையும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தையுமே சாரும். ராணுவத் தளபதியாக இருந்தாலும் நோரிகாவின் பிரதானத் தொழில் தரகுவேலை தான். போதை மருந்து கடத்துவது, ஏகாதிபத்தியங்களால் ஊட்டி வளர்க்கப்படும் எதிர்ப்புரட்சி குண்டர்களுக்கு ரகசியமாக ஆயுதங்களை விநியோகிப்பது, வல்லரசுகளின் உளவு நிறுவனங்களுக்கு ரகசியமாக தகவல் சேகரித்து அனுப்புவது, பனாமா ரகசிய வங்கிகளில் சர்வதேச கருப்புப்பண முதலைகள் பணத்தைக் குவிக்க ஏற்பாடு செய்வது என்று அப்பட்டமான தரகுத் தொழிலின் மூலம் குறுகிய காலத்திலேயே குபேரனாகி உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவனாகி விட்டான் நோரிகா! பனாமாவில் விலையுயர்ந்த கலைப் பொருட்களுடன் கூடிய ஆடம்பர மாளிகை, தனி விமானம், ஸ்பெயின், இஸ்ரேல் முதலான நாடுகளில் குவித்துள்ள ரகசிய சொத்துக்கள் முதலானவற்றைச் சேர்த்து கணக்கிட்டால் அவனது சொத்து மதிப்பு 100 கோடி டாலருக்கும் மேலிருக்கும் என்று நம்பப்படுகிறது.

தனது யுத்த தந்திர நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள பனாமா கால்வாயில் துருப்புகளை நிறுத்தியும், கடல் பிராந்தியத்தில் ரகசிய ராணுவத் தளங்களையும் நிறுவியுள்ள அமெரிக்கா என்ன செய்தாலும் நோரிகா கண்டு கொள்ளாமலிருக்க, அதற்கு நன்றிக் கடனாக அமெரிக்காவும் நோரிகாவின் விவகாரத்தில் தலையிடாமலிருக்க, நோரிகாவின் 'தொழில்' அமோகமாகத்தான் நடந்து வந்தது. ஆனால் அமெரிக்காவில் போதை மருந்துகளும் குற்றங்களும் பெருகியதையடுத்து அதைத் தடுப்பதற்காக செனட் உதவிக்குழு விசாரணையைத் துவக்கியதும், கிணறு வெட்ட பூதம் கிளம்பியது. நோரிகாவின் தொழிலுக்கு மட்டுமல்ல; அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கும் ஆபத்து ஏற்பட்டு பனாமாவில் அரசியல் நெருக்கடியும் கொந்தளிப்பும் தீவிரமாகத் தொடங்கியது.

பனாமாவின் போதை மருந்து - இராணுவ சர்வாதிகாரி நோரிகா.



**வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது!**

'88ன் துவக்கத்தில் நோரிகாவின் கூட்டாளியும் போதை மருந்து கடத்தல் புள்ளியுமான ஜோஸ் பிளாண்டன் சிக்கிக் கொண்டு அமெரிக்க வழக்கு மன்றத்தில் சாட்சியமும் அளித்தான். அதைத் தொடர்ந்து அமெரிக்க வழக்கு மன்றம் நோரிகாவை 'சர்வதேச போதை மருந்து கடத்தல் கொள்ளைக்காரன்' என்று பகிரங்கமாகவே குற்றம் சாட்டியது. இதோடு அமெரிக்க கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வுக்கு ரகசிய தகவல்களைச் சேகரித்துத் தரும் விசுவாச பத்தினியாக இருந்த நோரிகா, பின்னர் ரஷிய உளவு நிறுவனமான கே.ஜி.பிக்கும் ரகசிய தகவல்களைக் கொடுக்கும் பிழைப்புவாத விபச்சாரியாக மாறியதைத் தொடர்ந்து அமெரிக்கா அச்சம் கொண்டது. நோரிகா மூலம் எதிர்ப்புரட்சி குண்டர்களுக்கு ஆயுத விற்பனை செய்த விவகாரமும் இதர சதிகளும் அம்பலமாகி விடுமோ என்று பீதியடைந்து நோரிகாவை பொறுப்பிலிருந்து விலகி பாதுகாப்பான நாட்டிற்குச் சென்று உல்லாசமாக ஓய்வெடுக்கும்படி நிர்பந்தித்தது.

அமெரிக்காவின் இத்திட்டத்தை நோரிகா ஏற்க மறுத்ததும், பனாமாவின் பொம்மை அதிபர் டேவல்லே என்பவரை அமெரிக்கா தூண்டிவிட்டது. அதன்படி டேவல்லே நோரிகாவை பதவி நீக்கம் செய்வதாக அறிவித்தார். ஆனால் அடுத்த நாளே நோரிகா பாராளுமன்றத்தைக் கூட்டி தனக்கு அறுதிப் பெரும்பான்மை இருப்பதாக கூறி டேவல்லேயைப் பதவி நீக்கம் செய்தான். மக்களிடமிருந்து தனிமைப்பட்டுக் கிடந்த டேவல்லேயைத் தூக்கி நிறுத்த முயற்சித்தும் முடியாமல் போகவே, விழிபிதுங்கிய அமெரிக்க ஏகாதிபத்தியம் நோரிகாவைப் பதவியிலிருந்து விரட்டும் நோக்குடன் பனாமாவுக்கு செயற்கையாக பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி மிரட்டிப் பணிய வைக்க முயற்சித்தது.

தான் வளர்த்த கடாவே தன் மீது பாய்வதைக் கண்ட ஆத்திரத்தில் அமெரிக்கா திணித்த பொருளாதார முற்றுகையால் பனாமாவில் பணப் புழக்கம் குறைந்து நெருக்கடி தீவிரமாகியது. நோரிகா கும்பலால் அரசு ஊழியர், தொழிலாளர், ராணுவத்தினருக்கு சம்பளம் கொடுக்கக்கூட முடியவில்லை. ஆத்திரமடைந்த அரசு ஊழியர்களும் தொழிலாளர்களும் மாணவர்களுடன் இணைந்து எதிர்க்கட்சியினரின் ஆதரவோடு வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். அதிகார வெறிபிடித்த நோரிகா கும்பல் தனது அடியாட்படையைக்

படிப்பகம்

www.padippakam.com

கொண்டு போராட்டக் காரர்களை நரவேட்டையாடியும், பலரை சிறையிலடைத்தும் அடக்கி ஒடுக்கியது.

தனது பொருளாதார முற்றுகை நோரிகாவிடம் பலிக்காமல் போகவே, பனாமா ராணுவத்திலுள்ள தனது விசுவாசிகளைக் கொண்டு ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் இறங்கியது அமெரிக்க ஏகாதிபத்தியம். ஆனால் இச்சதியை மோப்பம் பிடித்த நோரிகா, அந்த ராணுவத் தளபதிகளை சிறையிலடைத்து அமெரிக்காவின் திட்டத்தில் மண்ணை அள்ளிப் போட்டான்.

## மோசடித் தேர்தலுக்கு ராஜீவின் முன்னோடி!

ஒரு புறம் உள்நாட்டு நெருக்கடியாலும் மறுபுறம் அமெரிக்காவின் நெருக்கடியாலும் நோரிகா கும்பல் சிக்கித் தவித்த நிலையில் கடந்த மே மாதத்தில் பனாமாவின் அதிபர் தேர்தல் வந்தது. ஆளும் நோரிகா கும்பலின் தரப்பில் டூகியூவும், எதிர்கட்சிகளின் தரப்பில் என்டாராவும் போட்டியிட்டனர். அமெரிக்க ஏகாதிபத்தியம் என்டாராவின் தேர்தல் செலவுக்காக ஒரு கோடி டாலர்களை ஒதுக்கியது. இதுதவிர சி.ஐ.ஏ. உளவு நிறுவனத்தின் மூலம் மறைமுகமாகவும் உதவி செய்தது.

சர்வாதிகாரிகள் தேர்தல் முடிவுகளை ஏற்று ஜனநாயகப் பாதைக்குத் திரும்பியதாக வரலாறில்லை. பிலிப்பைன்சின் மார்க்கோஸ், ஹைத்தியின் டுவாலியர் என்று இதற்கு நீண்ட பட்டியலே இருக்கிறது. நோரிகா மட்டும் விதிவிலக்கா என்ன? தேர்தலில் எதிர்க்கட்சியினருக்கு வெற்றி வாய்ப்பு அதிகமாக இருப்பதை அறிந்த நோரிகா கும்பல் தேர்தல் தில்லுமுல்லு, மோசடி, வன்முறை வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டது. "பெருந்தன்மையாளர் படை" என்ற பெயரில் நோரிகா கும்பலால் கட்டியமைக்கப்பட்ட கிரிமினல் ரௌடிகளைக் கொண்ட இப்படை, தேர்தல் நாளன்று வாக்காளர்களை விரட்டி விட்டு கள்ள ஓட்டுப் போட்டும், வாக்குச் சாவடியைச் சூறையாடியும், வேட்பாளர்களையே மிருகத்தனமாக தாக்கியும் அட்டூழியம் புரிந்தது. மே 7ந் தேதியன்று நடந்த இத்தேர்தலுக்கு சிறப்புப் பார்வையாளராக வந்திருந்த முன்னாள் அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டர் முன்னிலையிலேயே எல்லா அயோக்கியத்தனங்களும் நடந்தன. "வரலாறு காணாத வன்முறை - மோசடித் தேர்தல்" என்று கார்ட்டரும் "ஜனநாயகப் படுகொலை" என்று லத்தீன் அமெரிக்க நாடுகளும் பகிரங்கமாக குற்றம் சாட்டின. முற்றாக அம்பலப்பட்டு தனிமைப்பட்ட பின்னரும் கூட நோரிகா கும்பல் பதவியிலிருந்து இறங்கவில்லை.

அதே சமயம், "பனாமா கால்வாயின் மீதான உரிமை பனாமா நாட்டுக்கே தரப்பட வேண்டும் என்ற ஒப்பந்தம் 2,000வது ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருகிறது. இதை மறுத்து தனக்கு சாதகமாக ஒப்பந்தத்தை உருவாக்கவே அமெரிக்கா சதி செய்கிறது. பனாமா கால்வாயை நாம் ஒருக்காலும் விட்டுக் கொடுக்கக் கூடாது" என்று தேசிய வெறியைக் கிளறிவிட்டது நோரிகா கும்பல். தன்னை ஒரு தேசப் பற்றாளனாக, ஏகாதிபத்திய எதிர்ப்பாளனாக காட்டிக் கொண்டு பனாமா கால்வாயில் நிலை கொண்டுள்ள அமெரிக்கத் துருப்புகளின் மீது அவ்வப்போது தாக்குதலையும் தொடுத்தது.



பனாமாவின் ஜனநாயகத்தின் கண்கொள்ளாக் காட்சி: தேர்தல் நாளன்று எதிர்க்கட்சி வேட்பாளரின் மண்டையைப் பிளக்கும் நோரிகாவின் அடியாட்படை.

## அமெரிக்காவின் அயோக்கியத்தனமான ஆக்கிரமிப்பு!

ஆத்திரமடைந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் டிசம்பர் 19 அன்று பனாமாவின் மீது படையெடுத்தது. பனாமா கால்வாய் பிராந்தியத்திலுள்ள அமெரிக்கத் துருப்புகளோடு மேலும் ஈராயிரம் அதிரடிப் படையினரைக் கொண்டு போய் குவித்து தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டது. பனாமா ராணுவத் தலைமையகம் குண்டு வீசித் தகர்க்கப்பட்டது. நோரிகா அங்கிருந்து தப்பிவிட்டதை அறிந்து, கண்மூடித்தனமாக குடியிருப்புப் பகுதிகளிலும் குண்டு வீசித் தாக்கியது, ரத்தவெறி பிடித்த அமெரிக்க ஏகாதிபத்தியம்.

கண்களையும் கைகளையும் கட்டி நோரிகாவின் ஆதரவாளர்கள் என்று சந்தேகிப் போரை சித்திரவதை செய்யும் அமெரிக்க ஆக்கிரமிப்புப் படை.



ஆனாலும் நோரிகாவைக் கண்டு பிடிக்க முடியவில்லை. நோரிகாவின் விசுவாசப் படைகள் தொடர்ந்து எதிர்த்தாக்குதலை நடத்தின. கடைசியாக வந்த செய்திகளின் படி நோரிகா, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நிற்க முடியாமல் வாடிகன் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளான்.

பனாமாவில் ஜனநாயகத்தை நிலைநாட்டும் நோக்குடன்.தான் தவிர்க்கவியலாமல் இந்தப் படையெடுப்பை மேற்கொண்டுள்ளோம் என்று நியாயவாதங்களை அடுக்குகிறது, அமெரிக்கா. ஜனநாயகத்தை நிலைநாட்டுவதுதான் நோக்கமென்றால் தென்னாப்பிரிக்க நிறவெறியர்களுக்கு எதிராகப் படையெடுக்க வேண்டியதுதானே! ஏகாதிபத்தியங்களும், விரிவாக்கவாதிகளும் என்றுமே தமது ஆக்கிரமிப்பை ஒப்புக் கொண்டதில்லை. உதவி, நட்பு, அமைதி, சமாதானம் என்கிற மூடுதிரையின் பின்னே ஒளிந்து கொண்டுதான் ரஷ்யா ஆப்கானையும், இந்தியா ஈழத்தையும் ஆக்கிரமித்தன. அதே பாணியில் தான் அமெரிக்க ஏகாதிபத்தியமும் ஜனநாயக வேடமணிந்து ஏய்க்க முயற்சிக்கிறது.

பனாமாவில் ஜனநாயகத்தை நிலைநாட்டும் திருப்பணி முடிந்ததும் நாங்கள் வெளியேறி விடுவோம் என்று நம்பச் சொன்னார் அமெரிக்க மாமா புஷ். அதன்படியே, இத்தனைநாளும் அமெரிக்க ராணுவ முகாமில் ஒளிந்து கொண்டிருந்த அடிவருடி என்டாரா அதிபராக்கப்பட்டார். இருப்பினும், தாக்குதலை சமாளிக்க மேலும் கூடுதலாக அமெரிக்கப் படைகள் பனாமாவில் குவிக்கப்பட்டன. நோரிகாவின் தலைக்கு ஒன்றரை கோடி ரூபாய் விலை வைக்கப்பட்டது. நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் போட்டு, அமெரிக்க விமானங்களின் குண்டு வீச்சு, ராணுவத்தின் பீரங்கித் தாக்குதல் என்று நாட்டையே ரணகளமாக்கி விட்டது. நோரிகாவின் ஆதரவாளர்கள் என்று சந்தேகிக்கப்படும் அப்பாவி சிவிலியன்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்; கைது செய்யப் படுகிறார்கள். பெரு நகரங்களில் அமெரிக்க ராணுவம் கடைகளையும் பொதுச் சொத்துக்களையும் சூறையாடிக் கொட்டமடிக்கிறது. ஆயிரக்கணக்கான பனாமியர்கள் அகதிகளாக

படிப்பகம்

www.padippakam.com

வெளிநாட்டுத் தூதரகங்களில் அடைக்கலம் புகுந்துள்ளனர். ஏறத்தாழ 7,000க்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டு வீதியெங்கும் பிணங்கள் இறைந்து கிடக்கின்றன; ஆக்கிரமிப்பாளர்கள் அவற்றை அப்புறப்படுத்தாததால் பிணங்கள் அழுகி கொள்ளை நோய் பரவி வருகிறது என்று செய்திகள் வருகின்றன.

பிரிட்டனின் 'இரும்புத் தலைவி' தாட்சரைத் தவிர உலகின் ஆகப் பெரும்பான்மையான நாடுகள் அமெரிக்காவின் அநீதியான ஆக்கிரமிப்பைக் கண்டித்துள்ளன. லத்தீன் அமெரிக்க நாடுகள் அனைத்தும், ''வியட்நாமுக்குப் பிறகு அமெரிக்கா தொடுத்துள்ள மிகப்பெரிய ஆக்கிரமிப்பு யுத்தம்'' என்று சாடுகின்றன. சர்வதேச போதை மருந்து கடத்தல்காரனும் ஜனநாயக விரோதியுமான நோரிகாவுக்கு எதிரான தாக்குதலை ஆதரித்த அமெரிக்க மக்கள் கூட, இன்னமும் நீடிக்கும் இந்த ஆக்கிரமிப்பு யுத்தத்தின் விளைவுகளைக் கண்டு அஞ்சி இப்போது எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். நோரிகாவின் படைகளால் கைது செய்யப்பட்டு, பிணைக்கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டுள்ள அமெரிக்கர்களின் கதி என்னவாகுமோ என்று பீதியில் உறைந்து போயுள்ளனர்.

தேசவிரோதியும் மக்கள் விரோதியும் ஏகாதிபத்திய எடுபிடியுமான நோரிகா, தனது பதவிக்கு ஆபத்து வந்ததும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சவடால் அடிப்பதைக் கண்டு, ரஷிய வல்லரசும் போலிக் கம்யூனிஸ்ட் நாடுகளும் நோரிகாவை உச்சி முகர்ந்து ஆதரிக்கின்றன. ஏற்கனவே பிலிப்பைன்சில் அம்பலப்பட்டு நெருக்கடியில் சிக்கியிருந்த சர்வாதிகாரி மார்க்கோசுக்கு பாசிச எதிர்ப்புப் போராளி என்ற பட்டம் சூட்டி ரஷியா அன்று ஆதரித்தது. இப்போது அதே உத்தியோடு போதை மருந்து - சர்வாதிகாரி நோரிகாவையும் தனது கூட்டாளியாக்கிக் கொண்டு பனாமாவை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர முயற்சிக்கிறது. பனாமாவிலுள்ள ரஷிய சார்பு போலிக் கம்யூனிஸ்ட் கட்சியும் குருபீடத்தின் உத்திரவுப்படி நோரிகாவை ஆதரித்து ஏகாதிபத்திய எதிர்ப்பு போராளியாக சித்தரிக்கிறது.

அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நோரிகா இன்று போரிட்டாலும், ஜனநாயகத்தை முன்னிபந்தனையாக வைத்து அவனுடன் கூட்டுச் சேரலாமே தவிர முற்றாக அவனை ஆதரிப்பது தற்கொலைக்கு ஒப்பானது. அது அமெரிக்க கோட்டானுக்குப் பதிலாக மீண்டும் நோரிகா கும்பல் நாட்டைச் சூறையாட உதவுவதாகும். அதே சமயம் நோரிகா கும்பல் அமெரிக்காவினால் விரட்டப்பட்டு, புதிய அடிவருடி என்டாரா அதிகாரத்துக்கு வந்தாலும் பனாமா நாட்டுக்கும் மக்களுக்கும் சுதந்திரமும் சுபீட்சமும் வந்துவிடப் போவதில்லை. சொந்த நாட்டைச் சூறையாடும் ஏகாதிபத்திய அடிவருடிகளையும் அவர்களது எஜமானர்களையும் துரத்தியடிக்காமல் மூன்றாம் உலக நாட்டு மக்கள் விடுதலை அடைந்ததாக வரலாறுமில்லை.

■ குமார்.

## அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஊர்வலம் - ஆர்ப்பாட்டம்!

ஜனநாயகத்தை மீட்பது என்ற பெயரில் பனாமா நாட்டை ஆக்கிரமித்துள்ள ஆதிக்க வெறி பிடித்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மக்கள் கலை இலக்கியக் கழகம், சென்னை கிளை, எழுச்சிமிகு ஊர்வலம் - ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. 26.12.89 அன்று மாலை காயிதே மில்லத் கலைக்கல்லூரி அருகிலிருந்து செங்கொடிகள் அசைந்தாட, விண்ணதிரும் முழக்கங்களுடன் புறப்பட்ட ஊர்வலம் அண்ணாசாலை வழியே அமெரிக்க தூதரகத்தைச் சென்றடைந்தது. அங்கு, ''ஆதிக்க வெறிபிடித்த அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழிக!'' ''அமெரிக்க வல்லூறே பனாமாவை விட்டு வெளியேறு!'' என திக்கெட்டும் எதிரொலிக்கும் முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் தோழமை அமைப்பான மக்கள் ஜனநாயக இளைஞர் கழகமும் உற்சாகத்துடன் பங்கேற்றுச் சிறப்பித்தது.

ஊர்வலம் - ஆர்ப்பாட்டத்திற்கு முன்கூட்டியே அனுமதி கேட்டிருந்த போதிலும், கடைசி நேரம் வரை எழுத்து மூலம் அனுமதிதராமல் போலீசு இழுத்தடித்தது. ஊர்வலம் - ஆர்ப்பாட்டத்தில் ஒலிபெருக்கியைப் பயன்படுத்த தடைவிதித்தது. இந்த இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும் உணர்வு பூர்வமாகவும், புரட்சிகர வீரியத்துடனும் ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் சிறப்பாக நடந்தது.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ம.ஜ.இ.க. சென்னைப்பகுதி அமைப்பாளர் தோழர் மணி, ம.க.இ.க. அமைப்பாளர் தோழர் சீனிவாசன் ஆகியோர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புச் சதிகளையும், இதற்கு சற்றும் சளைக்காத ரஷிய வல்லரசின் ஆதிக்க வெறியாட்டங்களையும் தோலுரித்து உரையாற்றினர். லட்சக்கணக்கில் தொழிலாளர்களைத் திரட்டி வைத்துள்ளதாகப் பீற்றிக் கொண்டிருக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளும் ஓட்டுப் பொறுக்கிகளும் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக எதுவும் செய்யாத நிலையில், சிறிய சக்தியாக இருந்தாலும் குறுகிய கால அவகாசத்தில் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியதை அனைவரும் பாராட்டினர்.

தகவல்:
மக்கள் கலை இலக்கியக் கழகம்
சென்னை

## போலீசின் சதி - அவதூறுகளை எதிர்த்து பிரச்சார இயக்கம்

திருச்சி நேரு சிலை தகர்ப்பு, தஞ்சை நினைவுத்தூண் தகர்ப்பு ஆகிய சம்பவங்களை ஒட்டி கைது செய்யப்பட்ட ம.க.இ.க. தோழர்களை விடுதலை செய்யக் கோரி சுவரொட்டி, பிரசுரம், தெருமுனைக் கூட்டங்கள் மூலம் பிரச்சார இயக்கத்தை உசிலை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி முனைப்புடன் மேற்கொண்டது.

''சிலையை உடைப்பதும், சின்னத்தை தகர்ப்பதும் எங்கள் கொள்கையல்ல; அவதூறு பிரச்சாரத்தை உடனே நிறுத்து! கைது செய்த தோழர்களை விடுதலை செய்!'' என்ற முழக்கங்களைக் கொண்ட சுவரொட்டிகள் உசிலை நகரிலும், சுற்றுப்புற கிராமங்களிலும், பேருந்துகளிலும் ஒட்டப்பட்டது. உழைக்கும் மக்களிடம் பரவலாக துண்டுப் பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் செய்யப்பட்டது. உசிலை நகரில் விளம்பரத் தட்டி எழுதி வைக்கப்பட்டது. டிசம்பர் 17 அன்று உசிலையிலும், 18ந் தேதியன்று செக்கானூரணி, கருமாத்தூரிலும் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

ஒவ்வொரு தெருமுனைக் கூட்டத்திலும் சுமார் நூறுக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு ''போலீசுக்காரனுங்க தான் இப்படி குண்டு வெச்சிருப்பானுங்க'' என்று நமது பிரச்சாரத்தை நியாயப்படுத்தியதோடு, நிதியுதவியும் செய்தனர். உசிலை நகரில் நடந்த ஒரு தெருமுனைக் கூட்டத்தின் போது, அங்கு வந்த சப்-இன்ஸ்பெக்டரும் போலீசும் கூட்டத்தை ஒழுங்குபடுத்துவது போல் செய்துவிட்டு, ''அனுமதி கேட்டால் நாங்கள் தரவா மாட்டோம்? நீங்கள் காலையில் கேட்டால் மாலைக்குள் தருகிறோம். இனிமேல் அனுமதி பெற்று கூட்டம் நடத்துங்கள்'' என்று மக்கள் முன்னே ஜனநாயகவாதிகளாக நாடகமாடினார்கள்.

இதுதவிர, தேனி, கம்பம் பகுதிகளைச் சேர்ந்த வி.வி.மு. தோழர்கள் பிரசுரம் சுவரொட்டி மூலம் போலீஸ் கும்பலின் கைது - அவதூறுகளை அம்பலப்படுத்தி பிரச்சார இயக்கத்தை முழுவீச்சுடன் நடத்தினர்.

சிலை உடைப்பைக் காரணம் காட்டி தோழர்களைக் கைது செய்த காவல் துறையின் காட்டுமிராண்டித் தனத்தையும், வீடு புகுந்து நடத்திய சூறையாடலையும் எதிர்த்து சீர்காழியில் புதிய கலாச்சார வாசகர் வட்டம் சுவரொட்டி, துண்டுப் பிரசுரங்கள் மூலம் பிரச்சார இயக்கத்தை நடத்தியது. இதைத் தொடர்ந்து, தஞ்சை நினைவுத்தூண் தகர்க்கப்பட்ட மறுநாளன்று சீர்காழி ஸ்பெஷல் பிராஞ்ச் போலீசார் பகுதியில் நமது தோழர்களைப் பற்றி பொதுமக்களிடம் விசாரித்து பீதியூட்டினர். ஆனால் தோழர்களை நேரில் பார்த்த போது எதுவும் கேட்காமல் சென்றனர். போலீசின் நோக்கம் என்னவென்பதை மக்கள் புரிந்து கொள்ள இது ஒரு வகையில் உதவுவதாக அமைந்தது.

படிப்பகம்

www.padippakam.com



# ஜே.வி.பி. இயக்கம் தரும் படிப்பினைகள்!

1971 ஆயுதந்தாங்கிய எழுச்சி தோல்வியுற்றபின் ஜே.வி.பி.யின் 'தலைமை முழுவதும் ஆயுள் தண்டனை பெற்று சிறையிலடைக்கப் பட்டது. எனவே ஏறக்குறைய செயலிழந்த நிலைக்கு ஜே.வி.பி. தள்ளப் பட்டது.

1977 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்று ஜெயவர்த்தனே ஆட்சிக்கு வந்ததும் ஜே.வி.பிக்கு பொதுமன்னிப்பு வழங்கி அனைவரையும் விடுதலை செய்தார். அப்போது ஜே.வி.பி. சுய விமர்சனம் செய்து கொண்டு தவறுகளைத் திருத்திக் கொள்ளுவதாக தமது நிலைப்பாடுகளில் பலமாற்றங்களை அறிவித்தார் விஜிய வீரா.

''புரட்சிகர மார்க்சியக் கோட்பாடுகளைப் புறக்கணித்து, வர்க்கப் போராட்டத்துக்குப் பதிலாக வர்க்க சமரசத்தைக் கடைப்பிடித்தது, சர்வதேசியத்துக்குப் பதிலாக குறுகிய இனவெறி மற்றும் தேசிய வெறியில் மூழ்கியது ஆகிய காலகட்டம் எமது வரலாற்றின் இருண்ட அத்தியாயம்'' என்று ஜே.வி.பி. அதிகாரபூர்வ சுயவிமர்சனம் செய்து கொண்டது.

'இந்திய விரிவாக்க ஆதிக்கம்' என்ற கருத்தை ஜே.வி.பி. கைவிட்டது. ஈழத்தமிழர் தனித் தேசிய இனமென்றும் அதற்கு மொழி மற்றும் பிற சம உரிமைகள் தர வேண்டும் என்றும் அறிவித்தது. மலையகத் தமிழ்ந் தோட்டத் தமிழர்களைப் புறக்கணித்தது தவறென்று ஒப்புக் கொண்டது.

'தனி ஈழம்' கோரிக்கையை முன் வைத்து ஈழத்தமிழரின் ஏகமனதான ஆதரவு பெற்று தேர்தலில் வெற்றி பெற்று இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியாக வந்தது தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி. 'தனி ஈழம்' கோரிக்கை வலுத்து, ஆயுதந்தாங்கிய ஈழப்போராளிக் குழுக்களின் நடவடிக்கைகள் துவங்கின. அதே சமயம் நாடாளுமன்ற சமரசப்பாதையில் ஜே.வி.பி. அடியெடுத்து வைத்தது. அதற்கேற்ப தேசிய இனப்பிரச்சினையில் சந்தர்ப்பவாத அரசியலில் தஞ்சம் புகுந்தது. தமிழ் தேசிய இனத்துக்கு எதிராக அரசு பயங்கரவாதத்தை ஏவி அடக்குவதையும் உரிமைகள் மறுக்கப்படுவதையும் ஜே.வி.பி. எதிர்ப்பதாகக் கூறியது. ஆனால் மூலாதார வசதிகளற்ற சிறிய பிராந்தியமான ஈழம் தனி நாடாக முடியாது என்றும், ஒன்றுபட்ட இலங்கை சோசலிசப் புரட்சியிலேயே இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என்றும் 1980 வரை கூறி வந்தது.

இந்த நிலைப்பாடுகளில் இருந்து சரிந்து சுயநிர்ணய உரிமை, அதிகாரப் பகிர்வு, கூட்டமைப்பு ஆகிய 'எல்லாத் தீர்வு'களையும் எதிர்க்கத் தொடங்கியது. 1982 மேயில் ஜே.வி.பி. மத்தியக் கமிட்டி பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது. ''முதலாளித்துவ ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் தான் ஈழம் கோரிப்போராடும்படி தூண்டுகின்றன. பயங்கரவாத இயக்கம் கேடானது; மக்களுடைய நலனுக்கு ஏற்றதல்ல. எனவே ஈழ பயங்கரவாத இயக்கத்தை நாங்கள் எதிர்க்கிறோம்.'' இதன்மூலம் சிங்கள இனவெறி மற்றும் தேசிய வெறிக்கும் வர்க்க சமரசத்துக்கும் ஜே.வி.பி. திரும்பியதைக் குறித்தது.

1982 இலங்கை அதிபர் தேர்தலில் குதித்தது ஜே.வி.பி. ஜெயவர்த்தனே, பண்டாரநாயகா கட்சியின் கேப்பகடுவாவுக்கு எதிராகப் போட்டியிட்டு 41 சதவிகித ஓட்டுகள் பெற்று மூன்றாவதாக வந்தார், ரோகண விஜியவீரா. மாவட்ட வளர்ச்சிக் கவுன்சில்களுக்குப் போட்டியிட்ட ஜே.வி.பி. 4 மாவட்டங்களில் 13 இடங்களைப் பிடித்தது.

1983 இனப்படுகொலை சம்பவங்களையொட்டி, ஈழப்போராளி அமைப்புகளுடன் கூட்டுச் சேர்ந்திருப்பதாகக் கூறி ஜே.வி.பி மற்றும் பிற போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளை ஜெயவர்த்தனே அரசு தடை செய்தது. இன, மதவவெறியைத் தூண்டி அதிகாரத்தைப் பிடிக்கும் சதியின் ஒருபகுதி என 1983 இனப்படுகொலையைச் சித்தரித்தது. ஒருபுறம் 'பிளாட்' முதலிய தமிழ் போராளி குழுக்களுடன் இரகசியக் கூட்டுச் சேர்ந்து கொண்டும், மறுபுறம் சிங்கள இனவெறியைத் தூண்டி தமிழர்களைத் தாக்கியும் வருவதாக ஜே.வி.பி. மீது குற்றம் சாட்டியது.

ஆனால் ஜே.வி.பியோ ''வடக்கில் வகுப்புவாத இயக்கம்'' என்றும் ''பயங்கரவாத நடவடிக்கைகள்'' என்றும் ஈழப் போராட்டங்களைச் சாடியது. பிறகு ஈழப் போராளி அமைப்புகள் இந்திய விரிவாக்க ஆதிக்கத்துக்குத் துணைபோகும் தேசத் துரோக அமைப்புகள் என்றும் பிரச்சாரம் செய்தது. இதன் மூலம் சிங்கள இளைஞரிடையே மீண்டும் இரகசிய அமைப்புகளைக் கட்டத் துவங்கியது; அரசு எந்திரத்துக்குள் ஊடுருவி இரகசியக் குழுக்களைக் கட்டியது.

பிரிவினைவாத, இனவெறி பிடித்த தமிழர்களைக் கருவியாகக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்திய ஆதரவோடு நாட்டைப் பிளவுபடுத்தும் இந்திய முதலாளிகளின் சதிதான் சமாதான முயற்சிகள் என்று ஜே.வி.பி. பிரச்சாரம் செய்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தம், இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு - போர் ஆகியன ஜே.வி.பி.க்கு அரசியல் மேலாண்மையைக் கொடுத்தது. இந்திய விரிவாக்க ஆதிக்கம் குறித்த ஜே.வி.பி.யின் கணிப்பு - எச்சரிக்கை நிரூபணமாகியதோடு, இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான தேசபக்த எழுச்சியின் தலைமையாக, மையமாக ஜே.வி.பி. மாறியது.

தேசபக்த மக்கள் முன்னணி (டி.ஜே.வி) என்ற அமைப்பை உருவாக்கியது. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ரத்து செய்வது; இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை வெளியேற்றுவது; ஜெயவர்த்தனே ராஜினமா, நாடாளுமன்ற கலைப்பு, புதிய தேர்தல்கள் நடத்துவது; ஜே.வி.பி.க்கு எதிரான தடையை ரத்து செய்வது போன்ற ஆறு கோரிக்கைகளை டி.ஜே.வி. மூலம் வைத்தது.

இவற்றுக்கு மக்களிடையே ஆதரவு பெருகியது. பள்ளி, கல்லூரி மாணவர்கள் பல நாட்கள் ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தங்களும் நடத்தவே கல்வி நிறுவனங்கள் அனைத்தும் பல மாதங்கள் மூடப்பட்டன. போக்குவரத்து, மின்துறை மற்றும் துறைமுகத் தொழிலாளர்கள் உட்பட அனைத்துப் பிரிவினரும் பலநாள் வேலை நிறுத்தங்கள் நடத்தவே தொழில்கள் முற்றாக முடக்கப்பட்டன. தொடர்ச்சியாகப் பலநாட்கள் அரசுக்கு எதிரான பொது வேலைநிறுத்தங்கள் வெற்றிகரமாக நடந்து பொருளாதாரமும் நிர்வாகமும் நிலைகுலைந்து போயின. அரசு இயந்திரங்களுக்குள்ளாகவே ஜே.வி.பி.க்கு ஆதரவு பெருகி பலமுறை சிறைத் தகர்ப்புகள் - ஆயுதப் பறிப்புகளை வெற்றிகரமாக நடத்தினர்.

இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு மக்கள் திரள் அமைப்புகளையும், இயக்கங்களையும் கட்டி தேசியப் புரட்சியாக வளர்த்தெடுக்கத் தவறியது ஜே.வி.பி. அது உருவாக்கிய டி.ஜே.வி.யே கூட முழுக்கவும் இராணுவ ரீதியில் கட்டி தனிநபர் பயங்கரவாத நடவடிக்கைகள், சதி மற்றும் நாசவேலைகளுக்காகவே பயன்படுத்தப்பட்டது. ஆக்கிரமிப்பு எதிர்ப்பு தேசியப் புரட்சிக்கான கடமைகளையும், உள்நாட்டில் 'வர்க்கப் போராட்ட'க் கடமைகளையும் கலந்து குழப்பியது. எனவே, தேசபக்த, ஜனநாயக சக்திகளை முழுமையாகத் திரட்டத் தவறியது.

இந்திய - இலங்கை ஒப்பந்த ரத்து, இந்திய இராணுவ வெளியேற்றம் என்ற கோரிக்கைகளுக்காக பொது அரசியல் வேலைநிறுத்தம், இந்தியப் பொருட்களைப் புறக்கணிப்பது போன்ற இயக்கங்களை நடத்தியது. இருந்தபோதும், அவற்றைவிட முக்கியமாக தனிநபர் அழித்தொழிப்புக்களை செய்தது. மற்ற பிற அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பிரமுகர்களோடு தொண்டர்களையும் கொன்றது. அரசு அதிகாரிகளையும் சாதாரண ஊழியர்களையும் கொன்றது.

பிறகு தனிநபர் பயங்கரவாதம் முற்றி மிருகத்தனமான கொலைவெறியாக மாறியது. கிராம சேவகர்கள், கிராமோதயா மண்டல தலைவர்கள், விவசாய அதிகாரி

படிப்பகம்

www.padippakam.com

கள், பள்ளி - கல்லூரி முதல்வர்கள், ஆசிரியர்கள் அதே போல நகரவைகளைச் சேர்ந்தவர்கள் பலர் கொல்லப்பட்டனர். வானொலி, வானொளி, பத்திரிக்கைகள் போன்ற பிரச்சார சாதனங்கள், மருத்துவமனைகள், கோர்ட்டுகளில் யாரும் பணியாற்றக் கூடாது என்று தடைவிதித்தது ஜே.வி.பி; அந்தக் கட்டளையை மீறியதாக அந்நிறுவனங்களின் தலைவர்களோடு ஊழியர்களைக் கொன்றது.

ஜே.வி.பி.யின் கொலைப் பட்டியல் மேலும் விரிவாக்கப்பட்டது. சிறுதிருடர்கள், கள்ளச் சாராயக்காரர்கள் முதல் பத்திரிக்கை முகவர்கள், விநியோகிப்பவர்கள், அரசு லாட்டரி சீட்டு விற்பவர் மட்டுமல்ல; கொலையுண்டவர்களுக்கு மதச்சடங்கு செய்வோரும், அவற்றிலே கலந்து கொள்வோரும் கூட கொல்லப்பட்டனர்.

தமது தாக்குதல் நடவடிக்கைகளுக்கு யார் பலியாகிறார்கள் என்கிற அக்கறையும் ஜே.வி.பி.க்குக் கிடையாது. வயோதிகர்கள், குழந்தைகள் - சிறுவர்கள், பெண்கள், பார்வையாளர்கள் - உறவினர்கள் ஆகிய அனைவரையும் கொன்றனர். மிகவும் குரூரமான முறைகளையும் மேற்கொண்டனர். தெருவிளக்குக் கம்பத்திலே கட்டி, டயர் மாலை போட்டுக் கொளுத்தினர்! தலைகளை வெட்டிப் பிணத்தை சாலையோரங்களில் வீசினர். இவை எதிரிகளை எச்சரிப்பதற்கானவையாகக் கருதினர்.

அதே சமயம் 'மக்கள் புரட்சி செஞ்சேனை', பச்சைப் புலிகள், தேள், கழுகுப்படைகள் என்கிற பெயரில் போலீசு மற்றும் தொழில்முறைக் கிரிமினல்களை வைத்து ஜெயவர்த்தனே - பிரேமதாசா கும்பல் இரகசியக் கொலைக் குழுக்களைக் கட்டி ஜே.வி.பி. மீது ஏவியது. அவை ஜே.வி.பி. அணிகள் மற்றும் அப்படிச் சந்தேகிக்கப்படுவோர் மட்டுமின்றி இளைஞர்கள் அனைவரையுமே தேடிப்பிடித்து படுகொலைகள் செய்தன. சாலையோரங்கள், கடற்கரைகள், ஆறுகள், பள்ளி - கல்லூரி வளாகங்களிலே பிணங்களை சிதறியடித்து பயபீதியை உருவாக்கினர்.

பாசிசத் தேர்தல் மோசடிகள் மூலம் பிரேமதாசா அதிபராகி இந்திய அரசுடன் புதிய பேரங்கள் நடத்த இந்திய இராணுவ விலக்கத்துக்கு சம்மதிக்க வைத்து விட்டார். அரசியல் முன் முயற்சியை இழக்கும் நிலைக்கு ஜே.வி.பி. தள்ளப்பட்டது. ஆனால் அதுவோ தற்கொலைக்கொப்பான இருமுடிவுகள் எடுத்தது. அரசு அலுவலகங்கள், வாகனங்கள், தொழிற்சாலைகள் மற்றும் தேயிலைத் தோட்டங்களைக் கொளுத்துவது; போலீசு - இராணுவத்தினர் வேலையை விட்டு விலகிவிட வேண்டும், இல்லையேல் அவர்களது குடும்ப உறவினர் கொல்லப்படுவர் என எச்சரித்தது. இந்த இருமுடிவுகள் காரணமாக பரந்துபட்ட மக்களிடமிருந்து ஜே.வி.பி. தனிமைப்பட்டது; கணிசமான அளவு போலீசு - இராணுவத்துக்குள் ஊடுருவி ஆதரவாளர்களைப் பெற்றிருந்த போதும் ஜே.வி.பி.யினரைப் பழிவாங்கும் கொலைவெறியில் போலீசு - இராணுவத்தைத் தள்ளியது

"ஜே.வி.பி.யினரின் ஒவ்வொரு கொலைக்கும் 14 ஜே.வி.பி.யினரைக் கொன்று பழிதீர்ப்போம்" என்று பிரேமதாசாவின் கொலைக் குழுக்கள் அறிவித்தன. அப்புறம் அரசு பயங்கரவாதமும், ஜே.வி.பி. பயங்கரவாதமும் உச்சநிலையை அடைந்தன. இலங்கையின் இன்றைய இளைய தலைமுறையே பூண்டோடு அழிக்கப்பட்டு விடுமோ என்கிற அளவு கொலைவெறி தாண்டவமாடியது. அதன் உச்சகட்டமாக ஜே.வி.பி.யின் நிறுவனத் தலைவர் ரோகண விஜயவீரா உட்பட அதன் தலைமை முழுவதும் பாசிச பிரேமதாசா கும்பலால் நயவஞ்சகமாகக் கொல்லப்பட்டது.

முழுக்கவும் இராணுவ - சதிமுறையிலான அமைப்பாகவே ஜே.வி.பி. மற்றும் டி.ஜே.வி. ஆகியன இயங்கி வந்ததால் அவற்றுக்குள் ஊடுருவி தலைமையை அழிப்பது அரசுக்கு வாய்ப்பாக அமைந்தது. இப்பெரும் பின்னடைவுக்குப் பிறகும் பியசிரி ∴பெர்னான்டோ தலைமையில் ஜே.வி.பி மீண்டும் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது; பாரிய படிப்பினைகளைப் பெற மறுக்கிறது.

ஜே.வி.பி. தன்னை ஒரு மார்க்சிய - லெனினியப் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர அமைப்பாகக் கூறிக் கொண்ட போதிலும், அதற்கு மாறான, தவறான பல அடிப்படைகளைக் கொண்டிருக்கிறது.

★ ஸ்டாலின், மாவோ உட்பட மார்க்சிய - லெனினிய ஆசான்களின் சித்தாந்தங்களை ஏற்பதாகக் கூறிய போதும் உண்மையில் டிராட்ஸ்கிய சித்தாந்தப் பாதையையும், சேகுவாராவின் இராணுவப் பாதையையுமே ஜே.வி.பி. ஏற்று அமுலாக்கியது. கூடவே சிங்கள தேசிய இனவாதத்தையும் இணைத்துக் கொண்டது.

★ இலங்கை பெயரளவிலான சுதந்திரம் பெற்ற ஒரு நவீன காலனிநாடு என்று கணித்திருந்தது. இருந்தபோதும் அதன் யதார்த்த நிலைமைகளை ஆய்வு செய்து ஒரு புதிய ஜனநாயகப் புரட்சித் திட்டத்தை மேற்கொள்ளவில்லை. டிராட்ஸ்கிய சித்தாந்த அடிப்படையில் சோசலிசத் திட்டத்தை முன்வைத்தது. தேயிலை, ரப்பர் தோட்டங்களை அழித்துவிட்டு கூட்டுப் பண்ணைகளை அமைக்கும் கற்பனாவாத சோசலிசப் பொருளாதாரத் திட்டத்தை வைத்திருந்தது.

★ இலங்கையின் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் இந்திய வம்சாவழி மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள். குறுகிய சிங்கள பேரினவாதத்துக்குப் பலியான ஜே.வி.பி. அவர்களையும், ஈழத் தமிழர்களையும் புரட்சிக்குத் திரட்ட வேண்டிய பணியை நிராகரித்தது. சிங்கள இனவாத அரசியலை மையமாக வைத்து விரைவான ஆதரவைத் தேடி விடமுடியும் என்ற கருத்தில் சிங்கள இனவெறி புத்தபிக்குகள், சிங்கள முதலாளிகள் ஆகியோரோடு வர்க்க சமரசம் மேற்கொண்டது.

★ மலையகத் தொழிலாளர்களை மட்டுமல்ல, நகர்ப்புறத் தொழிலாளர்களும் புரட்சிக்குத் தலைமை தாங்கத் தகுதியற்றவர்கள் என்று நிராகரித்தது; அதே போல விவசாயிகளைத் திரட்ட வேண்டியதன் அவசியத்தை ஏற்கவில்லை. மாணவர்கள் மற்றும் நகர்ப்புற, கிராமப்புற வேலையற்ற இளைஞர்களைக் கொண்ட இராணுவ ரீதியிலான அமைப்பு மட்டுமே கட்டியது. பள்ளி - கல்லூரி மாணவர்கள், வேலையில்லாத இளைஞர்கள், புத்த பிக்குகள், தேசியவாத புத்திஜீவிகள், சிங்கள - புத்த வியாபாரிகள் ஆகியோர்கள் ஜே.வி.பி.யின் சமூக அடிப்படைகள்.

★ மக்கள் திரள் புரட்சிப் போராட்டங்கள், நீண்டகால மக்கள் யுத்தப்பாதை ஆகியவற்றை நிராகரித்து விட்டு சேகுவாராவின் இராணுவப் பாதையை ஜே.வி.பி. தெரிவு செய்து கொண்டது. அதன்படி இரகசியக் கொரில்லாக் குழுக்களைக் கட்டி ஆயுதங்களைச் சேகரித்து திடீரென்று சிவில் - இராணுவத் தலைமையைத் தாக்கி அழிப்பது; போலீசு நிலையங்கள், இரா

தொழிலாளிகளை அல்ல; சிங்கள-பௌத்த பிக்குகளைத் திரட்டிப் போராடும் ஜே.வி.பி



படிப்பகம்

www.padippakam.com

ணுவ முகாம்கள் முதலிய கேந்திர நிலைக ளைத் தாக்கிக் கைப்பற்றுவது; இந்த ஆயுதந்தாங்கிய எழுச்சியின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதுதான் ஜே.வி.பி.யின் இராணுவத் திட்டம். அதற்கு முன்னோடியாகத்தான் பல பயங்கரவாதச் செயல்களைச் செய்து அரசியல், பொருளாதார நிர்வாகத்தை நிலைகுலைக்க முயன்றது.

★ புரட்சியின் நண்பர்களையும் எதிரிகளையும் பகுத்தறிந்து, அணுகத் தவறியது. ஒருபுறம் வென்றெடுக்கப்பட வேண்டிய ஜனநாயக, தேசபக்த சக்திகளையும், அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்த வேண்டிய சமரச சக்திகளையும் எதிரிகளாகப் பாவித்து பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது. மறுபுறம் தேசிய இனவெறிச் சக்திகளுடனும், ஆளும் வர்க்க பிரதிநிதிகளுடனும் சந்தர்ப்பவாதக் கூட்டுகள் வைத்துக் கொண்டது.

இக்காரணங்களால் ஜே.வி.பி. ஒரு சிங்கள பேரினவாத சமூக பாசிச இயக்கமாகச் சீரழிந்து போனது. தற்போதைய பின்னடைவு - வீழ்ச்சியையும் சரிக்கட்டி அது மீண்டும் எழலாம். ஏனெனில் எல்லா நாடுகளிலுமே பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கத்துக்கு இணையாக குட்டி முதலாளித்துவ சீர்குலைவு - அராஜகத்துக்கான அடிப்படைகள் நிலவுகின்றன.

மார்க்சிய - லெனினிய - மாவோ சிந்தனையைச் சித்தாந்த வழிகாட்டியாகக் கொண்ட, யதார்த்த நிலைமைகளுக்குப் பொருத்தமான புரட்சிகரத் திட்டம், அரசியல், இராணுவப்பாதை, போல்ஷ்விக் கட்சி, பாட்டாளி வர்க்க சர்வதேசக் கண்ணோட்டம் ஆகியவை மட்டுமே புரட்



ரோஹண விஜயவீரா.

சியை சாதிக்க முடியும் என்ற இந்தப் படிப்பினையை மீண்டும் ஒருமுறை ஜே.வி.பி.யின் வரலாறு காட்டுகிறது.

ஆனால் எல்லா நாட்டிலும் புரட்சிகர இயக்கங்களின் அனுபவமும் இதுதான்! இன்னும் குறிப்பான, நமது நாட்டுப் புரட்சி இயக்கங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கியமான சில படிப்பினைகளை ஜே.வி.பி. கொடுத்திருக்கிறது.

☆ இடது தீவிரவாதத் தவறுகளைக் களைவது; மக்கள் திரளை வென்றெடுப்பது; பெரும்பான்மையான நிலைமைகளுக்கு ஏற்ப 'தந்திரமாக' நடந்து கொள்வது என்கிற பெயரில் பல குழுக்கள் ஜே.வி.பி.யின் தவறுகளையே இங்கே பின்பற்றுகின்றன. அரசியலற்ற தன்னார்வக் குழுக்கள் முதல் ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகள் வரை சந்தர்ப்பவாதக் கூட்டு வைத்துக் கொள்ளுகின்றன. இன்னும் சில குழுக்கள் அம்பேத்கார் போன்ற முதலாளித்துவ சீர்திருத்தவாதிகள், வன்னிய சங்கத் தலைவர் ராமதாஸ் போன்ற சாதி, மதவாதிகளுக்கு வால் பிடிக்கின்றன. மற்றும் சில குழுக்கள் தமிழரசன், பெருஞ்சித்திரனார் போன்ற இனவாதிகளைப் பின்தொடர்கின்றன அல்லது 'தனித் தமிழ்நாடு' போன்ற தேசிய இன முதலாளித்துவ முழக்கங்களைத் தாமே வரித்துக் கொள்ளுகின்றன.

☆ பரபரப்பூட்டி குறுக்கு வழியில் விரைவான வெற்றியைச் சாதித்து விடும் வேகத்தோடு பாலங்கள் - சிலை தகர்ப்பு, அரசு அலுவலகங்கள் - வாகனங்களைக் கொளுத்துவது, வங்கிக் கொள்ளைகள், தனிநபர் அழித்தொழிப்பு போன்ற சாகசச் செயல்களில் சில குழுக்கள் ஈடுபடுகின்றன. இப்படிப்பட்ட தனிநபர் பயங்கரவாதச் செயல்களுக்காகவே - அவர்களின் சித்தாந்தம், அரசியல் - இராணுவப் பாதை எதுவானாலும் - ஜே.வி.பி.யையும், அதன் ஈழப் பதிப்பான புலிகளையும், இந்தியப் பதிப்பான தமிழரசன் குழுவையும் புகழ்ந்து தள்ளுகின்றன. இன்னும் மேலே போய் சீக்கிய மதவெறி தீவிரவாதிகளைக் கூட ஆதரிக்கின்றன. இவர்கள் மீது விமர்சனக் கண்ணோட்டம் வைப்பது கூட வறட்டுத்தனமான அணுகுமுறை என்று அக்குழுக்கள் சாடுகின்றன.

ஆனால் இம்மாதிரியான அணுகுமுறை புரட்சியை நோக்கி இந்தக் குழுக்களை அழைத்துச் செல்லாது. ஒருபுறம் வலது சந்தர்ப்பவாதிகளாகச் சீரழிக்கும் அல்லது எதிரிகளின் தாக்குதலுக்கு முகங்கொடுக்க முடியாமல் அழித்துவிடும். இந்தப் படிப்பினைகளைத்தான் ஜே.வி.பி இயக்கம் அளிக்கிறது.

● சோமநாதன்

## பொன்மலை தொழிலாளர்களின் முன்னுதாரணமிக்க போராட்டம்.

கடந்த 7.12.89 அன்று பொன்மலை பணிமனையின் ஒரு பகுதியான டி.எல்.எஸ். பணிமனையின் கண்காணிப்பு அதிகாரி லூயிஸ்-இன் அடக்கு முறைகளையும், அதிகார அத்துமீறல்களையும் தொழிலாளர் பிரச்சாரக் குழு தோழர்கள் இருவர் சென்று சுட்டிக்காட்டி லூயிஸின் நடவடிக்கைகளை திருத்திக் கொள்ளக் கூறினர். ஆனால் லூயிஸோ அங்கு திரண்டிருந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்களின் மத்தியில் தொ.பி.கு. தோழர்களைப் பார்த்து, ''நான் அப்படித்தான் செய்வேன், இதையெல்லாம் கேட்க நீங்கள் யார்?'' என்று கேட்டார். தொ.பி.கு. தோழர்கள் 'இது உங்கள் முடிவாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் திருத்தப்படும் நாள் வெகு தூரத்ததில் இல்லை. அத்துடன் உங்கள் திமிரை தொழிலாளர்களின் ஆதரவுடன் அடக்கிக் காட்டுகிறோம்'' என்று கூறிவிட்டு வந்தனர்.

இதன்பிறகு எலக்ட்ரிகல் துறையின் உதவி தலைமை அதிகாரியான வரதராஜின் அடிவருடியான லூயிஸ், அவரிடம் சென்று நீலிக் கண்ணீர் வடித்தார். இதைக் கேட்ட வரதராஜு வெகுண்டெழுந்து டி.எல்.எஸ். பணிமனையில் வேலை செய்யும் கருங்காலிகள் 10 பேரிடம் தொ.பி.கு. அமைப்பாளர் முருகானந்தம் மற்றும் ஆதரவாளர் நேச இருதயம் ஆகிய இருவரும் லூயிஸை வம்புக்கிழுத்ததாக கையெழுத்து வாங்கி, ''பொய் சாட்சி'' கடிதம் தயாரித்து கொண்டார். இதை வைத்துக் கொண்டு தோழர்கள் முருகானந்தம், நேச இருதயம் இருவருக்கும் ''சஸ்பெண்ட்'' உத்தரவு கொடுத்தார்கள். இந்த உத்தரவைக் கண்ட ஈ.எம்.டபிள்யூ. பிரிவின் அனைத்து தொழிலாளர்களும் வெகுண்டெழுந்து பணிமனைக்கு வெளியில் கூடி, ''அநியாயமாக கொடுத்த தற்காலிக வேலை நீக்க உத்தரவைத் திரும்பப் பெறு'' என்று, தொழிலாளி ஒருவர் தலைமையின் கீழ் சங்க வித்தியாசமில்லாமல் கூடினர். போராட்டம் ஏறத்தாழ மூன்றரை மணி நேரம், சஸ்பெண்ட் உத்தரவு திரும்பப் பெறும்வரை தொடர்ந்தது.

தொழிலாளர்களின் வீரமிக்க ஒற்றுமையான போராட்ட உணர்வைக் கண்ட அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்களான எஸ்.ஆர்.ஈ.எஸ், எஸ்.ஆர்.எம்.யூ. உள்ளிட்ட அனைத்து அங்கீகார தலைமைகளும் போராட்டத்தில் இணைந்து கொண்டன. மேலும் கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்பே. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களாகிய எஸ்.ஆர்.ஈ.எஸ்., எஸ்.ஆர்.எம்.யூ. சங்கத் தலைமைகளை நிர்வாகம் அழைத்து, தொ.பி.கு. அமைப்பாளர் முருகானந்தம், நேச இருதயம் உள்ளிட்ட மற்றும் 6 தொழிற்சங்க முன்னோடிகளை ''சஸ்பெண்ட்'' செய்யப் போகிறோம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டதற்கு இச்சங்கங்கள் ''சம்மதம்'' தெரிவித்துவிட்டு வந்தன.

ஆனால் தொழிலாளர்கள் போராட்டத்தில் குதித்துவிட்ட காரணத்தினால் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இச்சங்கங்கள் இரண்டும் சஸ்பெண்ட் உத்தரவை ''வாபஸ்'' வாங்க பேச்சுவார்த்தை நடத்துகிறோம் என்று நாடகமாடி, தாங்கள் தான் சஸ்பெண்ட் உத்தரவை வாபஸ் வாங்கச் செய்ததாக தொழிலாளர்கள் மத்தியில் பிரமையை உண்டாக்கினர்.

தொழிலாளிகள் வர்க்க உணர்வுடன் ஒன்றுபட்டால் திமிர் பிடித்த அதிகார வர்க்கம் ஆடிப்போகும் என்பதற்கு பொன்மலை எலக்ட்ரிகல் பிரிவு தொழிலாளர்களின் போராட்டம் ஒரு முன்னுதாரணம்.

*வெல்க தொழிலாளர்களின் போராட்டம்!*

தகவல்: தொழிலாளர் பிரச்சாரக் குழு, பொன்மலை கிளை



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளாடை நிறுவனங்கள்: தொழிலாளர்களைக் கொத்தடிமையாக்கும் கொடூரம்!

திருப்பூர். வறண்ட கிராமங்களின் மத்தியில் பணம் காய்க்கும் நகரம். தீப்பெட்டி என்றாலே சிவகாசி என்பது போல் உள்ளாடைகள் என்றாலே திருப்பூர் என்று பெயரெடுத்த நகரம். சிறிதும் பெரிதுமாக 1850க்கும் அதிகமான உள்ளாடை தயாரிக்கும் நிறுவனங்கள் இங்கு இயங்குகின்றன.

குறிப்பாக, '70 ஆம் ஆண்டுகளிலிருந்து '80 ஆம் ஆண்டுகளில் இந்தியாவிலேயே வேகமாக வளர்ச்சியடைந்த தொழில் நகரங்களில் இதுவும் ஒன்று! ஏறக்குறைய 40,000 தொழிலாளர் குடும்பங்கள் இத்தொழிலில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர். உள்ளாடைக்கான துணி உற்பத்தி உட்பட நேர்த்தி ஆக்கப்பட்ட உள்ளாடைகள் 'பேக்கிங்' வரை குழந்தைகள், பெண் தொழிலாளர்கள் உழைக்கிறார்கள்.

தையல், தர சோதனை, விற்பனைக்கேற்றவாறு சிறுசிறு பெட்டிகளில் அடைப்பது வரை சிறுவர், சிறுமிகள், பெண்கள் தான் அதிகமாக ஈடுபடுத்தப்படுகின்றனர். இயந்திர நெசவு, சாயம் ஏற்றுதல், தகுந்த வடிவங்களில் கத்தரித்தல் போன்ற வேலைகளில் ஆண் தொழிலாளர்கள் அதிகமாக ஈடுபடுத்தப்படுகின்றனர். இதில் பெரும்பாலோர் அண்டை கிராமப்புறங்களில் இருந்து குடியேறியவர்கள்.

'60 ஆம் ஆண்டுகள் வரை பிழைப்பு தேடி வறட்சி காலங்களில் திருப்பூர், ஈரோடு, கோவை நகரங்களுக்கு சென்றவர்கள், உள்ளாடை தொழிலில் திருப்பூர் வேகமாக வளர்ந்தவுடன், மொத்தமாக அந்நகரத்தை நோக்கி குவிந்தார்கள். மிகக் குறுகிய காலத்தில் பல்வேறு பிரிவு தொழிலாளர்களும் அமைப்பு ரீதியில் திரண்டார்கள்.

சம்பள உயர்வு, தொழிற்சங்க அங்கீகாரம், சட்டப்பூர்வமான பணி, சலுகைகள் இவற்றுக்காக '62 ஆம் ஆண்டில் ஒரே குரலில் போராடினார்கள். பரம்பரையாக வட்டி 'தொழிலு'ம், வர்த்தக சூதாட்டத்திலும் ஈடுபட்டு பணம் சேர்த்த செட்டிமார்கள் இத்தொழிலில் ஆதிக்கம் செலுத்தினர். நிலப்புரபுத்துவ முறையில் தொழிலாளர்களை சுரண்டிய செட்டிமார்கள், தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு முகங்கொடுக்க முடியாமல், தொழிலை விட்டே ஓடி விட்டனர்.

அதனிடத்தில், புதுவகை பணக்கார விவசாயிகளாக வளர்ந்துவந்த கவுண்டர் சாதியினர் அத்தொழிலை போட்டியின்றி கையகப்படுத்தினர். தொழிலாளர்களின் போராட்டங்களிலிருந்து அனுபவம் பெற்ற இவர்கள் ஓங்கி வளர்ந்திருந்த தொழிலாளர்களின் அமைப்பு பலத்தை கீழறுத்துப் போடும் வேலையில் இறங்கினர்.

சட்டப்படி சலுகைகள் அளிக்கக்கூடிய 20க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அடங்கிய தொழிற்சாலைகள் பெரும்பாலானவற்றை ஏராளமான உட்பிரிவுகளாக பிரித்து தொழிலாளர் அமைப்புகளை பிய்த்து எறிந்தனர். அந்த உட்பிரிவுகளையும் நிர்வாகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் இல்லாமல் 'காண்ட்ராக்ட்'காரர்கள் மூலம் இயக்கினார்கள். பல நூற்று கணக்கில் ஒரு தொழிற்சாலையின் கீழ் பணிபுரிந்த தொழிலாளர்கள், பட்டறைத் தொழில் போன்றதான சிதறலான ஜனநாயகத் தன்மையற்ற வேலை சூழ்நிலையின் கீழ் தள்ளப்பட்டனர்.

கடுமையான கண்காணிப்பு, அபராதம், பணி இழப்பு, உடல் உள ரீதியில் அவமானப்படுத்தப்படுதல் போன்ற நிலப்பிரபுத்துவ தளைகள் பூட்டப்பட்டனர். இக்காலங்களில் தொழிலாளர்கள் சிதறலாக பல வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டனர். அமைப்பு பலமற்ற பலவீனமான அவர்கள் போராட்டம் முதலாளிகளால் ஆரம்பத்திலேயே நசுக்கப்பட்டது.

தங்களுக்கு ஏற்பட்ட காயங்களுக்கு ஊடே '69 ஆம் ஆண்டில் தொழிலாளர்கள் ஒருசேர நிமிர்ந்தார்கள். பழிவாங்கிய முதலாளிகள் செய்வதறியாது திகைத்தார்கள். 3 மாத காலம் போராட்டம் நீடித்தது. முதலாளிகளின் - துரோகத் தொழிற்சங்கங்களின் நரித்தனம் அரங்கேறியது. முதலாளிகளின் சங்கமான 'தென்னிந்திய உள்ளாடை உற்பத்தியாளர்கள் சங்கம்' (SIHMA) 'உற்பத்திக்கேற்ப சம்பளம்' என்ற நயவஞ்சக கொள்கை அமுல்படுத்த முன்வந்தது. போலிக் கம்யூனிஸ்ட்டுகளின் தலைமையிலான சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி. சார்பு சங்கங்கள் இதை ஆதரித்தன. அதிக சம்பளம், உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும் என்ற பிரமையை ஏற்படுத்தி தொழிலாளர்களை இவ்வலையில் சிக்க வைத்தன.

அடி முதல் நுனி வரை அனைத்து வேலைகளிலும் 'காண்ட்ராக்ட்' முறையை புகுத்தினர். மனைவி, மகன், குழந்தைகள் பெயரிலும், உறவினர்கள், பினாமிகள், விசுவாசிகள், சாதிக்காரர்கள் என்று 'காண்ட்ராக்ட்' விட்டனர். இதில் வேடிக்கை என்னவென்றால், ஒரு தொழிற்சாலைக்குள்ளேயே ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வொரு 'காண்ட்ராக்ட்'காரர்கள் எடுத்து நடத்தி வருகின்றனர். தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இருந்த உறவு வெட்டப்பட்டது.

கொடுத்த வேலையை முழு வேகமாக நிறைவேற்றவில்லை என்றாலோ, உடல் நல பாதிப்பால் சற்று அதிகமாக விடுப்பு எடுத்தாலோ (கூலி இல்லாமல்தான்!) 'காண்ட்ராக்ட்'காரர்கள் தொடர்ந்து வேலை கொடுப்பது இல்லை. செய்த வேலைக்கு தான் கூலி என்றாலும், இயந்திரம் போல் இயங்க வேண்டும்.

குறைந்த கூலிக்கு தொழிலாளர்களின் ரத்தத்தை உறிஞ்சுவதோடு வேகமாக உறிஞ்சுவது என்பதுதான் 'காண்ட்ராக்ட்' முறையின், 'உழைப்புக்கேற்ற ஊதிய'த்தின் மைய சாராம்சம். ஆண்டு முழுவதும் நடந்த வேலைகள் இப்போது நான்கே மாதங்களில் முடிவடைந்து விடுகின்றன.

பருவ மழையை நம்பி விவசாயிகள் ஏங்குவது போல், ஆண்டுக்கு நான்கு மாதங்களுக்காக தொழிலாளர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். வேலையில்லாத பெரும் பட்டாளம் பெருந்திரளாக காத்துக் கொண்டிருக்க, கூலி உயர்வு போராட்டத்தில் கூட உறுதியாக நிற்க தொழிலாளர்கள் அஞ்சுகிறார்கள்.

குறிப்பாக, இந்த நான்கு மாதங்களில், தையல் பிரிவு தொழிலாளர்கள், நாளொன்றுக்கு 3 மணிநேரம் கூட உறங்குவதில்லை. இன்னும் திருப்பூரை சுற்றி கிராமங்களில் இருக்கும் தையல் தொழிலாளர்கள், தங்கள் தையல் இயந்திரங்களுடன் வந்து தொழிற்சாலைகளில் பணி புரிகிறார்கள். அவ்வளவு போட்டி!

*கண்ணைப் பறிக்கும் உள்ளாடைகள், நேர்த்தியான பனியன், ஜட்டிகள் திருப்பூரிலிருந்து ஏராளமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது. அந்நியச் செலாவணி உட்பட அரசுக்கும் முதலாளிகளுக்கும் பெரும் லாபத்தை ஈட்டி தருகிறது. உள்நாட்டிலும், 'டான்டெக்ஸ்', 'வைகிங்', 'ஸ்பைடர்' போன்ற ஏராளமான உள்ளாடை நிறுவனங்கள் கொடிகட்டிப் பறக்கின்றன.*

*இவை ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை நேரடியாக ஒரு தொழிற்சாலையின் கீழ் திரட்டி மிகப்பெரும் வல்லுநர்களின் மேற்பார்வையில் உருவானவை அல்ல. 'காண்ட்ராக்ட்' முறையில் குடிசையிலும், குப்பங்களிலும் தயாரித்து வாங்கி பெரும் நிறுவனங்கள் 'லேபிள்' ஒட்டி விற்கின்றன. தொழிற்சாலையை நிர்வகிக்கும் வேலையையோ, மேற்பார்வை இடும் வேலையோ, எதையும் முதலாளி என்பவன் செய்வது இல்லை. 'மாடல்'கள் கொடுக்கப்பட்டு அதன்படி உள்ளாடைகள் கூலித் தொழிலாளர்களால் உருவாக்கப் படுகின்றன.*

படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளியின் குழந்தைகளைக் கொண்டே தொழிலாளியின் ஊதியத்தை வெட்டுவது 'கான்ட்ராக்ட்' முறையின், உழைப்புக்கேற்ற ஊதியத்தின் இன்னொரு குரூரமான அம்சம்.

உதவியாளர்கள் (Helpers) என்றும் அதிலும் புதிதாக வந்தவர்கள், பழைய நபர்கள் என்றும், அரைகுறை பயிற்சி பெற்றவர்கள், முழுமையான பயிற்சி பெற்றவர்கள் (Tailors) நுணுக்கம் தெரிந்தவர்கள், (Singer Tailors) என்றும் சல்லடையில் சலிக்காத குறையாக தொழிலாளர்களை தரம் பிரிக்கிறார்கள்.

இதில் 'கான்ட்ராக்ட்'காரர்களின் அளவுகோலின்படி 'டைலர்', 'சிங்கர் டைலர்'கள் தான் ஓரளவு முழுமையான கூலி பெற தகுதி படைத்தவர்கள்! மற்றவர்கள் அனைவரும் ஒப்புக்கு சப்பாணிகள்! கான்ட்ராக்ட்காரர்கள் பாவம் பார்த்து அவர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள் என்று அர்த்தம்!

இதனால், ஒரு தையல் தொழிலாளியிடம் 4 தையல் தொழிலாளியின் உழைப்புதிறன் அளவு சுரண்டுகிறார்கள். அதே நேரத்தில் சிறுவர்களுக்கு அற்ப கூலி கொடுத்து, அவர்களிடமும், அதிகபட்ச உழைப்பு திறனை உறிஞ்சி விடுகிறார்கள். ஒரு கணக்கெடுப்பின்படி, ஒரு தையல் தொழிலாளி 5 நாள் செய்யக்கூடிய வேலையை, சிறுவர்களை இணைப்பதன் மூலம் 2 நாளில் செய்து விடுகின்றனர். மூலதனம் வேகமாக சுழல்கிறது. லாபம் கொட்டுகிறது. இதனால், தொழிலாளி 3 நாட்கள் வேலையையும் கூலியையும் இழக்கிறான்.

குழந்தை உழைப்பாளிகளை அடிப்பது சர்வ சாதாரணமாக நடக்கிறது. ஒரு 'கான்ட்ராக்ட்'காரரிடம் குடும்பமே வேலை செய்யும் போது, குழந்தையை 'கான்ட்ராக்ட்'காரன் அடிப்பதை தாய் வேதனையோடு பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

முதலாளிகளின் விசுவாசிகள், பினாமிகள், சாதிக்காரர்கள் இல்லாமல் தனிப்பட்ட தொழிலாளியும் சிறு அளவில் 'கான்ட்ராக்ட்' எடுப்பது உண்டு. இவர்கள் பெரும்பாலும் நாள் கூலி கணக்கில் தொழிலாளியை வேலைக்கு அமர்த்திக் கொள்கின்றனர். எனவே, இவர்கள் அதிகபட்சம் தொழிலாளியை கசக்கி பிழிவதில் குறியாய் இருக்கின்றனர்

*பெண்கள், தற்போதைய சமூக சூழ்நிலையில், மிகவும் பிற்போக்கான முறையில் நடத்தப்படுவதை தமக்கு சாதகமாக பயன்படுத்தி, அவர்களுக்கு குறைந்தபட்ச உரிமைகூட கொடுக்காமல் கசக்கிப் பிழிகின்றனர். நாடு முழுவதும் கொத்தடிமைத் தனத்திற்கு எதிராகவும், 'கான்ட்ராக்ட்' வேலை முறைக்கு எதிராகவும், குரல் கொடுப்பதாக பம்மாத்து செய்கின்றன, போலிக் கம்யூனிஸ்ட்டுகளின் சார்பான தொழிற்சங்கங்கள். ஆனால் மேற்கூறிய கொடுமைகள் அனைத்துக்கும் திறவுகோலாக இருக்கும் 'கான்ட்ராக்ட்' முறையை புகுத்துவதில் உள்ளாடை முதலாளிகளுக்கு திருப்பூரில் முழு ஆதரவு கொடுத்தன.*



ஆண் தொழிலாளர்களை அவ்வளவாக மிரட்டிப் பணிய வைக்க முடியாது என்பதால், சிறுவர்களையும் பெண்களையும் அதிகமாக வேலைக்கு அமர்த்திக் கொள்கின்றனர். "பெண்கள் ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை பீடி, டீ என்று வெளியே போவதில்லை" என்று காரணம் சொல்கிறார்கள்.

இந்த சிறு 'கான்ட்ராக்ட்' காரர்கள், ஏதோ ஒரு குருட்டு தைரியத்தில் நிலத்தையும் விற்றும் கடன் பட்டும் தொழிலை ஆரம்பிக்கின்றனர். தங்கள் குடும்ப உறுப்பினர்களையும் சாதாரண கூலித் தொழிலாளர்கள் போலவே கசக்கி பிழிகின்றனர். இவ்வளவுக்கு பிறகும் இவர்கள் 'லாபம்' பார்ப்பது அரிதாகவே இருக்கிறது.

பல நேரங்களில் தொழிலாளர்களுக்கு கூலிகூட கொடுக்க முடியாமல் பரிதாபமாக திண்டாடுவார்கள். காரணம் என்னவெனில், போட்டியின் நடுவே 'கான்ட்ராக்ட்' பிடிக்க வேண்டியிருப்பதால், குறிப்பிட்ட முதலாளிகளிடம் பல வாரக் கணக்கில், கூலி பணம் கேட்கவே பயப்படுகிறார்கள். இன்னும் சம்பமந்தப்பட்ட முதலாளி தயவில், வெளி கடனோ, வங்கி கடனோ வாங்கியிருந்தால், வாய்திறந்து கூலி கேட்பதில்லை. கொடுக்கும் போது வாங்கிக் கொள்கிறார்கள். முதலாளிக்கு அதிகப்பட்ச விசுவாசமாக இருக்கிறார்கள். இதற்காகவே பல முதலாளிகள், தங்கள் கீழ் பல்லாண்டு காலம் பணிபுரிந்த தொழிலாளர்களைத் தேர்ந்தெடுத்து 'கான்ட்ராக்ட்' எடுத்து நடத்த ஊக்குவித்து, அதிலும் குரூரமாக சுரண்டுகின்றனர்.

பாட்டாளிவர்க்கத்தின் மாபெரும் ஆசான் மார்க்ஸ் தனது மூலதனத்தில் விளக்குகிறார், "கான்ட்ராக்ட் முறை, முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையிலான இடைத் தரகர்களை உருவாக்குவதோடு, மூலதனத்தின் சுரண்டலை, சக தொழிலாளியின் சுரண்டலாக திரித்துக் காட்டுகிறது" என்கிறார். முதலாளித்துவத்தின் கேடுகெட்ட, நயவஞ்சகமான இக்கொள்கையை சிறுமுதலாளிகள், அப்படியே தொழிலாளர்களின் மீது தள்ளிவிடுகின்றனர். தொழிலாளர்கள், ஒரு விரிந்த பார்வையில்லாமல் அரசியல் ரீதியில் உறுதியான தொழிற்சங்க தலைமையில்லாமல், துரோகிகளின் பிடியில் சிக்கிக் கிடக்கின்றனர். 'கான்ட்ராக்ட்' முறைக்கு எதிரான போராட்டமும், அதில் கிடைக்கும் வெற்றியும் தான் தொழிலாளர்களின் அடுத்தகட்ட முன்னேற்றத்திற்கு பாதை அமைத்துக் கொடுக்கும் ஒரே தீர்வாக இருக்கும்.

■ குணசேகரன்.

*தொழிலாளர்களுக்கான எந்த உரிமையையும் இல்லை. 'இவ்வளவு உருப்படி செய்தால் இவ்வளவு கூலி' தரம் குறைந்தால், அபராதம் செலுத்த வேண்டும். அல்லது முழு ஆடைக்கான பணத்தையும் தொழிலாளி தரவேண்டும். அனைத்திற்கும் மேலான கொடுமை, தொழிலாளர்களை சிறுசிறு குழுக்களாகப் பிரித்து, உழைப்பில் அவர்களுடைய ஆக்கபூர்வமான பாத்திரத்தை திட்டமிட்டு சிதைக்கிறார்கள்.*

*உதாரணத்திற்கு, இயந்திரங்களின் மூலம் 'பட்டன்' தைக்கும் பிரிவு தொழிலாளிக்கு பல ஆண்டுகள் ஆனாலும் முழு ஆடை தைக்க தெரியாது! அதுபோலவே, 'காலர்', 'கை' தைக்கும் பிரிவில் இருக்கும் தொழிலாளிக்கு அதே நுணுக்கத்தோடு, முழு ஆடை தைக்க தெரியாது! இத் தொழிலாளர்கள் எங்கு சென்றும் சுய காலில் நிற்க முடியாது. திரும்ப திரும்ப எவனாவது ஒரு முதலாளியின் காலடியில் தான் போய்விழ வேண்டும்.*

படிப்பகம்

www.padippakam.com

# அம்பாணியை அரவணைக்கும் ஜோதிபாசு

புதிய பரிசுத்தம் வி.பி.சிங் ஆட்சிக்கு வந்ததும், ராஜீவின் கூட்டாளியும் தரகுப் பெரு முதலாளியுமான அம்பாணியின் தொழில் மங்கிவிடும் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் அம்பாணி போலிக் கம்யூனிஸ்டுகளின் ஆதரவுடன், மே.வங்கத்தில் ஹால்டியா பெட்ரோ-ரசாயன கூட்டுப் பங்கு நிறுவனத்தையே கைப்பற்றி புதிய அத்தியாயத்தையே துவக்கிவிட்டார்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மே.வங்கத்தை முன்னேற்றும் நோக்குடன் இரு தலைமுறைக்கு முன் ஹால்டியாவில் இரும்பு எஃகுத் தொழில் நிறுவ திட்டமிடப்பட்டது. பின்னர், பெட்ரோ - ரசாயன ஆலைதான் லாபகரமானது என்று அரசும் தனியார் முதலாளியும் கூட்டுச் சேர்ந்து நடத்தும் கூட்டுப் பங்கு நிறுவனமாக நடத்த போலிக் கம்யூனிஸ்டுகள் முடிவு செய்தனர். இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யக் கோரி மாநில அரசு மன்றாடியும் கூட மத்திய அரசு இழுத்தடித்து வந்தது.

கல்கத்தாவில் உள்ள தரகு முதலாளி கோயங்காவும் மாநில அரசும் தலா 25% முதலீடு செய்வது; மீதியை பொதுமக்களிடம் பங்குகள் விற்றும், நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்றும் நிறுவுவது என்று முடிவாகிய ஹால்டியா திட்டம் ஆண்டுகள் பலவாகியும் ஒரு அடி கூட முன்னேறாமல் முடங்கிக் கிடந்தது.

பின்னர், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போலிக் கம்யூனிஸ்டுகள் இதையே பிரச்சாரம் செய்வார்களோ என்று பீதியடைந்தது பாசிச ராஜீவ் கும்பல். 13 ஆண்டு காலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படாமல், புறக்கணிக்கப்பட்ட ஹால்டியா பெட்ரோ - ரசாயன ஆலைத் திட்டத்துக்கு கடந்த அக்டோபர் 15ந் தேதியன்று ராஜீவ் அவசரமாக வந்து அடிக்கல் நாட்டினார். 2486 கோடி ரூபாய் செலவில் 'நாப்தா' ஆலை துவக்கும் திட்டத்துக்கு மத்திய அரசு விரைவில் நிதி ஒதுக்கீடு செய்யும் என்று நம்பச் சொன்னார்

ஆனால் ஒரு மாதமாகியும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. கடைசியில் இது தேர்தல் வெற்றியைக் குறி வைத்து ராஜீவ் கும்பல் நடத்திய நாடகம் என்று அம்பலமானது. இதற்கிடையே ராஜீவ் கும்பல் தனது கூட்டாளியும் மோசடித் தரகுப் பெருமுதலாளியுமான அம்பாணிக்கு ஹால்டியா திட்டத்தை தாரை வார்க்கும் சதிகளில் இறங்கியது.

''ஹால்டியா திட்டம் மிகப் பெரியது. ஒரு தனியார் முதலாளி மட்டும் பங்குதாரராக இருந்து இதை நிறைவேற்ற சாத்தியமில்லை'' என்று பெட்ரோ - ரசாயனத் துறை செயலாளரான கானும், ராஜீவின் பொருளாதார ஆலோசகரான அலுவாலியாவும் அரசுக்கு அறிக்கை கொடுத்தனர். இந்த நோக்கத்துடனேயே ராஜீவ் அரசு ஹால்டியா ஆலைத் திறனை ஆண்டுக்கு 1.4 லட்சம் டன்னிலிருந்து 3 லட்சம் டன்னாக திட்டமிட்டே உயர்த்தியது. மேலும் சில பங்குதாரர்களைச் சேர்த்துக் கொண்டு திட்டத்தை செயல்படுத்துமாறு மாநில அரசைக் கோரியது.

அடுத்தகட்டமாக, மாநில அரசை இதற்கு சம்மதிக்க வைப்பதற்கான பேரங்கள் நடக்க ஆரம்பித்தன. போலிக் கம்யூனிஸ்டு முதல்வர் ஜோதிபாசுவின் மகன் சந்தன்பாசு இந்த பேரத்தில் முக்கிய பங்காற்றிய பிறகு கேட்க வேண்டுமா? பூடா சிங் மகனுடைய உதவியுடன் அம்பாணியை அழைத்துக் கொண்டு ஜோதிபாசுவுடன் பேரம் நடத்தினார் சந்தன்பாசு. அதன் பிறகு பம்பாய் தாஜ்மஹால் ஐந்து நட்சத்திர ஓட்டலில் அம்பாணி அளித்த விருந்தில் கிறங்கிப் போன ஜோதிபாசு அம்பாணியின் தோளோடு தோள் சேர்ந்து தோழனாகிப் போனார். உடனே ஒன்றுக்கும் மேற்பட்ட தனியார் முதலாளிகளை பங்குதாரர்களாகக் கொண்டதாக, ஹால்டியா திட்டம் விரிவுபடுத்தப் பட்டுள்ளதாக அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து கல்கத்தாவின் முகுந்த் கம்பெனியின் முதலாளியும் பாரதீய ஜனதா கட்சியின் ஆதரவாளருமான விரேன்ஷா, தொழிலதிபர்கள் மிட்டால், கைத்தான் ஆகியோர் தங்களையும் பங்குதாரர்களாக சேர்த்துக் கொள்ளுமாறு மே.வங்க நிதிமந்திரி அசிம்தாஸ் குப்தாவிடம் முறையிட்டனர். ஆனால் அம்பாணிக்கு அதிக பங்குகளைக் கொடுத்து ஹால்டியா திட்டத்தையே தாரை வார்த்துவிட்டு அற்ப பங்குகளை இதர முதலாளிகளுக்கு போலிக் கம்யூனிஸ்டுகள் ஒதுக்கினர். காத்திருந்தவனின் காதலியை நேற்று வந்தவன் மணம் முடித்த கதையாக, திடீரென வந்த அம்பாணி ஹால்டியா திட்டத்தையே விழுங்கியதைக் கண்டு, துவக்கத்தில் இத்திட்டத்தின் ஒரே பங்குதாரராக இருந்த கோயங்கா நிதி மந்திரியிடம் இதை எதிர்த்து முறையிட்டார். ''உங்களுக்கு ஹால்டியா திட்டத்தில் பங்கு வேண்டுமென்றால் அம்பாணியுடன் இசைந்து செல்லுங்கள்'' என்று நிதிமந்திரி அசிம்தாஸ் குப்தா அவருக்கு அறிவுரை வழங்கினார்.

இதில் கொடுமை என்னவென்றால், அம்பாணி ஏற்கனவே குஜராத்தில் நிறுவியுள்ள ரசாயன ஆலையிலிருந்து 'எதிலீன்' எனும் பெட்ரோ - ரசாயனப் பொருளை இறக்குமதி செய்யப் போகிறார். ஹால்டியாவில் அதை தயாரிக்கப் போவதில்லை. இது தொழில் விதிமுறைகளுக்கே எதிரானது என்று இதர முதலாளிகள் எதிர்ப்பு தெரிவித்தும்கூட போலிக் கம்யூனிஸ்டுகள் இதை ஏற்காமல், அம்பாணிக்கு சேவை செய்வதிலேயே குறியாய் இருந்தனர்.

பாரதீய ஜனதாவும், விரேன்ஷாவும் போலிக் கம்யூனிஸ்டுகளின் முடிவை எதிர்த்து அம்பலப்படுத்த துவங்கியதும், ''இது அரசும் தனியார் முதலாளியும் இணைந்து நடத்தும் கூட்டுப் பங்கு நிறுவனம். தனியார் முதலாளி தரப்பில் கோயங்கா வந்தாலென்ன, அம்பாணி வந்தாலென்ன? எல்லாம் எங்களுக்கு ஒன்றுதான்'' என்று விபச்சாரத்தனமாக நியாயம் சொல்கின்றனர், போலிக் கம்யூனிஸ்டுகள். ஆனால் மே.வங்க அரசு உயரதிகாரிகள், அரசு செயலர், நிதித் துறை செயலர் ஆகியோர் அம்பாணியின் ஆதிக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து விவகாரம் பெரியதானவுடன், ஜோதிபாசுவும், நிதிமந்திரியும் பிரதமர் வி.பி.சிங்கை சந்தித்து சரிகட்டும் வேலையில் இறங்கியுள்ளனர். போலிக் கம்யூனிஸ்டுகளின் தயவில் ஆட்சி நடத்தும் தேசிய முன்னணி அரசு இதற்கு இணங்கிப் போவதைத் தவிர வேறுவழியில்லை. ஆக, ஹால்டியா திட்டம் கோயங்கா மற்றும் மே.வங்க அரசின் கூட்டுப்பங்கு நிறுவனமாக இனிமேல் இருக்கப் போவதில்லை. அது போலிக் கம்யூனிஸ்டுகளின் உதவியால் அம்பாணியின் சொத்தாக மாற்றப்பட்டுவிட்டது என்பதே இன்றைய நிலை.

போலிக் கம்யூனிஸ்டுகளின் சேவையைக் கண்டு, 'இடது' பக்கமாகச் செல்வது சாலை போக்குவரத்துக்கு மட்டுமின்றி, தமது தொழில் ஆதிக்கத்துக்கும் பாதுகாப்பானது என்று இப்போது அம்பாணி போன்ற பகாசுர தரகு முதலாளிகள் நன்றாகவே உணர்ந்துள்ளனர். கிழக்கு ஐரோப்பாவில் பன்னாட்டு பகாசுர முதலாளிகளுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து கம்யூனிச துரோகிகள் வரவேற்கும்போது, அவர்களின் தோழர்களான இந்தியக் கம்யூனிஸ்டுகளும் பகாசுர தரகு முதலாளிகளுக்கு சேவை செய்யாவிட்டால், அப்புறம் சர்வதேசியம் என்னாவது?

■ மனோகரன்

ஆர்.பி.கோயங்கா



ஜோதிபாசு



அம்பாணி



படிப்பகம்

www.padippakam.com

# ஆணவமிக்க போலீசு கும்பலை அடிபணிய வைத்த போராட்டம்!



திருச்சி நேரு சிலை தகர்ப்பு சம்பந்தமாக திருச்சி ம.க.இ.க. தோழர்கள் மீது அரசும் ஓட்டுக் கட்சிகளும் பத்திரிக்கைகளும் கூட்டாக செய்த பொய்ப் பிரச்சாரத்தையும், போலீசின் கைது நடவடிக்கையையும் அம்பலப்படுத்தியும், பொன்மலை பணிமனையில் நிர்வாகத்தின் அதிகார அத்துமீறல்களை எதிர்த்தும் கடந்த 18.12.89 அன்று மாலை 4.30 மணியளவில் தொழிலாளர் பிரச்சாரக்குழு பொன்மலையில் பொதுக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தது. பகுதி காவல் நிலையத்தின் சப்-இன்ஸ்பெக்டரோ தனது ஏவல் நாய்களை அனுப்பி ஒலிபெருக்கி உரிமையாளரை அழைத்துவரச் சொல்லி, "இந்தப் பொதுக் கூட்டத்திற்கு ஒலிபெருக்கி வைக்க அனுமதி இல்லை; மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளரைப் போய் பார்த்துக்கொள்!" என்று கூறினார். ஒலிபெருக்கி உரிமையாளர் அதன்படி மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளரை சந்தித்தபோது, "அவர்களெல்லாம் தீவிரவாதிகள்; எனவே நீ அவர்களுக்கு ஒலிபெருக்கி அமைத்துத் தரக்கூடாது" என்று மிரட்டினார். இதனால் ஒலிபெருக்கி உரிமையாளர் தனது சாமான்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டார். தொ.பி.கு. அமைப்பாளர் தோழர் முருகானந்தமும், மற்றும் பிற தோழர்களும் ஒலிபெருக்கி இல்லாமல் கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து அதன்படி கூட்டம் சரியாக அறிவிக்கப்பட்டிருந்த நேரத்திற்கு ஆரம்பமானது. அந்நேரத்தில் பகுதி காவல்நிலைய சப்-இன்ஸ்பெக்டர் அங்கு வந்து தோழர் முருகானந்தத்திடம் "கூட்டம் நடத்த அனுமதி இல்லை, மீறி நடத்தினால் கைது செய்யப்படுவீர்கள்" என்று கூறினார்.

அமைப்பாளர் முருகானந்தம் பொதுக் கூட்ட அறிவிப்பைக் கேட்டு 300க்கும் மேற்பட்ட மக்கள் திரண்டுள்ளார்கள். எனவே அவர்களுக்கு • எங்களுடைய கருத்தை கூற வேண்டியுள்ள பொறுப்பு எங்களுக்கு உள்ளது. ஆகவே இந்தக் கூட்டத்தை நடத்துகிறோம்" என்று கூறிவிட்டு கூட்ட நிகழ்ச்சியை துவக்கினார். தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தியபின், அடுத்தபடியாக "கூட்டம் நடத்த அனுமதி கேட்டால் மைக்கைப் பிடுங்கிறான்" என்ற ம.க.இ.க. கலைக்குழுவினர் பாடிய பாடல் மிகவும் பொருத்தமாக அமைந்து மக்களால் வரவேற்கப்பட்டது. கூட்டம் சுமார் 5.45 மணிக்கு முடிக்கப்பட்டது. அதற்கு 15 நிமிடத்திற்கு முன்பாகவே போலீஸ் நாய்கள் கலைக்குழுத் தோழர்களையும், தோழர் முருகானந்தத்தையும் கைது செய்வதற்காக வந்துக் காத்திருந்தது.

தோழர் முருகானந்தத்திடம் "நீங்கள் அனுமதி இல்லாமல் கூட்டம் நடத்தியுள்ளீர்கள் உங்களைக் கைது செய்கிறோம். காவல்நிலையத்திற்கு வாருங்கள்" என்று கூறினார்கள். அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும் பொதுமக்களும் "அவர்கள் செய்த குற்றம் என்ன? அவர்களை ஏன் இப்படி நடத்துகிறீர்கள்" என்று கேட்டார்கள். கைது செய்யப்பட்ட தொ.பி.கு. அமைப்பாளர் முருகானந்தம் மற்றும் கலைக்குழு தோழர்கள் வழி நெடுகிலும் "போலீசின் அடக்குமுறை, அராஜகம் ஒழிக!" என்று முழக்கமிட்டுக் கொண்டே சென்றனர். தோழர்களைத் தொடர்ந்து 200க்கும் மேற்பட்ட பகுதிவாழ் பொது மக்களும், தொழிலாளர்களும் காவல் நிலையத்திற்கு சென்று "அவர்களை கைது செய்துள்ளீர்களே, இவர்கள் செய்த குற்றம் என்ன?" என்று கேள்விகள் கேட்க ஆரம்பித்தவுடன், காவல்நிலைய சப்-இன்ஸ்பெக்டர் விழிபிதுங்கி, செய்வதறியாது தொலைபேசி மூலமாக தனது மேல் அதிகாரிகளுடன் என்ன முடிவெடுப்பது என்று கலந்தாலோசித்துவிட்டு தோழரிடம் வந்து, "அனுமதி இல்லாமல் பொதுக்கூட்டம் நடத்தியது தவறு, இனிமேல் அப்படி செய்ய மாட்டோம்" என்று எழுதிக் கொடுத்துவிட்டுச் செல்லுமாறு நைச்சியமாக பேசினார். அதற்கு தோழர் முருகானந்தம் "இனிமேல் கூட்டம் நடத்தப் போலீஸ் கண்காணிப்பாளரிடம் அனுமதி பெற்று கூட்டத்தினை நடத்துகிறேன்" என்று எழுதிக் கொடுத்துவிட்டு, தோழர்களை உடன் அழைத்துக் கொண்டு வந்துவிட்டார். அதுவரையில் திரண்டிருந்த பொதுமக்கள் காவல் நிலையத்தில் இருந்தபடியே, தோழர்களுக்கு ஆதரவாக காவல்துறையைச் சாடிக் கொண்டிருந்தது மிகவும் பாராட்டக் கூடியதாக இருந்தது.

புரட்சிகர அரசியலும், போர்க் குணமும், மக்கள் ஆதரவும் உள்ள எந்த ஒரு இயக்கத்தாலும் ஆணவமிக்க அதிகார வர்க்கத்தை அடிபணிய வைக்க முடியும் என்பதை இந் நிகழ்ச்சி நிரூபித்துக் காட்டுவதாக அமைந்தது.

தகவல்: தொழிலாளர் பிரச்சாரக் குழு, பொன்மலை கிளை

## கைதான தோழர்கள் விடுதலை! தொடர்கிறது அடக்குமுறையின் நிழல்!

தஞ்சை நினைவுத் தூண் தகர்ப்பையொட்டி கடந்த டிசம்பர் 9ந் தேதியன்று கைது செய்யப்பட்ட மக்கள் கலை இலக்கிய கழக மாநில பொருளாளர் தோழர் காளியப்பன் மற்றும் பிற தோழர்கள் ஒருவார காலத்திற்குப் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்து ஒருவார காலமாகியும் ஆதாரம் - வழக்கு ஏதுமின்றி விசாரணை என்ற பெயரில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தோழர் காளியப்பன், "ஒன்று, வழக்கு போடு! இல்லையேல் விடுதலை செய்!" என்று எச்சரித்து உண்ணாவிரதத்தை துவக்கினார். அவதூறு - சதிக் குற்றம் சாட்டி போலீசும் பத்திரிக்கைகளும் கட்டவிழ்த்துவிட்ட பொய்ப் பிரச்சாரத்தை எதிர்த்து புரட்சிகர இயக்கங்கள் மேற்கொண்ட பிரச்சார இயக்கத்தினால் முற்றாக அம்பலப்பட்டதாலும், கைது செய்யப்பட்ட தோழர்கள் உறுதியாக நின்றதாலும் நிலைமை விபரீதமாகிவிடுமோ என்று பீதியடைந்த போலீசு கும்பல், வேறு வழியின்றி தோழர்களை விடுவித்துள்ளது.

சிலை - சின்னம் தகர்ப்பை சாக்காக வைத்து புரட்சிகர இயக்கங்களை ஒடுக்க போதிய தடயங்கள் - ஆதாரங்கள் இல்லாத போதிலும் கூட, போலீசு கும்பலுக்கு இது கௌரவப் பிரச்சினையாக இருப்பதால் பொய் வழக்கு சோடிக்க தொடர்ந்து முயற்சித்து வருகிறது. தோழர்களது வீடுகளைச் சூறையாடி, அபகரித்துச் சென்ற புத்தகங்கள் மற்றும் பிற பொருட்களை போலீசு கும்பல் இன்றுவரை திருப்பித் தரவில்லை. போலீசின் சதிகளை அம்பலப்படுத்தி பொதுக்கூட்டம் நடத்த அனுமதி மறுத்து, ஒலி பெருக்கியின்றி கூட்டம் நடத்திய தோழர்களை இழுத்துச் சென்று பீதியூட்டியது. தமிழகமெங்கும் புரட்சிகர இயக்கத் தோழர்களை விசாரணை என்ற பெயரில் மிரட்டியது. இப்போது தோழர்கள் விடுவிக்கப்பட்ட போதிலும் அடக்குமுறையின் நிழல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

சதிக் குற்றம் சாட்டி போலீசு கும்பல் கைது செய்து பீதியூட்டி மிரட்டிய போதிலும், எவ்வித சமரசத்துக்கும் இடமின்றி உறுதியுடன் நின்று, போராளி டிமிட்ரோவின் வாரிசுகள் என்பதை நிரூபித்துக் காட்டிய தோழர்களுக்கு எமது புரட்சிகர வாழ்த்துக்கள்!

— ஆசிரியர் குழு

படிப்பகம்

www.padippakam.com


# இதுதான் இன்றைய இந்தியா



இதோ, இவர்கள் வைர வியாபாரிகளின் குலக்கொழுந்துகள். டிசம்பர் 21ந் தேதி மணம் முடித்துக் கொண்ட தம்பதிகள். ஆண்டுக்கு 600 கோடி ரூபாய்க்கு வைர வியாபாரம் செய்யும் பம்பாய் பரத் ஷாவின் மகள் ரஷ்மா, கிஷோர் மேத்தாவின் மகன் ராஜீவ் இவர்களின் திருணத்தின் விலை ரூ.30 கோடி! இந்தியாவில் சமகால வரலாற்றில் நடந்த மிகப் பெரும் திருமணம் இது என்று வர்ணிக்கப்படுகிறது.

திருமண அழைப்பிதழ் அட்டை ஒன்றின் மதிப்பு மட்டும் 500 ரூபாய்! பத்து பக்கங்களுக்கு 'ஆல்பம்' மாதிரி தயாரிக்கப்பட்டு, 10,000க்கும் மேற்பட்ட வர்த்தக, அரசியல், அதிகார வர்க்க பிரமுகர்களுக்கு அனுப்பப்பட்டது. அதனுடன் இலவச இணைப்பாக திருமண தேதி சொல்லும் தங்க வில்லைகள் இணைக்கப்பட்டது. ஆம்ஸ்ட்டர்டாம், நியூயார்க், டோக்கியோ, ஹாங்காங் என்று உலகின் பல பாகங்களிலிருந்தும் வைர வியாபாரிகள் வந்தனர்.

கோவாவில் அவர்களுக்கு தனி சொர்க்கலோகம் நிர்மாணிக்கப்பட்டது. பம்பாயின் மிகப்பெரும் விளையாட்டுத் திடலான வான்கேட் ஸ்டேடியம், மகாபாரதத்தில் வரும் அரசவை மண்டபமாக மாற்றப்பட்டது. திருமணத்திற்கென்று தனியாக இசைப்பாடல்கள், பலவித நடனங்கள் தயாரிக்கப்பட்டது. 10 நாட்கள் பம்பாய் நகரமே அதிர்ந்தது. தாஜ், ஓப்ராய் போன்ற ஐந்து நட்சத்திர ஓட்டல்கள், விருந்தினர்களின் கழிப்பிட வசதிக்காக மொத்தமாக வாடகைக்கு எடுக்கப்பட்டது.

இதோ, இவர்கள் ''திருமணமா? கறுப்புப்பண திருடர்கள் நடத்தும் சர்வதேச விளையாட்டா?'' என்று ஆவேசத்துடன் போராடும் பல்வேறு அரசியல் கட்சிகள், சமூகநல ஊழியர்கள்! இவர்களை ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதிக்காமல், பம்பாய் போலீசு குண்டாந்தடியால் தாக்கியது

விருந்துக்கு வநதிருந்த, தங்கத்தால் இழைத்த நாயகிகளும், நாயகர்களும் ஆர்ப்பாட்டக்காரர்களைப் பார்த்து நெளிந்தார்களாம்! வெடுக்கென முகத்தைத் திருப்பிக் கொண்டு முள்ளம்பன்றி மாதிரி உறுமினார்களாம்! ''கத்திக் கொண்டிருப்பவர்களுக்கு பரத்'பாய்' (மணமகளின் தந்தை) ஏதாவது போடக்கூடாதா?'' என்று தங்கள் திமிரை வாயில் ஒழுக விட்டார்களாம்!

போராட்டக்காரர்களுடன் திருமணம் நடத்தும் வைர வியாபாரிகளின் தொழிலாளர்களும் கலந்து கொண்டார்கள். வைரம் பட்டை தீட்டும் தொழிலாளிகளான அவர்கள் கூலி உயர்வு கேட்டதற்கு வெளியேற்றப்பட்டவர்கள். பம்பாயில் அரசியல் ஆதிக்கம் செலுத்தும் பாரதீய ஜனதா கட்சியும், சிவ சேனா இந்து மதவெறி அமைப்பும் இத்திருமணத்திற்கு முழு ஆதரவு கொடுத்தன.

ஒரு பக்கம் சிக்கனத் திருமணம் பற்றி வாய் கிழிய கூப்பாடு! மறுபக்கம் கறுப்புப் பண முதலைகள் கோடிக்கணக்கில் வாரியிறைத்து ஓட்டுப் பொறுக்கிகளின் ஆதரவுடன் நடத்தும் ஆடம்பர திருமணக் கூத்துக்கள்! இம்மக்கள் விரோதிகளின் கழுத்தில் நாம் கயிற்றை மாட்டுவது எப்போது?





படிப்பகம்